# T.P.M Sunday School



## Standard : 10



பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; நீதி:22:6

# TPM ஞாயிறுபள்ளி
## 10-ம் வகுப்பு பாடங்கள்

## I. பாடங்கள் (80 மதிப்பெண்கள்)

1. தூதர்களின் சேவை (பகுதி I)
2. தூதர்களின் சேவை (பகுதி II)
3. காலங்கள் (பகுதி I)
4. காலங்கள் (பகுதி II)
5. காலங்கள் (பகுதி III)
6. காலங்கள் (பகுதி IV)
7. ஆசரிப்புக் கூடாரம் (பகுதி I)
8. ஆசரிப்புக் கூடாரம் (பகுதி II) (வெளிப்பிராகாரம்)
9. ஆசரிப்புக் கூடாரம் (பகுதி III) (பரிசுத்த ஸ்தலம்)
10. ஆசரிப்புக் கூடாரம் (பகுதி IV) (மகா பரிசுத்த ஸ்தலம்)
11. ஆசரிப்புக் கூடாரம் (பகுதி V)
12. பண்டிகைகள் (பகுதி I)
13. பண்டிகைகள் (பகுதி II)
14. கிறிஸ்துவின் இரகசியம்
15. வசனத்தினால் பரிசுத்தமாக்கப்படுதல்
16. தெய்வீக சுகம் (பகுதி I)
17. தெய்வீக சுகம் (பகுதி II)
18. இஸ்ரவேல் ராஜ்யம் (பகுதி I)
19. இஸ்ரவேல் ராஜ்யம் (பகுதி II)
20. இஸ்ரவேல் ராஜ்யம் (பகுதி III)

# STD 10 (Memory Verse & Moral)

| L# | LESSON NAME | MEMORY VERSE | | MORAL |
|---|---|---|---|---|
| 1 | தூதர்களின் சேவை (பகுதி 1) | சங்கீதம் 8 : 4-8 | மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷ குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்.<br><br>நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்: மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்.<br><br>உம்முடைய கரத்தின் கிரியைகளின் மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்.<br><br>ஆடுமாடுகளெல்லாவற்றையும், காட்டு மிருகங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் சமுத்திரத்து மச்சங்களையும் கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர். | தேவதூதர்கள் தேவனுடைய சமூகத்தில் நிற்பவர்களாகவும் அதிக வல்லமையும் மகிமையும் உள்ளவர்களாகவும் இருந்தாலும், அவர்கள் பணிவிடை ஆவிகள் மாத்திரமே. மறு பக்கத்தில், மனிதனோ உலகத்தோற்றத்திற்கு முன்பிருந்தே தேவனுடைய மனதில் இருந்து வருகிறான். நாம் அவரோடுகூட நித்தியத்தில் ஆளுகை செய்ய வேண்டுமென்பதே நம்மைக் குறித்த தேவனுடைய திட்டமாகும். எனவே தேவனுடைய திட்டம் நம்மில் நிறைவேற்றப்படும்படியாக நாம் நம்மைத் தேவனுக்கு இணங்கி ஒப்புக்கொடுக்க வேண்டும். |
| 2 | தூதர்களின் சேவை (பகுதி 2) | மத்தேயு 18 : 10 | இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவர்களுக்குரிய தேவ தூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். | மனிதன்பால் தேவன் பாராட்டின அன்பு அவ்வளவு பெரிதாயிருந்ததால் அவர் அவனை சிருஷ்டிக்கும் முன்னதாகவே, மற்ற எல்லாவற்றையும், தூதர்களையும் கூட சிருஷ்டித்து தூதர்களை அவனுக்கு பணிவிடை ஆவிகளாக கொடுத்தார்.<br>அவனுடைய வழிகளில் அவனை காவல் செய்யும்படியாகவும் சகல தீமைகளினின்றும் அவனைப் பாதுகாக்கும்படியாகவும் அவர்கள் தேவனிடத்தில் கட்டளை பெற்றிருக்கிறார்கள். எனவே நாம் தேவனுக்கு நன்றி உள்ளவர்களாக இருக்க வேண்டும். (போதனை) |
| | | எபிரெயர் 1 : 14 | இரட்சிப்பை சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ் செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா? | |
| 3 | காலங்கள் (பகுதி 1) | 11 தீமோத்தேயு 1 : 9 | அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகால முதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார். | மனிதனுடைய ஆத்துமா விலையேறப்பெற்றதும் அழியாமையுள்ளதுமாகும். மனிதன் நித்திய சந்தோஷம் அல்லது நித்திய ஆக்கினை இவைகளிலொன்றில் பிரவேசிப்பான். தேவன் மனிதனில் அன்புகூர்ந்து அவனுக்கென்று நித்திய இரட்சிப்பை உண்டுபண்ணியிருக்கிறார். நாம் இதை உணர்ந்து நித்திய மகிழ்ச்சிக்காக நம்மை நாமே ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **4** | காலங்கள் (பகுதி 2) | சங்கீதம்103:20 | கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய வசனத்தின்படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே, அவரை ஸ்தோத்திரியுங்கள். | பாவஞ்செய்த தூதர்களையும், த்க்;ஈண்ப்ஹ கீழ்ப்படியாமையின் செய ன் நிமித்தம் பாவத்திற்குள்ளான முதலாவது மனுஷனாகிய ஆதாமையும் தேவன் தப்பவிடாதிருக்க, பூரணத்தின் உன்னத உபதேசங்களைப் பெற்றுக்கொண்டிருக்கும் நாம், இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்துக் கவலையற்றவர்களாயிருந்தால், நமக்கும் தப்பித்துக்கொள்ள மார்க்கமே இராது. எனவே, நாம் கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளாக நடந்து கொள்ள வேண்டும். |
| **5** | காலங்கள் (பகுதி 3) | லூக்கா 21:34-36 | உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும், வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்.<br><br>பூமியிலெங்கும் குடியிருக்கிற அனைவர்மேலும் அது ஒரு கண்ணியைப் போல வரும்.<br><br>ஆகையால் இனிச் சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள் என்றார். | பூரணமாக்கப்பட்ட தம்முடைய பரிசுத்தவான்களைச் சேர்க்கும்படியாக கர்த்தராகிய இயேசு சீக்கிரமாக வருகிறார். உலகத்தின் மீது வரவிருக்கும் மகா உபத்திரவத்திற்குத் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்பதற்குப் பாத்திரவான்களாய் எண்ணப்படுவதற்கு, நாம் எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருக்க வேண்டும். |
| **6** | காலங்கள் (பகுதி 4) | வெளி 21: 1-3 | பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று.<br><br>யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது.<br><br>மேலும், பரலோகத்தி- ருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். | ஆதாம், ஏதேன் தோட்டத்தில் தனக்கிருந்த ஆசீர்வாதங்களை இழந்த பின்னர் உலகில் பாவம், அக்கிரமம், அநீதி ஆகியவை பெருகிற்று. இருப்பினும், இப்போதும் கூட தேவனுடைய நோக்கம் மாறாததாய், அவர், தாம் தெரிந்து கொண்ட ஒரு கூட்டம் ஜனங்களுக்குள் கிரியை செய்துகொண்டிருக்கிறார். இப்போது கிருபையின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு ஆதாம் இழந்துபோன சகல ஆசீர்வாதங்களும் திரும்பத் தரப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **7** | ஆசரிப்புக் கூடாரம் (பகுதி 1) | பி- ப்பியர் 3:13,14 | சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லைஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி,<br><br>கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். | தேவன் நமக்கென வைத்திருக்கும் மிகவும் உன்னதமானவற்றையும், சிறந்தவற்றையும் நாம் அடைந்துகொள்ள விரும்பினால், அதற்கான கிரயத்தைக் செலுத்தவும் நம்முடைய சகல பூமிக்குரிய இலாபங்களையும் மேன்மைகளையும் மகிமையையும் விட்டுவிடவும் நாம் மனமுவந்திருக்க வேண்டும். |
| **8** | ஆசரிப்புக் கூடாரம் (பகுதி 2) (வெளிப்பிராகாரம்) | 1 தெச 4 : 3 – 7 | நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து,<br><br>தேவனை அறியாத அஞ்ஞானிகளைப் போல மோக இச்சைக்குட்படாமல்,<br><br>உங்களில் அவனவன் தன்தன் சரீரபாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து:<br><br>இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும் தன் சகோதரனை வஞ்சியாமலும் இருக்கவேண்டும் முன்னமே நாங்கள் உங்களுக்குச் சொல்லி, சாட்சியாக எச்சரித்தபடியே இப்படிப்பட்ட விஷயங்களெல்லாவற்றையுங்குறித்துக் கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவராயிருக்கிறார்.<br><br>தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். | நம் சரீரத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் காத்துக்கொண்டு தேவனுடைய சித்தம் செய்யும்படி நம்மை நாமே ஜீவபலியாக அவருக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும். |
| **9** | ஆசரிப்புக் கூடாரம் (பகுதி 3) (பரிசுத்த ஸ்தலம்) | எபிரெயர் 5 : 7 – 10 | அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு,<br>அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு,<br>தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி,<br>மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார். | *கர்த்தராகிய இயேசுவவைப் போல நாம் மற்றவர்களுக்கு அப்பமாகவும், உலகத்திற்கு வெளிச்சமாகவும், வல்லமையுள்ளதும் மேற்கொள்ளுகிறதுமான ஜெபத்தின் மூலம் ஜெயங்கொண்டவர்களாகவும் விளங்க வேண்டும்.* |
| **10** | ஆசரிப்புக் கூடாரம் (பகுதி 4) (மகா பரிசுத்த ஸ்தலம்) | எபிரெயர் 4 : 16 | ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். | *நாம் தேவனோடு நெருங்கிய ஐக்கியமுள்ள ஜீவியம் செய்து அவருடைய சமூகத்தில் தொடர்ந்து ஜீவிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.* |

| | | | | |
|---|---|---|---|---|
| **11** | ஆசரிப்புக் கூடாரம் (பகுதி 5) | 1 கொரி 1 : 27 - 2 | ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார். பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார்.<br>உள்ளவைகளை அவமாக்கும்படி உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும் , தேவன் தெரிந்து கொண்டார்.<br>மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமை பாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார். | மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாக பெருமைபாராட்டாதபடிக்கு பெலவீனரும் பைத்தியக்காரரும் அற்பமாய் எண்ணப்பட்டவர்களுமாகிய நம்மைத் தேவன் தெரிந்தெடுத்து பூரணத்தின் இப் பெரிய வேலையைச் செய்கிறார். அப்படிச் செய்கிறார். எனவே நாம் தேவனுக்கு சகல மகிமையையும் செலுத்தி, தாழ்மையாயிருக்கக் கற்றுக் கொள்வோமாக. |
| **12** | பண்டிகைகள் (பகுதி 1) | ஏசாயா 51 : 1 | *நீதியைப் பின்பற்றி, கர்த்தரைத் தேடுகிற நீங்கள் எனக்குச் செவி கொடுங்கள்' நீங்கள் வெட்டி எடுக்கப்பட்ட கன்மலையையும், நீங்கள் தோண்டி எடுக்கப்பட்ட துரவின் குழியையும் நோக்கிப் பாருங்கள்.* | |
| **13** | பண்டிகைகள் (பகுதி 2) | தீத்து 2 : 11 - 14 | ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபையானது பிரசன்னமாகி,<br><br>நாம் அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும், நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி,<br><br>நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது.<br><br>அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். | தேவனுடைய பிள்ளைகள் கர்த்தராகிய இயேசுவோடு என்றென்றுமாய் பேரின்பமாய் வாழ்வதற்குத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்வதற்காகப் பண்டிகைகள் யாவும் புதிய ஏற்பாட்டின் காலத்திற்கென்று பெரிதான ஆவிக்குரிய கருத்துடன் கர்த்தரால் நியமிக்கப்பட்டன. |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | கிறிஸ்துவின் இரகசியம் | எபேசியர் 3 : 3 - 7 | அதென்னவெனில் புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன் பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார்.<br>இதைக் குறித்து நான் முன்னமே சுருக்கமாய் எழுதியிருக்கிறேன்.<br>அதை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின் இரகசியத்தைக் குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்து கொள்ளலாம்.<br>இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது போல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை.<br>தேவனுடைய பலத்த சத்துவத்தால் எனக்கு அளிக்கப்பட்ட வரமாகிய அவருடைய கிருபையினாலே இந்தச் சுவிசேஷத்துக்கு ஊழியக்காரனானேன். | நாம் யாதொரு வித்தியாசமுமற்றவர்களாயிருக்கும்படி கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒன்றாக்கப்பட வேண்டும். அத்துடன் விசுவாசத்தினால் வாக்குத்தத்தங்களைப் பெற்றுக் கொள்ளப் பிரயாசப்பட்டு, பிசாசையும் மாம்சத்தையும் உலகத்தையும் ஜெயித்து, நித்தியத்தில் கர்த்தராகிய இயேசுவோடு உடன் சுதந்தரராய் ஆளுகை செய்ய வேண்டும் |
| 15 | வசனத்தினால் பரிசுத்தமாக்கப்படுதல் | யோவான் 17 : 14 | நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன் நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல் ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது. | *அன்றாடம் கர்த்தருடைய வசனத்தை வாசித்துத் தியானித்து, அவற்றினால் கிடைக்கும் வெளிப்படுத்தல்களுக்கு நம்மை ஒப்புக் கொடுத்து, தேவசித்தத்தை விளங்கிக் கொண்டவர்களாய் நாம் ஜீவிக்க வேண்டும். நாம் இதைச் செய்யும்போது கர்த்தருடைய வசனம் நம் சரீரம், ஆத்துமா, ஆவி ஆகியவற்றை முற்றிலும் பரிசுத்தமாக்கும்.* |
| | | யோவான் 17 : 17 | உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம். | |
| | | யோவான் 17 : 19 | அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன். | |
| 16 | தெய்வீக சுகம் (பகுதி 1) | மத்தேயு 8 : 16, 17 | அஸ்தமனமானபோது, பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள் அவர் அந்த ஆவிகளை தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார்.<br>அவர் தாமே, நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களை சுமந்தார் என்று ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது | தேவன் மனுஷனை உண்டாக்கியபொழுது, மருந்து அவருடைய திட்டத்தில் இருக்கவில்லை மனுஷனுக்குப் புசிக்கத் தேவையான ஆகாரத்தையும், குடிப்பதற்குத் தண்ணீரையும் மட்டுமே அவர் கொடுத்திருந்தார். மனுஷன் பாவம் செய்வதற்கு முன்பு, அவன் வியாதியாயிருந்ததில்லை. கல்வாரியின் மூலம் பாவத்திலிருந்து விடுதலை கிடைப்பதுபோல, பாவத்தின் பலனாகிய வியாதி சுகமாக்கப்படுவதற்கும் கர்த்தரின் கல்வாரி மரணம் போதுமானது. ஆதலால் வியாதிக்காக மருந்து நாடுவது தேவ ஆலோசனையல்ல |
| 17 | தெய்வீக சுகம் (பகுதி 2) | 1 பேதுரு 2 : 24 | நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் | தெய்வீக சுகம் மேஜையிலிருந்து விழும் வெறும் துணிக்கைகளல்ல. அது பிள்ளைகளின் அப்பமாயிருக்கிறது. எனவே நாம் தெய்வீக சுக சத்தியத்தைக் கவனமாய்க் கற்றுக்கொண்டு, சுகத்தை உரிமைபாராட்டிக் கேட்கும்படி நம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரோமர் 8 : 11 | அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார் | விசுவாசத்தைக் கட்டி எழுப்பவேண்டும். |
| **18** | இஸ்ரவேல் ராஜ்யம் (பகுதி 1) | உபாகமம் 4 : 7, 8 | நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது?<br><br>இந்நாளில் நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாயப்பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதியும் எது? | எல்லாவற்றிலும் நாம் தேவனுக்கு முதன்மையான இடத்தைக் கொடுத்து, நம் ஜீவியத்தை அவர் ஆளுகை செய்யும்படி அவரை ராஜாவாய் ஏற்றுக்கொள்ள வேண்டும். மாம்ச புயத்தின் மீது நாம் சார்ந்து கொள்ளக் கூடாது. |
| | | உபாகமம் 7 : 6 | நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார | |
| **19** | இஸ்ரவேல் ராஜ்யம் (பகுதி 2) | 2 நாளா. 16 : 9. | தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது; இந்த விஷயத்தில் மதியில்லாதவராயிருந்தீர்; ஆகையால் இதுமுதற்கொண்டு உமக்கு யுத்தங்கள் நேரிடும் என்றான | நாம் இஸ்ரவேல் புத்திரரைப் போலிராமல், கர்த்தருடைய வழிகள் எல்லாவற்றிலும் உத்தமமாய் நடந்து அவரோடு நாம் செய்திருக்கும் உடன்படிக்கையில் உறுதியுள்ளவர்களாயிருந்து அவரை விட்டுவிலகாதவாறு எச்சரிக்கையாயிருக்க வேண்டும். |
| **20** | இஸ்ரவேல் ராஜ்யம் (பகுதி 3) | யாத்திராகமம் 19 : 5, | இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள் பூமியெல்லாம் என்னுடையது.<br><br>நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டிய வார்த்தைகள் என்றார் | இஸ்ரவேலரைக் குறித்த தீர்க்கதரிசனங்களையெல்லாம் தேவன் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். அவர் நமக்குக் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தங்கள் யாவும்கூட கிறிஸ்து இயேசுவுக்குள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கின்றன. எனவே, நாம் விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் தேவனுடைய வாக்குத்தத்தங்களைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுவோமாக. |

# STD 10

L1 1. *யாத்திராகமம் 15:2*

கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர்; அவர் எனக்கு இரட்சிப்புமானவர்; அவரே என் தேவன், அவருக்கு வாசஸ்தலத்தை ஆயத்தம்பண்ணுவேன்; அவரே என் தகப்பனுடைய தேவன், அவரை உயர்த்துவேன்;

L1 2. *எண்ணாகமம் 23:23*

யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை; தேவன் என்னென்ன செய்தார் என்று கொஞ்சக்காலத்திலே யாக்கோபையும் இஸ்ரவேலையும் குறித்துச் சொல்லப்படும்.

L1 3. *உபாகமம் 1:31*

ஒரு மனிதன் தன் பிள்ளையைச் சுமந்துகொண்டு போவதுபோல, நீங்கள் இவ்விடத்திற்கு வருகிறவரைக்கும், நடந்துவந்த வழிகள் எல்லாவற்றிலும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சுமந்துகொண்டு வந்ததைக் கண்டீர்களே.

L1 4. *உபாகமம் 11:12*

அது உன் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கிற தேசம், வருஷத்தின் துவக்கமுதல் வருஷத்தின் முடிவுமட்டும் எப்பொழுதும் உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் அதின்மேல் வைக்கப்பட்டிருக்கும்.

L1 5. *உபாகமம் 29:9*

இப்பொழுதும் நீங்கள் செய்வதெல்லாம் உங்களுக்கு வாய்க்கும்படிக்கு, இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்வீர்களாக.

L1 6. *உபாகமம் 29:29*

மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்.

L1 7. *உபாகமம் 33:3*

மெய்யாகவே அவர் ஜனங்களைச் சிநேகிக்கிறார்; அவருடைய பரிசுத்தவான்கள் எல்லாரும் உம்முடைய கையில் இருக்கிறார்கள்; அவர்கள் உம்முடைய பாதத்தில் விழுந்து, உம்முடைய வார்த்தைகளினால் போதனையடைவார்கள்.

L2 8. *யோசுவா 1:8*

இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்.

L2 9. *ரூத் 2:12*

உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன்கிடைப்பதாக என்றான்.

L2 10. *II சாமுவேல் 22:33*

தேவன் எனக்குப் பலத்த அரணானவர்; அவர் என் வழியைச் செவ்வைப்படுத்துகிறவர்

L2 11. 1 நாளாகமம் 16:29

கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி, காணிக்கைகளைக் கொண்டுவந்து, அவருடைய சந்நிதியில் பிரவேசியுங்கள்; பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்.

L2 12. *I நாளாகமம் 29:11*

கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள்; கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது; தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்.

L2 13. *யோபு 9:4*

அவர் இருதயத்தில் ஞானமுள்ளவர், பெலத்தில் பராக்கிரமமுள்ளவர்; அவருக்கு விரோதமாகத் தன்னைக் கடினப்படுத்தி வாழ்ந்தவன் யார்?

L2 14. *சங்கீதம் 8:2*

பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டுபண்ணினீர்.

L3 15. *சங்கீதம் 9:9*

சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமானவர்; நெருக்கப்படுகிறகாலங்களில் அவரே தஞ்சமானவர்.

L3 16. *சங்கீதம் 11:4*

கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்; கர்த்தருடைய சிங்காசனம் பரலோகத்தில் இருக்கிறது; அவருடைய கண்கள் மனுபுத்திரரைப் பார்க்கிறது; அவருடைய இமைகள் அவர்களைச் சோதித்தறிகிறது.

L3 17. *சங்கீதம் 16:11*

ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்தியபேரின்பமும் உண்டு.

L3 18. *சங்கீதம் 18:23*

அவர் முன்பாக நான் மனவுண்மையாயிருந்து, என் துர்க்குணத்துக்கு என்னை விலக்கிக்காத்துக்கொண்டேன்.

L3 19. *சங்கீதம் 19:14*

என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.

L3 20. *சங்கீதம் 22:23*

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, அவரைத் துதியுங்கள்; யாக்கோபின் சந்ததியாரே, நீங்கள் எல்லாரும் அவரைக் கனம்பண்ணுங்கள்; இஸ்ரவேலின் வம்சத்தாரே, நீங்கள் எல்லாரும் அவர்பேரில் பயபக்தியாயிருங்கள்.

L3 21. *சங்கீதம் 27:14*

கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு.

L4 22. *சங்கீதம் 31:19*

உமக்குப் பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும், நீர் உண்டு பண்ணிவைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது!

L4 23. *சங்கீதம் 34:8*

கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

L4 24. *சங்கீதம் 36:9*

ஜீவஊற்று உம்மிடத்தில் இருக்கிறது; உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம்.

L4 25. *சங்கீதம் 37:23*

நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார்.

L4 26. *சங்கீதம் 40:3*

நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார், அநேகர் அதைக் கண்டு, பயந்து, கர்த்தரை நம்புவார்கள்.

L4 27. *சங்கீதம் 48:14*

இந்தத் தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்.

L4 28. *சங்கீதம் 50:23*

ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்; தன் வழியைச் செவ்வைப்படுத்துகிறவனுக்கு தேவனுடைய இரட்சிப்பை வெளிப்படுத்துவேன் என்று சொல்லுகிறார்.

L5 29. *சங்கீதம் 56:9*

நான் உம்மை நோக்கிக் கூப்பிடும் நாளில் என் சத்துருக்கள் பின்னிட்டுத் திரும்புவார்கள்; தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் என்பதை அறிவேன்.

L5 30. *சங்கீதம் 65:4*

உம்முடைய பிராகாரங்களில் வாசமாயிருக்கும்படி நீர் தெரிந்துகொண்டு சேர்த்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்; உம்முடைய பரிசுத்த ஆலயமாகிய உமது வீட்டின் நன்மையால் திருப்தியாவோம்.

L5 31. *சங்கீதம் 69:33*

கர்த்தர் எளியவர்களின் விண்ணப்பத்தைக் கேட்கிறார், கட்டுண்ட தம்முடையவர்களை அவர் புறக்கணியார்.

L5 32. *சங்கீதம் 70:4*

உம்மைத் தேடுகிற யாவரும் உம்மில் மகிழ்ந்து சந்தோஷப்படுவார்களாக; உமது இரட்சிப்பில் பிரியப்படுகிறவர்கள் தேவனுக்கு மகிமையுண்டாவதாக என்று எப்பொழுதும் சொல்வார்களாக.

L5 33. *சங்கீதம் 84:2*

என் ஆத்துமா கர்த்தருடைய ஆலயப்பிரகாரங்களின்மேல் வாஞ்சையும் தவனமுமாயிருக்கிறது; என் இருதயமும் என் மாம்சமும் ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கெம்பீர சத்தமிடுகிறது.

L5 34. *சங்கீதம் 86:11*

கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதியும், நான் உமது சத்தியத்திலே நடப்பேன்; நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி என் இருதயத்தை ஒருமுகப்படுத்தும்.

L5 35. *சங்கீதம் 87:5*

சீயோனைக்குறித்து, இன்னான் இன்னான் அதிலே பிறந்தானென்றும் சொல்லப்படும்; உன்னதமானவர் தாமே அதை ஸ்திரப்படுத்துவார்.

L6 36. *சங்கீதம் 91:7*

உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது.

L6 37. *சங்கீதம் 91:10*

ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது.

L6 38. *சங்கீதம் 96:13*

அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார், அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார்.

L6 39. *சங்கீதம் 101:7*

கபடுசெய்கிறவன் என் வீட்டுக்குள் இருப்பதில்லை; பொய்சொல்லுகிறவன் என் கண்முன் நிலைப்பதில்லை.

L6 40. *சங்கீதம் 102:16*

திக்கற்றவர்களுடைய ஜெபத்தை அலட்சியம்பண்ணாமல், அவர்கள் விண்ணப்பத்தை அங்கீகரிப்பார்.

*சங்கீதம் 119:113*

L6 41. வீண் சிந்தனைகளை நான் வெறுத்து, உமது வேதத்தில் பிரியப்படுகிறேன்.

*சங்கீதம் 122:7*

L6 42. உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும், உன் அரமனைகளுக்குள்ளே சுகமும் இருப்பதாக.

*சங்கீதம் 126:5*

L7 43. கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்.

*சங்கீதம் 128:5*

L7 44. கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்; நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய்.

*சங்கீதம் 145:8*

L7 45. கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர்.

L7 46. *சங்கீதம் 145:18*

தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.

L7 47. *சங்கீதம் 147:11*

தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

# STD 10

L7 48. *நீதிமொழிகள் 11:20*

மாறுபாடுள்ள இருதயமுடையவர்கள் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்; உத்தம மார்க்கத்தாரோ அவருக்குப் பிரியமானவர்கள்.

L7 49. *நீதிமொழிகள் 11:31*

இதோ, நீதிமானுக்கு பூமியில் சரிக்கட்டப்படுமே; துன்மார்க்கனுக்கும் பாவிக்கும் எத்தனை அதிகம்.

L8 50. *நீதிமொழிகள் 12:22*

பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்; உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்.

L8 51. *நீதிமொழிகள் 13:3*

தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான்; தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான்.

L8 52. *நீதிமொழிகள் 13:13*

திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான்; கற்பனைக்குப் பயப்படுகிறவனோ பலனடைவான்.

L8 53. *நீதிமொழிகள் 14:1*

புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்; புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப்போடுகிறாள்.

L8 54. *நீதிமொழிகள் 14:30*

சொஸ்தமனம் உடலுக்கு ஜீவன்; பொறாமையோ எலும்புருக்கி.

L8 55. *நீதிமொழிகள் 16:6*

கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவிர்த்தியாகும்; கர்த்தருக்குப் பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள்.

L8 56. *நீதிமொழிகள் 16:18*

அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை.

L8 57. *நீதிமொழிகள் 16:32*

பலவானைப்பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்.

L8 58. *நீதிமொழிகள் 24:9*

தீயநோக்கம் பாவமாம்; பரியாசக்காரன் மனுஷருக்கு அருவருப்பானவன்.

L9 59. *பிரசங்கி 7:2*

விருந்துவீட்டுக்குப் போவதிலும் துக்கவீட்டுக்குப் போவது நலம்; இதிலே எல்லா மனுஷரின் முடிவும் காணப்படும்; உயிரோடிருக்கிறவன் இதைத் தன் மனதிலே சிந்திப்பான்.

L9 60. *பிரசங்கி 10:1*

செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளதைலத்தை நாறிக் கெட்டுப்போகப்பண்ணும்; ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும்.

**L9** 61. *பிரசங்கி 12:14*

ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்.

**L9** 62. *உன்னதப்பாட்டு 6:10*

சந்திரனைப்போல் அழகும், சூரியனைப்போல் பிரகாசமும், கொடிகள் பறக்கும் படையைப்போல் கெடியுமுள்ளவளாய், அருணோதயம்போல் உதிக்கிற இவள் யார்?

**L9** 63. *ஏசாயா 1:26*

உன் நியாயாதிபதிகளை முன்னிருந்ததுபோலவும், உன் ஆலோசனைக்காரரை ஆதியில் இருந்தது போலவும் திரும்பக் கட்டளையிடுவேன்; பின்பு நீ நீதிபுரம் என்றும், சத்தியநகரம் என்றும் பெயர்பெறுவாய்.

**L9** 64. *ஏசாயா 9:6*

நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்.

**L9** 65. *ஏசாயா 11:2*

ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்.

**L10** 66. *ஏசாயா 35:8*

அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை.

**L10** 67. *ஏசாயா 40:31*

கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.

**L10** 68. *ஏசாயா 41:17*

சிறுமையும் எளிமையுமானவர்கள் தண்ணீரைத் தேடி, அது கிடையாமல், அவர்கள் நாவு தாகத்தால் வறளும்போது, கர்த்தராகிய நான் அவர்களுக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேலின் தேவனாகிய நான் அவர்களைக் கைவிடாதிருப்பேன்.

**L10** 69. *ஏசாயா 43:2*

நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினிஜுவாலை உன்பேரில் பற்றாது.

**L10** 70. *ஏசாயா 44:6*

நான் முந்தினவரும், நான் பிந்தினவருந்தானே; என்னைத்தவிரத் தேவன் இல்லையென்று, இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தரும், சேனைகளின் கர்த்தராகிய அவனுடைய மீட்பரும் சொல்லுகிறார்.

**L10** 71. *ஏசாயா 52:1*

எழும்பு, எழும்பு, சீயோனே, உன் வல்லமையைத் தரித்துக்கொள்; பரிசுத்த நகரமாகிய எருசலேமே, உன் அலங்கார வஸ்திரங்களை உடுத்திக்கொள்; விருத்தசேதனமில்லாதவனும் அசுத்தனும் இனி உன்னிடத்தில் வருவதில்லை.

**L10** 72. *ஏசாயா 54:5*

உன் சிருஷ்டிகரே உன் நாயகர்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம், இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் மீட்பர், அவர் சர்வபூமியின் தேவன் என்னப்படுவார்.

**L11** 73. *தானியேல் 12:2*

பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்.

**L11** 74. *செப்பனியா 3:15*

கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார்; இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார்; இனித் தீங்கைக் காணாதிருப்பாய்.

**L11** 75. *மத்தேயு 5:20*

வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

**L11** 76. *மத்தேயு 6:33*

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.

**L11** 77. *மத்தேயு 12:36*

மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

**L11** 78. *லூக்கா 6:33*

உங்களுக்கு நன்மைசெய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மைசெய்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் அப்படிச் செய்கிறார்களே.

**L11** 79. *யோவான் 3:5*

இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.

**L12** 80. *யோவான் 12:48*

என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்.

**L12** 81. *யோவான் 16:13*

சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.

L12 82. அப்போஸ்தலர் 1:8

பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.

L12 83. *அப்போஸ்தலர் 10:38*

நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்.

L12 84. *ரோமர் 8:6*

மாம்சசிந்தை மரணம்: ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.

L12 85. *ரோமர் 13:12*

இரவு சென்றுபோயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின்கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம்.

L12 86. *கலாத்தியர் 6:14*

நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்.

L13 87. *எபேசியர் 4:29*

கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்த புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்.

L13 88. *எபேசியர் 6:13*

ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.

L13 89. *பிலிப்பியர் 3:3*

மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்.

L13 90. *கொலோசெயர் 3:13*

ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

L13 91. *கொலோசெயர் 3:15*

தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்.

L13 92. *2 தீமோத்தேயு 3:12*

அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.

L13 93. *யாக்கோபு 5:8*

நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே.

L14 94. *1 யோவான் 3:16*

அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்.

L14 95. *1 யோவான் 3:22*

அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்குமுன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம்.

L14 96. *வெளி 19:8*

சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே.

L14 97. *வெளி 20:15*

ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்.

L14 98. *வெளி 21:8*

பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்.

L14 99. *வெளி 21:27*

தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்.

L14 100. *வெளி 22:17*

ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்.

# *10 - ஆம் வகுப்பு - விசேஷித்த வேத பகுதி வாசிப்பு - நாட்காட்டி*

| பாடம் | வசனக் குறிப்புகள் | வசன எண்ணிக்கை | உள்ளடக்கத்தின் சுருக்கம் |
|---|---|---|---|
| L 1 | தானியேல் 1: 1 - 7 | 7 | பாகம் 1: தனியேலின் வரலாறு<br>I. தானியேல் பாபிலோனுக்கு கொண்டு போகப்பட்டது |
| L 1<br>L1 | தானியேல் 1: 8 - 16<br>தானியேல் 1: 17 - 21 | 9<br>5 | II. பாபிலோனில் தானியேலின் உண்மை<br>III. பாபிலோனில் தானியேலுக்கு இருந்த மதிப்பு |
| | | | பாகம் 2: புறஜாதியாருக்குரிய தீர்க்கதரிசன திட்டம்<br>I. நேபுகாத்நேச்சார் சொப்பணம் |
| L 2<br>L2 | தானியேல் 2: 1 - 13<br>தானியேல் 2: 14 – 23 | 13<br>10 | A. நேபுகாத்நேச்சாரின் சொப்பணத்தை மறைத்தது<br>B. தேவன் சொப்பணத்தை வெளிப்படுத்தியது |
| L 3<br>L3 | தானியேல் 2: 24 - 45<br>தானியேல் 1: 46 – 49 | 22<br>4 | C. தானியேல் சொப்பணத்தின் அர்த்தத்தை கூரியது<br>D. தானியேல் நேபுகாத்நேச்சாரால் உயர்த்தப்பட்டது |
| L4 | தானியேல் 3: 1 - 17 | 7 | II. நேபுகாத்நேச்சாரின் பொற்சிலை<br>A. நேபுகாத்நேச்சார் சிலையை பண்ணுவித்தது |
| L 4<br>L5 | தானியேல் 3: 8 - 12<br>தானியேல் 3: 13 - 18 | 5<br>6 | B. தானியேலின் தோழர்கள் ஆராதிக்க மறுத்தல்<br>C. தானியேலின் தோழர்கள் மேல் நம்பிக்கை |
| L 5<br>L5 | தானியேல் 3: 19 - 25<br>தானியேல் 3: 26 -30 | 7<br>5 | D. தானியேலின் தோழர்கள் பாதுகாக்கப்பட்டது<br>E. தானியேலின் தோழர்கள் உயர்த்தப்பட்டது<br>III. நேபுகாத்நேச்சார் கண்ட பெரிய விருட்சத்தை பற்றிய தரிசனம் |
| L 6<br>L6 | தானியேல் 4: 1 - 3<br>தானியேல் 4: 4 – 18 | 3<br>15 | A. நேபுகாத்நேச்சாரின் அறிவிப்பு<br>B. நேபுகாத்நேச்சாரின் தரிசனம் |
| L 7<br>L7 | தானியேல் 4: 19 -27<br>தானியேல் 4: 28 – 33 | 9<br>6 | C. தானியேல் கூரிய தரிசனத்தின் அர்த்தம்<br>D. நேபுகாத்நேச்சார் தாழ்ப்பட்டது |
| L 7 | தானியேல் 4: 34 - 37 | 4 | E. நேபுகாத்நேச்சார் திரும்பவும் உயர்த்தப்பட்டது<br>IV. பெல்ஷாத்தரும் சவரில் எழுதப்பட்ட கையுறுப்பு |
| L 8<br>L8 | தானியேல் 5: 1 - 4<br>தானியேல் 5: 5 -9 | 4<br>5 | A. ஆலயத்தின் பாத்திரங்களை பெல்ஷாத்தர் தீட்டுப்படுத்தியது<br>B. பெல்ஷாத்தார் கையுறுப்பை பார்த்தது |
| L 9<br>L9 | தானியேல் 5: 10 -29<br>தானியேல் 5: 30 - 31 | 1<br>3 | C. தானியேல் அந்த எழுத்தின் அர்த்தை கூறியது<br>D. பெல்ஷாத்தார் கொல்லப்பட்டது |
| L10 | தானியேல் 6: 1 -3 | 3 | V. தரியுவின் மதிகேடான கட்டளை<br>A. தானியேல் உயர்த்தப்பட்டது |
| L 10<br>L11 | தானியேல் 6: 4 - 9<br>தானியேல் 6: 10 – 15 | 6<br>6 | B. தரியு கட்டளைக்கு கையெழுத்திட்டது<br>C. தானியேலின் உண்மையான ஜெபம் |
| L 11<br>L11 | தானியேல் 6: 16 -24<br>தானியேல் 6: 25 – 28 | 9<br>5 | D. சிங்களின் கெபியிலிருந்து தானியேல் பாதுகாக்கப்பட்டது<br>E. தரியு ஞானமுள்ள கட்டளை |
| L12 | தானியேல் 7: 1 – 14 | 14 | VI. தானியேல் கண்ட நான்கு மிருகங்களை பற்றிய தரிசனம்<br>A. தரிசனத்தின் வெளிப்பாடு |
| L 13 | தானியேல் 7: 15 - 28 | 24 | B. தரிசனத்தின் அர்த்தம்<br>பாகம் - 3: இஸ்ரவேலுக்குரிய தீர்க்க தரிசன திட்டம் |
| L14 | தானியேல் 8: 1 – 12 | 12 | I. ஆட்டுக்கடா வெள்ளாட்டுகடா பற்றிய தானியேல் கண்ட தரிசனம்<br>A. தரிசனத்தின் வெளிப்பாடு |
| L 15<br>L16 | தானியேல் 8: 13 -14<br>தானியேல் 8: 15 – 27 | 2<br>13 | B. தரிசனத்தின் கால அவகசம்<br>C. தரிசனத்தின் அர்த்தம் |
| L17 | தானியேல் 9: 1 -2 | 2 | II. தானியேலின் 70 வாரத்தின் தரிசனம்<br>A. தானியேல் அறிந்து கொண்டது |

| பாடம் | வசனக் குறிப்புகள் | வசன எண்ணிக்கை | உள்ளடக்கத்தின் சுருக்கம் |
|---|---|---|---|
| L 17<br>L17 | **தானியேல்** 9: 3 -19<br>**தானியேல்** 9: 20 – 23 | 17<br>4 | B. **தானியேலின் வேண்டுதல்**<br>C. **தானியேலோடு இடைப்படுதல்** |
| L 17 | **தானியேல்** 9: 24 – 27 | 4 | D. **தரிசனத்தின் வெளிப்படுதல்** |
| L18 | **தானியேல்** 10: 1 - 21 | 21 | III. **தானியேலின் தரிசனம்**<br>A. **தானியேலின் ஆயத்தம்** |
| L 19<br>L20 | **தானியேல்** 11: 1 - 35<br>**தானியேல்** 11: 36 – 45 | 35<br>10 | B. 69 **வாரங்களை பற்றிய வெளிப்படுத்தல்**<br>C. 70 **வது வாரத்தை பற்றிய வெளிப்படுத்தல்** |
| L 20<br>L20 | **தானியேல்** 12 : 1 - 3<br>**தானியேல்** 12: 4 - 13 | 3<br>10 | 70 **வது வாரத்தை பற்றிய வெளிப்படுத்தல்**<br>D. **முடிவுரை** |

TAMBARAM Sunday School

# Lesson Memory Verse & Moral Exam

Standard - 10

| <Actual Marks> / 146 X 24 = |
|---|

Time : 2 Hours
Marks : 24

## PART - A

**Write down the following memory verses. 54 X 2 = 108**

| No. | Reference | Tamil |
|---|---|---|
| 1. | Ps. 8:4 | சங்கீதம் 8 : 4 |
| 2. | Ps. 8:5 | சங்கீதம் 8 : 5 |
| 3. | Ps. 8:6 | சங்கீதம் 8 : 6 |
| 4. | Ps. 8:7 | சங்கீதம் 8 : 7 |
| 5. | Ps. 8:8 | சங்கீதம் 8 : 8 |
| 6. | Ps. 8:9 | சங்கீதம் 8 : 9 |
| 7. | Mat 18:10 | மத்தேயு 18 : 10 |
| 8. | Heb 1 : 14 | எபிரெயர் 1 : 14 |
| 9. | II Tim 1 : 9 | 11 தீமோ 1 : 9 |
| 10. | Ps. 103 : 20 | சங் 103:20 |
| 11. | Lk 21:34 | லூக்கா 21:34 |
| 12. | Lk 21:35 | லூக்கா 21:35 |
| 13. | Lk 21:36 | லூக்கா 21:36 |
| 14. | Rev 21:1 | வெளி 21: 1 |
| 15. | Rev 21:2 | வெளி 21: 2 |
| 16. | Rev 21:3 | வெளி 21: 3 |
| 17. | Phil 3:13 | பி- ப்பியர் 3:13 |
| 18. | Phil 3:14 | பி- ப்பியர் 3:14 |
| 19. | I Thess 4:3 | 1 தெச் 4 : 3 |
| 20. | I Thess 4:4 | 1 தெச் 4 : 4 |
| 21. | I Thess 4:5 | 1 தெச் 4 : 5 |
| 22. | I Thess 4:6 | 1 தெச் 4 : 6 |
| 23. | I Thess 4:7 | 1 தெச் 4 : 7 |
| 24. | Heb 5:7 | எபிரெயர் 5 : 7 |
| 25. | Heb 5:8 | எபிரெயர் 5 : 8 |
| 26. | Heb 5:9 | எபிரெயர் 5 : 9 |
| 27. | Heb 5:10 | எபிரெயர் 5 : 10 |
| 28. | Heb 4 : 16 | எபிரெயர் 4 : 16 |
| 29. | I Cor 1:27 | 1 கொர் 1 : 27 |
| 30. | I Cor 1:28 | 1 கொர் 1 : 28 |
| 31. | I Cor 1:29 | 1 கொர் 1 : 29 |
| 32. | Isa 51:1 | ஏசாயா 51 : 1 |
| 33. | Titus 2 : 11 | தீத்து 2 : 11 |
| 34. | Titus 2 : 12 | தீத்து 2 : 12 |
| 35. | Titus 2 : 13 | தீத்து 2 : 13 |
| 36. | Titus 2 : 14 | தீத்து 2 : 14 |
| 37. | Eph 3 : 3 | எபேசியர் 3 : 3 |
| 38. | Eph 3 : 4 | எபேசியர் 3 : 4 |
| 39. | Eph 3 : 5 | எபேசியர் 3 : 5 |
| 40. | Eph 3 : 6 | எபேசியர் 3 : 6 |
| 41. | Eph 3 : 7 | எபேசியர் 3 : 7 |
| 42. | Jn 17 : 14 | யோவான் 17 : 14 |
| 43. | Jn 17 : 17 | யோவான் 17 : 17 |
| 44. | Jn 17 : 19 | யோவான் 17 : 19 |
| 45. | Matt 8 : 16 | மத்தேயு 8 : 16 |
| 46. | Matt 8 : 17 | மத்தேயு 8 : 17 |
| 47. | I Pt 2 : 24 | 1 பேதுரு 2 : 24 |
| 48. | Rom 8 : 11 | ரோமர் 8 : 11 |
| 49. | Deu. 4:7 | உபாகமம் 4 : 7 |
| 50. | Deu. 4:8 | உபாகமம் 4 : 8 |
| 51. | Deu. 7:6 | உபாகமம் 7 : 6 |
| 52. | II Chr 16 : 9 | 2 நாளா. 16 : 9 |
| 53. | Exo 19 : 5 | யாத் 19 : 5 |
| 54. | Exo 19 : 6 | யாத் 19 : 6 |

## PART - B

**Write the Moral of the following lessons. 19 X 2 = 38**

| No. | Lesson | Tamil |
|---|---|---|
| 1. | Ages (Part I) | காலங்கள் (பகுதி 1) |
| 2. | Ages (Part III) | காலங்கள்(பகுதி - 3) |
| 3. | Divine Healing (Part I) | தெய்வீக சுகம்(பகுதி 1) |
| 4. | Feasts (Part II) | பண்டிகைகள்(பகுதி 2) ☐ |
| 5. | Tabernacle (Part 5) | ஆசரிப்புக் கூடாரம்(பகுதி 5) |
| 6. | The kingdom of Israel (Part II) | இஸ்ரவேல் ராஜ்யம் (பகுதி 2) |
| 7. | The ministry of the angels (Part I) | தூதர்களின் சேவை (பகுதி 1) |
| 8. | The Mystery of Christ | கிறிஸ்துவின் இரகசியம் |

9. The Tabernacle (Part II) (The Outer Court) — ஆசரிப்புக் கூடாரம் (பகுதி 2)
10. The Tabernacle (Part IV) (The Most Holy Place) — ஆசரிப்புக் கூடாரம் (பகுதி 4)(மகா பரிசுத்த ஸ்தலம்)
11. The Tabernacle (Part III) (The Holy Place) — ஆசரிப்புக் கூடாரம் (பகுதி 3)
12. The Tabernacle (Part I) — ஆசரிப்புக் கூடாரம் (பகுதி - 1)
13. The ministry of the angels (Part II) — தூதர்களின் சேவை (பகுதி 2)
14. The Kingdom of Israel (Part III) — இஸ்ரவேல் ராஜ்யம் (பகுதி 3)
15. The kingdom of Israel (Part I) — இஸ்ரவேல் ராஜ்யம் (பகுதி 1)
16. Sanctification Through Word — வசனத்தினால் பரிசுத்தமாக்கப்படுதல்
17. Divine Healing (Part II) — தெய்வீக சுகம்(பகுதி 2)
18. Ages (Part IV) — காலங்கள்(பகுதி - 4)
19. Ages (Part II) — காலங்கள் (பகுதி 2)

# தூதர்களின் சேவை

(பகுதி I)

**I** *__மனப்பாடவசனம் :__* (2 Marks)

__சங்கீதம் 8 : 4-8__

மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷ குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்.

நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்: மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்.

உம்முடைய கரத்தின் கிரியைகளின் மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்.

ஆடுமாடுகளெல்லாவற்றையும், காட்டு மிருகங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் சமுத்திரத்து மச்சங்களையும் கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்.

**II** *__ஓரிரு வாக்கிய□களில் விடையளி :__* (2 Marks)

**1.** தூதர்களின் அரசாங்கத்தில் எத்தனை வகுப்புகள் உள்ளன? அவை யாவை?

தூதர்களின் அரசாங்கத்தில் நான்கு வகுப்புகள் உள்ளன. அவையாவன : 1) சிங்காசங்கள் 2) கர்த்தத்துவங்கள் 3) துரைத்தனங்கள் 4) அதிகாரங்கள் (கொலோ 1 : 16)

**2.** தூதர்கள் எவ்வாறு சிஷ்டிக்கப்பட்டிருந்தனர்?

தூதர்கள் தங்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு பூரணத்தில் சிருஷ்டிக்கப்பட்டிருந்தனர். ஆகையால் அதற்கு மேல் வளர்ச்சி அல்லது மேன்மையை அடைந்து கொள்ள வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லாதிருந்தது. (பாடத்திட்டம்)

**3.** தேவ தூதர்களும் உற்றுப் பார்க்க ஆசையாயிருக்கும் மனிதனுக்காக வைக்கப்பட்டிருக்கும் பெரிதான இரட்சிப்பு எது?

தேவ தூதர்களும் உற்றுப் பார்க்க ஆசையாயிருக்கும், மனிதன் பெற்றுக் கொள்ளும் பெரிதான இரட்சிப்பு கிறிஸ்துவின் பூரணம் (1 பேதுரு 1 : 10 - 12)

**4.** தூதர்களின் மகிமைக்கும் புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களின் மகிமைக்கும் உள்ள வேறுபாட்டை எழுது.

*1.* தூதர்களின் மகிமை வெளிப்படையானது. அது பூமியை கூட பிரகாசிக்கப்பண்ணும் (வெளி. 18 : 1)

*2.* புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் தூதர்களைக் காட்டிலும் மேலான ஒரு உள்ளான மகிமையை உடையவர்களாயிருக்கிறார்கள். (கொலோ 1 : 27)

**5.** வேதாகமத்தில் நாம் காணும் பல வகையான - தூதர்களின் பெயரினை குறிப்பிடு.

*(i)* கேருபீன்கள்(ஆதி. 3 : 24, எசேக். 28 : 14)

*(ii)* சேராபீன்கள் (ஏசாயா 6 : 27)

*(iii)* காபிரியேல் (தானி. 8 : 16; 9 : 21 - 23)

*(iv)* மிகாவேல் (தானி. 10 : 13; யூதா 9)

**6.** கேருபீன்கள்- குறிப்பு வரைக?

__கேருபீன்கள்__ - இவர்களுடைய வேலை காவல் செய்வது ஆகும்.

*1.*தேவன், மனுஷனை ஏதேன் தோட்டத்தை விட்டுத் துரத்திய போது, ஜீவ விருட்சத்திற்குப் போம் வழியைக் காவல் செய்ய ஏதேன் தோட்டத்திற்குக் கிழக்கே

கேருபீன்களையும் வீசிக் கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார். (ஆதி. 3 : 24)

2. தேவன் இவர்களைத் தம்முடைய பரிசுத்த பர்வதத்தில் அக்கினிமயமான கற்களின் நடுவே வைத்தார். (எசே. 28 : 14)

**7.** சேராபீன்கள் - குறிப்பு வரைக.

தேவ சமூகத்தில் நின்று அவரை மகிமைப்படுத்துவது சேராபீன்களின் வேலை. ஏசாயா, தான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன் என்று கதறிய போது, சேராபீன்களில் ஒருவன் பலிபீடத்திலிருந்து ஒரு நெருப்புத் தழலை எடுத்து, அதினால் அவன் வாயைத் தொட்டு அவனை சுத்திகரித்தான். (ஏசாயா 6 : 2 - 7)

**8.** காபிரியேல் தூதன் எதற்காக நியமிக்கப்பட்டான்?

காபிரியேல் தேவனுடைய ஜனங்களுக்கு நற்செய்தியைக் கொண்டு சென்று தரிசனங்களை விளங்கப்பண்ண நியமிக்கப்பட்டவன் (தானி. 8 : 16, 9 : 21 - 23)

**9.** மிகாவேல் தூதன் குறிப்பு வரைக?

மிகாவேல் பிரதான தூதர்களில் ஒருவன். தேவனுடைய ஜனங்களுக்காக யுத்தம் செய்யும்படியாய் நியமிக்கப்பட்டவன். (தானி 8 : 13, யூதா 9).

**10.** ஜீவ விருட்சத்திற்குப் போகும் வழியைக் காவல் பண்ண தேவன் என்ன செய்தார்?

தேவன் ஜீவ விருட்சத்திற்குப் போகும் வழியைக் காவல் செய்ய. ஏதேன் தோட்டத்திற்கு கிழக்கே கேருபீன்களையும், வீசிக் கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார். (ஆதி. 3 : 24)

**11.** நம்மைக் குறித்த தேவனுடைய திட்டம் யாது?

நாம் அவரோடு கூட நித்தியத்தில் ஆளுகை செய்ய வேண்டும் என்பதே நம்மைக் குறித்து தேவனுடைய திட்டம் ஆகும். (போதனை)

## III *<u>சுருக்கமான விடையளி:</u>* (5 Marks)

**1.** தேவ தூதர்களைப் பற்றிய பொதுவான குறிப்புகள் யாவை? (அல்லது) தூதர்களின் பொதுவான தன்மைகளை விவரி?

1) தூதர்களின் அரசாங்கத்தில் நான்கு வகுப்புகள் உள்ளன. அவை
   1) சிங்காசங்கள் 2) கர்த்தத்துவங்கள் 3) துரைத்தனங்கள் 4) அதிகாரங்கள் (கொலோ 1 : 16)
2) தூதர்கள் தங்களுக்குரிய பூரணத்தில் சிருஷ்டிக்கப்பட்டிருந்ததினால், அதற்கு மேல் வளர்ச்சி அல்லது மேன்மையை அடைந்து கொள்ள வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லாதிருந்தது. இருப்பினும், தேவதூதர்களை பார்க்கிலும் சற்று சிறியவனாய் சிருஷ்டிக்கப்பட்ட மனுஷன் வளர்ந்து, கிறிஸ்துவின் பூரணத்தை அடைந்து கொள்ளக்கூடியவனாக இருக்கிறான். ஏனவே மனுக்ஷன் பெற்றுக் கொள்ளும்படியாக வைக்கப்பட்டிருக்கும் இப்பெரிதான இரட்சிப்பை உற்றுப்பார்க்க தேவதூதர்கள் ஆசையாயிருக்கிறார்கள். (1 பேதுரு 1 : 10 - 12)
3) தூ.தர்களுக்கு வெளிப்படையான மகிமையிருக்கிறது (வெளி. 18 : 1)
4) கர்த்தருடைய தூதர்கள் பலத்த சவுரியவான்களாயிருந்து கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய வசனத்தின் படி செய்கிறார்கள். (சங்கீதம்103:20)
5) அவர்கள் தூதர்களாக நம்முடைய மாம்ச கண்களுக்குப் புலப்படாவிட்டாலும், பல சந்தர்ப்பங்களில் மனித ரூபத்தில் தோன்றியிருக்கிறார்கள். (ஆதி. 18 : 2, 22; 19:15)

**2.** பழைய ஏற்பாட்டில் நாம் காணும் பல வகையான தூதர்களின் உத்தியோகங்கள் (அல்லது) வேலைகள் யாவை?

**i)** <u>கேருபீன்கள்</u> : இவர்களுடைய வேலை காவல் செய்வது ஆகும்.

**a)** தேவன், மனுஷனை ஏதேன் தோட்டத்தை விட்டுத் துரத்திய போது, ஜீவ விருட்சத்திற்குப் போம் வழியைக் காவல் செய்ய ஏதேன் தோட்டத்திற்குக் கிழக்கே கேருபீன்களையும் வீசிக் கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார். (ஆதி. 3 : 24)

**b)** தேவன் இவர்களைத் தம்முடைய பரிசுத்த பர்வதத்தில் அக்கினிமயமான கற்களின் நடுவே வைத்தார். (எசே. 28 : 14)

**ii)** சேராபீன்கள் - தேவ சமூகத்தில் நின்று அவரை மகிமைப்படுத்துவது சேராபீன்களின் வேலை. ஏசாயா, தான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன் என்று கதறிய போது, சேராபீன்களில் ஒருவன் பலிபீடத்திலிருந்து ஒரு நெருப்புத் தழலை எடுத்து அதினால் அவன் வாயைத் தோட்டு அவனை சுத்திகரித்தான். (ஏசாயா 6 : 2 - 7)

**iii)** காபிரியேல்: காபிரியேல் தேவனுடைய ஜனங்களுக்கு நற்செய்தியைக் கொண்டு சென்று தரிசனங்களை விளங்கப்பண்ண நியமிக்கப்பட்டவன்.(தானி. 8 : 16;9 : 21 - 23)

**iv)** மிகாவேல்: மிகாவேல் பிரதான தூதர்களில் ஒருவன் தேவனுடைய ஜனங்களுக்காக யுத்தம் செய்யும்படியாய் நியமிக்கப்பட்டவன் (தானி 10 : 13, யூதா 9).

## IV *விரிவான விடையளி* : (10 Marks)

**1.** பழைய ஏற்பாட்டில் தேவ தூதர்கள் தேவ ஜனங்களுக்கு பணிவிடை செய்த சில சந்தர்ப்பங்களைக் கூறு?

1) ஆபிரகாம் கூடார வாசலில் உட்கார்ந்திருந்த போது, கர்த்தரும், இரு தூதர்களும் ஆபிரகாமைச் சந்தித்து ஈசாக்கின் பிறப்பைக் குறித்து அவனுக்குக் கூறினார்கள். (ஆதி. 18 : 1 - 10)
2) இருதூதர்கள், லோத்தைச் சந்தித்து, சோதோம் கொமோரா அழிக்கப்பட்ட போது, அவனையும் அவன் குடும்பத்தையும் அழிவிலிருந்து பாதுகாத்தனர். (ஆதி. 19 : 1 - 16)
3) ஆபிரகாம் தன் குமாரனாகிய ஈசாக்கை வெட்டும்படி கத்தியை எடுத்த போது ஒரு தூதன் அவனைத் தடை செய்தான். (ஆதி. 22 : 10 - 12)
4) இஸ்ரவேலர் எகிப்திலிருந்து கானானை நோக்கிச் செய்த பிரயாணத்தில், வனாந்திரத்தில் அவர்களைக் காப்பதற்காகவும் கானானுக்குள் அவர்களை வழி நடத்துவதற்காகவும் ஒரு தூதன் அவர்களுக்கு முன் சென்றான். (யாத். 14 : 19;23:20,23)
5) ஒரு தூதன் நித்திரை செய்து கொண்டிருந்த எலியாவை எழுப்பி, அவனுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்தான். (1 இராஜா 19 : 5 - 7)
6) சிங்கங்களின் கெபியில் போடப்பட்ட தானியேலை சிங்கங்கள் சேதப்படுத்தாதபடிக்கு ஒரு தூதன் அவைகளின் வாயைக் கட்டிப் போட்டான். (தானி. 6 : 22)
7) எசேக்கியா ராஜாவின் நாட்களில் அவனுக்கு விரோதமாய் அசீரியர் யுத்தத்திற்கு வந்த போது, ஒரு தூதன் அவர்களைச் சங்கரித்தான். (2 இராஜா 19 : 35, 2 நாளா 32 : 21)

## V *போதனை :* (2 Marks)

தேவதூதர்கள் தேவனுடைய சமூகத்தில் நிற்பவர்களாகவும் அதிக வல்லமையும் மகிமையும் உள்ளவர்களாகவும் இருந்தாலும், அவர்கள் பணிவிடை ஆவிகள் மாத்திரமே. மறு பக்கத்தில், மனிதனோ உலகத்தோற்றத்திற்கு முன்பிருந்தே தேவனுடைய மனதில் இருந்து வருகிறான். நாம் அவரோடுகூட நித்தியத்தில் ஆளுகை செய்ய வேண்டுமென்பதே நம்மைக் குறித்த தேவனுடைய திட்டமாகும். எனவே தேவனுடைய திட்டம் நம்மில் நிறைவேற்றப்படும்படியாக நாம் நம்மைத் தேவனுக்கு இணங்கி ஒப்புக்கொடுக்க வேண்டும்.

******************

வகுப்பு :10

பாடம்-2

# தூதர்களின் சேவை

(பகுதி II)

**I** *மனப்பாடவசனம் :* (2 Marks)

மத்தேயு 18 : 10

இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள. அவர்களுக்குரிய தேவ தூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

எபிரெயர் 1 : 14

இரட்சிப்பை சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ் செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?

**II** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

**1.** புதிய ஏற்பாட்டில் யாருடைய பிறப்பை தூதன் முன்னறிவித்தான்?

1) ஒரு தூதன் யோவான் ஸ்நானகனின் பிறப்பை பற்றி முன்னறிவித்தான் (லூக்கா 1 : 11 - 13)
2) கர்த்தராகிய இயேசுவின் பிறப்பை ஒரு தூதன் முன்னறிவித்தான்.(லூக்கா1:28-31)

**2.** கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உலகில் ஜீவித்த நாட்களில் தூதர்கள் அவருக்கு சேவை செய்த இரண்டு சந்தர்ப்பங்களை எழுது

1) கர்த்தராகிய இயேசு தம்முடைய நாற்பது நாள் உபவாசத்தை முடித்த போது தூதர்கள் அவருக்குப் பணிவிடை செய்தனர். (மத்தேயு 4 : 2, 11)
2) கர்த்தராகிய இயேசு கெத்செமனேயில் ஜெபித்தபோது ஒரு தூதன் தோன்றி, அவரை பலப்படுத்தினான். (லூக்கா 22 : 41 - 43)

**3.** கர்த்தராகிய இயேசுவின் கல்லறையில் தூதர்கள் பணிவிடை செய்த மூன்று சந்தர்ப்பங்களை எழுது?

1) கர்த்தராகிய இயேசுவின் கல்லறையின் வாசலிலிருந்த கல்லை ஒரு தூதன் புரட்டித் தள்ளினான். (மத். 28 : 2)
2) கர்த்தராகிய இயேசுவின் கல்லறையினருகில் அழுது கொண்டிருந்த ஸ்தீரிகளிடம் அவருடைய உயிர்த்தெழுதலைக் குறித்து ஒரு தூதன் அறிவித்தான். (மத். 28:5-7)
3) கர்த்தராகிய இயேசுவின் கல்லறையில் உட்கார்ந்திருந்த இரு தூ.தர்கள் அழுது கொண்டிருந்த மகதலேனா மரியாளை விசாரித்தார்கள்.(யோவான் 20 : 11 - 13)

**4.** இயேசு கிறிஸ்துவின் நாட்களில் வியாதியஸ்தர் சொஸ்தமடையும்படியாக பெதஸ்தா குளத்தின் தண்ணீரை சில சமயங்களில் கலக்கினது யார்? வியாதியஸ்தர் சுகமடையும்படி என்ன செய்ய வேண்டும்?

1) ஒரு தேவதூதன்
2) தண்ணீர் கலங்கின பின்பு முந்தி இறங்க வேண்டும்.(யோவான் 5 : 4)

**5.** அப்போஸ்தலர் நாட்களில் தேவதூதர்கள் தேவனுடைய ஜனங்களுக்கு பணிவிடை செய்த இரண்டு சந்தர்ப்பங்களை எழுது?

1) ஒரு தூதன் பேதுருவைச் சிறைச்சாலையிலிருந்து விடுதலையாக்கினான்.(அப்.12:7-10)
2) ஒரு தூதன் கொர்நேலியுவிற்குத் தோன்றி அவன் செய்ய வேண்டியதை அவனுக்கு கற்பித்தான்.(அப். 10 : 3 -6, 22)

**6.** தேவனுடைய ஜனங்கள் மரிக்கும் போது தூதர்கள் செய்யும் பணிவிடை என்ன?

தேவனுடைய ஜனங்கள் மரிக்கும் போது, அவர்களுடைய ஆத்துமாக்களைத் தூதர்கள் பரலோகத்திற்குக் கொண்டு செல்கின்றனர். (லூக்கா 16 : 22)

7. பிரதான தூதனுடைய சத்தத்துடன் கர்த்தர் எதற்காக வருவார்?
   தம்முடைய பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்களைக் சேர்க்கும்படி கர்த்தர் பிரதான தூதனுடைய சத்தத்துடன் வருவார்.(1 தெச. 4 : 16)

8. உபத்திரவ காலத்தின் மத்தியில் தூதர்களின் பணி என்ன?
   உபத்திரவ காலத்தின் மத்தியில், கர்த்தராகிய இயேசு வானத்தின் மேகங்களின் மேல் தோன்றி, இரத்த சாட்சிகளை சேர்க்கும்படி தம்முடைய தூதர்களை அனுப்புவார். (மத். 24 : 30, 31, வெளி 14 : 14 - 16)

9. சகல ஜாதிகளையும் இருப்புக் கோலால் ஆளுகை செய்யும் ஆண்பிள்ளை சிங்காசனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு, தூதர்கள் யாரோடு யுத்தம் செய்வார்கள்?
   தூதர்கள் வலுசர்ப்பத்தோடும் அதனுடைய தூதர்களுடனும் யுத்தம் பண்ணி, அவர்களைத் தோற்கடிப்பார்கள். (வெளி 12 : 7, 8)

10. உலகத்தின் முடிவில் தூதர்களின் பணி என்ன?
    உலகத்தின் முடிவில், தூதர்கள் அக்கிரமஞ் செய்கிறவர்களை ஒன்றாகச் சேர்த்து அவர்களை அக்கினி சூளையிலே போடுவார்கள். (மத். 13 : 40 - 42)

11. தேவன் தூதர்களை சிருஷ்டித்ததற்காக நாம் ஏன் அவருக்கு நன்றி உள்ளவர்களாக இருக்க வேண்டும்?
    1) மனிதன் பால் தேவன் பாராட்டின அன்பு அவ்வளவு பெரிதாக இருப்பதால் அவர் அவனை சிருஷ்டிக்கும் முன்னதாகவே, மற்ற எல்லாவற்றையும், தூதர்களையும் கூட சிருஷ்டித்து தூதர்களை அவனுக்கு பணிவிடை ஆவிகளாக கொடுத்தார்.
    2) அவனுடைய வழிகளில் அவனை காவல் செய்யும் படியாகவும் சகல தீமைகளினின்றும் அவனை பாதுகாக்கும்படியாகவும் அவர்கள் தேவனிடத்தில் கட்டளை பெற்றிருக்கிறார்கள்.
    3) எனவே நாம் தேவனுக்கு நன்றி உள்ளவர்களாக இருக்க வேண்டும் (போதனை)

**III** <u>*விரிவான விடையளி*</u> : (15 Marks)

1. புதிய ஏற்பாட்டில் தேவதூதர்கள் பணிவிடை செய்த சந்தர்ப்பங்களையும் கர்த்தருடைய இரண்டாம் வருகையின் போதும், உலகத்தின் முடிவிலும் தேவ தூதர்கள் செய்யப்போகும் பணிவிடைகளையும் வசன ஆதாரத்துடன் எழுது?
   1) ஒரு தூதன் யோவான் ஸ்நானகனின் பிறப்பை முன்னறவித்தான்.(லூக்கா1:11-13)
   2) கர்த்தராகிய இயேசுவின் பிறப்பை ஒரு தூதன் முன்னறிவித்தான்.(லூக்கா1:28-31)
   3) கர்த்தராகிய இயேசு தம்முடைய நாற்பது நாள் உபவாசத்தை முடித்த போது தூதர்கள் அவருக்குப் பணிவிடை செய்தனர். (மத்தேயு 4 : 2, 11)
   4) கர்த்தராகிய இயேசு கெத்செமனேயில் ஜெபித்தபோது ஒரு தூதன் தோன்றி, அவரை பெலப்படுத்தினான். (லூக்கா 22 : 41 - 43)
   5) கர்த்தராகிய இயேசுவின் கல்லறையின் வாசலிலிருந்த கல்லை ஒரு தூதன் புரட்டித் தள்ளினான். (மத். 28 : 2)
   6) கர்த்தராகிய இயேசுவின் கல்லறையினருகில் அழுது கொண்டிருந்த ஸ்தீரிகளிடம் அவருடைய உயிர்த்தெழுதலைக் குறித்து ஒரு தூதன் அறிவித்தான் (மத்.28:5-7)
   7) கர்த்தராகிய இயேசுவின் கல்லறையில் உட்கார்ந்திருந்த இரு தூ.தர்கள் அழுது கொண்டிருந்த மகதலேனா மரியாளுடன் பேசினர்.(யோவான் 20 : 11 - 13)
   8) வியாதியஸ்தர் சுகமாக்கப்படுவதற்கு ஒரு தூதன் உதவி செய்தான்.(யோவான்5:2-7)
   9) ஒரு தூதன் பேதுருவைச் சிறைச்சாலையிலிருந்து விடுதலையாக்கினான்.(அப்.12:7-10)

10) ஒரு தூதன் கொர்நேலியுவிற்குத் தோன்றி அவன் செய்ய வேண்டியதை அவனுக்கு கற்பித்தான்.(அப். 10 : 3 -6, 22)

11) தேவனுடைய ஜனங்கள் மரிக்கும் போது, அவர்களுடைய ஆத்துமாக்களைத் தூதர்கள் பரலோகத்திற்குக் கொண்டு செல்கின்றனர். (லூக்கா 16 : 22)

12) தம்முடைய பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்களைக் சேர்க்கும்படி கர்த்தர் பிரதான தூதனுடைய சத்தத்துடன் வருவார்.(1 தெச. 4 : 16)

13) உபத்திரவ காலத்தின் மத்தியில், கர்த்தராகிய இயேசு வானத்தின் மேகங்களின் மேல் தோன்றி, இரத்த சாட்சிகளை சேர்க்கும்படி தம்முடைய தூதர்களை அனுப்புவார். (மத். 24 : 30, 31; வெளி 14 : 14 - 16)

14) தூதர்கள் வலுசர்ப்பத்தோடும் அதனுடைய தூதர்களுடனும் யுத்தம் பண்ணி, அவர்களைத் தோற்கடிப்பார்கள். (வெளி 12 : 7, 8)

15) உலகத்தின் முடிவில், தூதர்கள் அக்கிரமஞ் செய்கிறவர்களை ஒன்றாகச் சேர்த்து அவர்களை அக்கினி சூளையிலே போடுவார்கள். (மத். 13 : 40 - 42)

**IV** *__போதனை :__* (2 Marks)

மனிதன்பால் தேவன் பாராட்டின அன்பு அவ்வளவு பெரிதாயிருந்ததால் அவர் அவனை சிருஷ்டிக்கும் முன்னதாகவே, மற்ற எல்லாவற்றையும், தூதர்களையும் கூட சிருஷ்டித்து தூதர்களை அவனுக்கு பணிவிடை ஆவிகளாக கொடுத்தார்.

அவனுடைய வழிகளில் அவனை காவல் செய்யும்படியாகவும் சகல தீமைகளினின்றும் அவனைப் பாதுகாக்கும்படியாகவும் அவர்கள் தேவனிடத்தில் கட்டளை பெற்றிருக்கிறார்கள். எனவே நாம் தேவனுக்கு நன்றி உள்ளவர்களாக இருக்க வேண்டும். (போதனை)

*************

# காலங்கள்

(பகுதி 1)

**I** *மனப்பாடவசனம் :* (2 Marks)

11 தீமோத்தேயு 1 : 9

அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகால முதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்.

**II** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

**1.** காலங்கள் எத்தனை ? அவை யாவை?
ஏழு காலங்கள் உள்ளன. அவையாவன :
- *(i)* முந்தின நித்தியம்
- *(ii)* தூதர்களின் காலம்
- *(iii)* அறியாமையின் காலம்
- *(iv)* பூர்வ கால உலகம்
- *(v)* இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சம்
- *(vi)* இனி வரும் உலகம்
- *(vii)* பிந்தின நித்தியம்

**2.** முந்தின நித்தியம் என்பது யாது?
முந்தின நித்தியம் என்பது, எதுவுமே சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பு பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் திரித்துவ தேவனாய் இருந்து வந்த காலமாகும். (சங்கீதம் 90 : 2)

**3.** தேவனை நாம் ஏன் நித்திய தேவன் என்று கூறுகிறோம்?
பிதா, குமாரன், பரிசுத்தாவியானவர் சிருஷ்டிக்கப்படாதவர்கள். அவர்கள் நித்தியமானவர்களாய் முந்தின நித்தியம் முதல் பிந்தின நித்தியம் வரை தொடர்ந்து நிலைத்திருக்கிறார்கள். எனவே தான் தேவனை நாம் நித்திய தேவன் என்று கூறுகிறோம்.

**4.** திரித்துவ தேவன் - சிறு குறிப்பு வரைக,
தேவன் ஒருவரே. எனினும் அவர் பிதா, குமாரன், பரிசுத்தாவியானவர் என்ற மூன்று ஆள்த்தத்துவங்களுடையவர். அவர்கள் தனித்தனியாகக் கிரியை செய்யக் கூடியவர்களாயிருக்கின்றனர். அவர்கள் நித்தியமானவர்கள், சிருஷ்டிக்கப்படாதவர்கள். எனவே தான், தேவனை நாம் திரித்துவ தேவன் என்று கூறுகிறோம்.

**5.** தேவனுடைய தன்மைகள் யாவை?
தேவன் சர்வவல்லவரும், சர்வ வியாபியும், சர்வ ஞானியுமானவர். தேவன் பரிசுத்தர். அவர் அன்பாயிருக்கிறார். அவர் தம்மில் தாமே ஜீவனுள்ளவராயிருக்கிறார். (பாடத்திட்டம்)

**6.** பிதா நித்தியமானவர் என்பதற்கு வசன குறிப்புகள் தருக:
- *(i)* ஆதி 21:33
- *(ii)* உபாகமம் 33:27
- *(iii)* சங்கீதம் 90:2
- *(iv)* சங்கீதம் 106: 48
- *(v)* ஏசாயா 40 : 28

7. குமாரன் நித்தியமானவர் என்பதற்கு சில வசனகுறிப்புகள் தருக.
   *(i)* யோவான் 1 : 1
   *(ii)* கொலோ 1 : 15 - 18

8. சகல சிருஷ்டிக்கும் முந்தின பேறானவர் யார்?வசன ஆதாரம் தருக.
   சகல சிருஷ்டிக்கும் முந்தின பேறானவர் குமாரன். (கொலோ 1 : 5)

9. தேவனுடைய வார்த்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
   தேவனுடைய வார்த்தை என்று அழைக்கப்படுபவர், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. (வெளி 19 : 13)

10. பரிசுத்தாவியானவர் நித்தியமானவர் என்பதற்கு இரண்டு வசன குறிப்புகள் தருக?
   (i) எபிரெயர் 7 : 3
   (ii) எபிரெயர் 9 : 14

11. சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை வழிநடத்தி பரிசுத்தமாக்குகிறவர் யார்?வசன ஆதாரம் தருக?
   சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை வழிநடத்தி பரிசுத்தமாக்குகிறவர் பரிசுத்த ஆவியானவர் . (யோவான் 16 : 13, 11 தெச 2 : 13)

12. வருங்காரியங்களை நமக்கு முன்னறிவிப்பவர் யார்? வசன ஆதாரம் தருக.
   வரும் காரியங்களை நமக்கு முன்னறிவிப்பவர் பரிசுத்த ஆவியானவர். (யோவான் 16:13)

13. மனுஷனுடைய இரட்சிப்பு எப்போது தேவனால் தீர்மானிக்கப்பட்டிருந்தது?வசன ஆதாரத்துடன் விளக்குக.
   மனுஷன் சிருஷ்டிக்கப்படும் முன்பாகவே, முந்தின நித்தியத்தில் தானே மனுஷனுடைய இரட்சிப்பு தேவனால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. (எபேசி 1:4)

14. குமாரன் மனுஷனுடைய இரட்சிப்புக்காக எப்போது முன் குறிக்கப்பட்டார்? எப்போது வெளிப்பட்டார்? வசன ஆதாரம் தருக.
   உலக தோற்றத்துக்கு முன்னமே குமாரன் மனுஷனுடைய இரட்சிப்புக்காக முன் குறிக்கப்பட்டு, இந்தக் கடைசிக் காலங்களில் நமக்காக வெளிப்பட்டார் (1 பேதுரு 1 : 20)

15. எவைகளை உணர்ந்து, நித்திய மகிழ்ச்சிக்காக நம்மை ஆயத்தப்படுத்த வேண்டும்?
   (i) மனிதனுடைய ஆத்துமா விலையேறப் பெற்றதும் அழியாமையுள்ளதுமாகும்.
   (ii) மனிதன் நித்திய சந்தோஷம், அல்லது நித்திய ஆக்கினை இவைகளிலொன்றில் பிரவேசிப்பான்.
   (iii) தேவன் மனிதனில் அன்புகூர்ந்து, அவனுக்கென்று நித்திய இரட்சிப்பை உண்டு பண்ணியிருக்கிறார்.
   (iv) நாம் இதை உணர்ந்து நித்திய மகிழ்ச்சிக்காக நம்மை நாமே ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.(போதனை)

**III** ***சுருக்கமான விடையளி:*** (5 Marks)

1. பிதாவின் தன்மைகள் யாவை ? அவரைப்பற்றி நீ அறிந்தவற்றை வசனக் ஆதாரத்துடன் எழுது.

   (i) அவர் தம்மைத் தாமே வெளிப்படுத்தும் படியாக சகலத்தையும் சிருஷ்டித்தார். அவரே சர்வ சிருஷ்டிக்கும் பிதாவானவர் (ரோமர் 1 : 20 ; எபிரெ 2 : 10)
   (ii) அவர் ஜீவனின் ஊற்றாயிருக்கிறார் (சங் 36 : 9)
   (iii) அவர் சகல நன்மைகளின் ஊற்றாயிருக்கிறார் (யாக் 1 : 17)
   (iv) அவர் மாறாதவறாயிருக்கிறார்.(மல்கியா 3 : 6)
   (v) அவர் நீதியும் நியாயமும் உள்ளவர் (உபா. 32 : 4)

**2.** குமாரனின் தன்மைகள் யாவை ? வசன ஆதாரத்துடன் எழுது.

(i) அவர் தேவனுடைய வார்த்தை என்று அழைக்கபடுகிறவர். அவரை கொண்டே சகலமும் சிருஷ்டிக்கப்பட்டன. (யோவான் 1 : 1,3 ; கொலோ 1 : 16)

(ii) அவர் தம்மை முற்றிலும் பிதாவுக்கு ஒப்புக்கொடுத்து எல்லாவற்றிலும் அவருக்கு கீழ்படிந்தவர் (எபி 10 : 7, பிலிப்பி 2 : 8)

(iii) அவர் பிதாவின் தன்மையின் சொரூபமானவர் (எபி 1 : 3)

(iv) அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் (எபி 13 : 8)

(v) அவர் சகல சிருஷ்டிக்கும் முந்தின பேறானவர் (கொலோ 1 : 15)

**3.** பரிசுத்த ஆவியானவரின் தன்மைகள் யாவை?வசன ஆதாரத்துடன் எழுது .

(i) அவர் பிதா, குமாரன் ஆகியோருடைய அதே சிருஷ்டிக்கும் வல்லமையை உடையவர்.(ஆதி. 1 : 26)

(ii) அவர் உன்னதமான தேவனுடைய ஆசாரியர். அவர் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமில்லாதவர். (எபிரே 7:3)

(iii) கர்த்தராகிய இயேசு பரத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு அவர் தேற்றவாளனாக அனுப்பப்பட்டார். . (யோவான் 14 : 16; அப். 2 : 33)

(iv) அவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தி, நம்மைப் பரிசுத்தமாக்குகிறவர். (யோவான் 16 : 13; 11தெச 2 : 13 )

(v) அவர் வரப் போகிற காரியங்களை நமக்கு அறிவிப்பவர். (யோவான் 16 : 13)

**IV** ***போதனை :*** (2 Marks)

மனிதனுடைய ஆத்துமா விலையேறப்பெற்றதும் அழியாமையுள்ளதுமாகும். மனிதன் நித்திய சந்தோஷம் அல்லது நித்திய ஆக்கினை இவைகளிலொன்றில் பிரவேசிப்பான். தேவன் மனிதனில் அன்புகூர்ந்து அவனுக்கென்று நித்திய இரட்சிப்பை உண்டுபண்ணியிருக்கிறார். நாம் இதை உணர்ந்து நித்திய மகிழ்ச்சிக்காக நம்மை நாமே ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

***********

# காலங்கள்

(பகுதி - II)

**I.** ***மனப்பாட வசனம்***: (2 Marks)

சங்கீதம்103:20

கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய வசனத்தின்படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே, அவரை ஸ்தோத்திரியுங்கள்.

**II.** ***ஓரிரு வாக்கியங்களில் விடையளி***: (2 Marks)

1. பணிவிடை ஆவிகளாக இருக்கிறவர்கள் யார்? இவர்கள் யாருக்கு பணிவிடை செய்ய நியமிக்கப்பட்டனர்?

   தாங்கள் சோதிக்கப்படுகையில் உண்மையுள்ளவர்களாகவும் ஜெயங்கொண்டவர் களாகவும் விளங்கிய தூதர்கள் பணிவிடை ஆவிகளாயிருக்கின்றனர். இவர்கள் இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களுக்கு பணிவிடை செய்யும்படியாய் நியமிக்கப்பட்டனர். (எபி. 1:14)

2. பூமி ஏன் ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது?

   தேவன் மனிதனை சிருஷ்டித்து அவனை பூமியில் வைக்கு முன்பாக, தூதர்கள் சோதனை காலத்திற்காக பூமியில் வைக்கப்பட்டனர். (எசே. 28:13) இந்த சோதனை காலத்தில் விழுந்து போன தூதர்கள் பிசாசுகளாக மாறினர். எனவே பூமி ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது.

3. தேவன் மனிதனை எங்கே எவ்வாறு சிருஷ்டித்தார்?

   தூதர்களின் விழுகையினால் ஒழுங்கின்மையும் வெறுமையுமான பூமியானது தேவனால் புதுப்பிக்கப்பட்டது அல்லது சீர்திருத்தப்பட்டது. இந்த பூமியில் மனிதனை தேவன் தமது சாயலாகவும் தமது ரூபத்தின்படியேயும் சிருஷ்டித்தார். (ஆதி 1:26)

4. அறியாமையின் காலம் என அழைக்கப்படுவது யாது?

   மனிதன் சிருஷ்டிக்கப்பட்டது முதல், அவனுடைய கீழ்படியாமையினால் அவன் விழுந்தது வரை உள்ள காலம் அறியாமையின் காலம் என அழைக்கப்படுகிறது. (பாடத்திட்டம்)

5. மனிதனைக் குறித்து தேவனுடைய திட்டம் என்ன?

   மனிதன் ஜீவ விருட்சத்தின் கனியை புசித்து ஜீவனில் வளர வேண்டும் என்பது தேவனுடைய திட்டமாயிருந்தது. (பாடத்திட்டம்)

6. பூமி எதினால் சாபத்திற்குட்பட்டது? (அல்லது) சாத்தான் எப்போது இவ்வுலகின் அதிபதியானான்?

   தேவன் மனிதனை செம்மையானவனாக உண்டாக்கினார். ஆனாலும் அவன் தனக்கு கொடுக்கப்பட்டிருந்த சுயாதீன சித்தத்தை கொண்டு விலக்கப்பட்ட கனியை புசித்த போது, தேவனுடைய சகல ஆசீர்வாதங்களையும், அவன் அடைந்திருக்க வேண்டிய பூரணத்தையும் இழந்தான். எனவே பூமி சாபத்திற்குட்பட்டது. சாத்தான் இவ்வுலகத்தின் அதிபதியானான். (ஆதி 3:17-19)

7. நாம் ஏன் கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளாக நடந்து கொள்ள வேண்டும்?

   பாவஞ்செய்த தூதர்களையும், கீழ்படியாமையின் நிமித்தம் முதலாவது மனுஷனாகிய ஆதாமையும் தேவன் தப்ப விடாதிருக்க, பூரணத்தின் உன்னத உபதேசங்களை, பெற்றுக் கொண்டிருக்கும் நாம், இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து கவலையற்றவர்களாயிருந்தால் நமக்கும் தப்பித்துக் கொள்ள மார்க்கமே இராது. எனவே நாம் கீழ்படிதலுள்ள பிள்ளைகளாக நடந்து கொள்ள வேண்டும். (போதனை)

## III. *சுருக்கமான விடையளி*: (5 Marks)

1. தூதர்கள் எவ்வாறு ஏன் சிருஷ்டிக்கப்பட்டனர்?
   i. மனுஷன் சிருஷ்டிக்கப்படுவதற்கு வெகு காலத்திற்கு முன்னரே தேவன் தூதர்களை சிருஷ்டித்தார்.
   ii. தூதர்கள், ஞானத்தால் நிறைந்தவர்களாகவும் பூரண அழகுள்ளவர்களாகவும் சிருஷ்டிக்கப்பட்டனர். (எசே28:12)
   iii. பூமியில் வசித்து, இரட்சிப்பை சுதந்தரிக்கப்போகிற மனிதனுக்கு பணிவிடை ஆவிகளாக இருக்கும்படி அவர்கள் சிருஷ்டிக்கப்பட்டனர். எனவே தான் கர்த்தர் பூமியை அஸ்திபாரப்படுத்தின போது தூதர்கள் களிகூர்ந்தனர். (யோபு 38:4-7)

2. தூதர்கள் எப்படி பிசாசுகளாக மாறினர் என்பதை வேத வசனத்தின் அடிப்படையில் எழுது,
   i. தேவன் மனிதனை சிருஷ்டித்து அவனை பூமியில் வைக்கும் முன்பாக தூதர்கள் சோதனைக் காலத்திற்காக பூமியில் வைக்கப்பட்டனர். (எசே 28:13)
   ii. அந்த காலத்தில் சில தூதர்கள் தங்கள் அழகினால் மேட்டிமையடைந்து, விழுந்து போயினர்.
   iii. மற்றொரு கூட்டத்தார், தேவன் அவர்களுக்கு கொடுத்த எல்லாவற்றினிமித்தமும் மேட்டிமையுள்ளவர்காளாயினர். எனவே அவர்களும் விழுந்து போயினர்.
   iv. இப்படியாக விழுந்து போன தூதர்கள் பிசாசுகளாய் மாறினர். (எசே 28:12-17;ஏசாயா14:12-15) பூமி ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிற்று.

3. தூதர்களின் விழுகையினால் ஒழுங்கின்மையும் வெறுமையுமான பூமி எப்பொழுது ஆசீர்வதிக்கப்பட்டதாய் மாறினது? எவ்வளவு காலம் ஆசீர்வதிக்கப்பட்டதாயிருந்தது?
   i. ஏவாள், ஆதாமின் விலா எலும்பினால் உண்டாக்கப்பட்டு அவனுக்கு ஏற்ற துணையாக கொடுக்கப்பட்டாள். அவர்கள் தேவனுடைய சமூகத்தை இன்பமாய் அனுபவித்து, அவரோடு ஐக்கியமுள்ளவர்களாயிருந்தனர்.
   ii. பூமியில் எவ்வித சாபமோ தீமையோ காணப்படவில்லை. அங்கே முள்ளும் குருக்கும் இருக்கவில்லை. தேவன் தோட்டத்தில் உலாவி அவர்களோடு உறவாடினார். தேவனுக்கும் மனிதனுக்கும், மனிதனுக்கும் மனிதனுக்கும், மனிதனுக்கும் மிருகங்களுக்கும், மிருகங்களுக்கும் மிருகங்களுக்கும் இடையே பூரண சமாதானம் இருந்தது. இவ்வாறு பூமி ஆசீர்வதிக்கப்பட்டதாயிருந்து. மனிதன் தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படியாமை காட்டி, விலக்கப்பட்ட கனியை புசித்ததால், தேவன் தந்த சகல ஆசீர்வாதங்களையும் இழந்தான். ஆசீர்வதிக்கப்பட்டிருந்த பூமி அதுமுதல் சாபத்திற்குட்பட்டதாயிற்று. (ஆதி. 3 : 17 - 19)

## IV. *விரிவான விடையளி*: (10 Marks)

1. தூதர்களின் காலத்தைப்பற்றி எழுது?
   i. ஆதியில் தேவன் வானத்தையும், தூதர்கள் உட்பட அதிலுள்ளவைகளையும் சிருஷ்டித்தார். இது மனுஷன் சிருஷ்டிக்கப்படுவதற்கு வெகுகாலத்திற்கு முன்னரே ஆகும்.
   ii. தூதர்கள், ஞானத்தால் நிறைந்தவர்களாயும் பூரண அழகுள்ளவர்களாகவும் சிருஷ்டிக்கப்பட்டனர். (எசே 28:12)
   iii. பூமியில் வசித்து, இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிற மனிதனுக்குப் பணிவிடை ஆவிகளாக இருக்கும்படி அவர்கள் சிருஷ்டிக்கப்பட்டனர். எனவே தான், கர்த்தர் பூமியை அஸ்திபாரப் படுத்தினபோது தூதர்கள் களிகூர்ந்தனர், என எழுதப்பட்டிருக்கிறது. (யோபு 38:4-7)
   iv. தேவன் மனிதனை சிருஷ்டித்து அவனைப் பூமியில் வைக்கும் முன்பாக தூதர்கள் சோதனை காலத்திற்காக பூமியில் வைக்கப்பட்டனர். (எசே 28:13) அந்த காலத்தில் சில தூதர்கள் தங்கள் அழகினால் மேட்டிமையடைந்து விழுந்து போயினர். மற்றொரு கூட்டத்தார் தேவன் அவர்களுக்குக் கொடுத்த எல்லாவற்றினிமித்தமும் மேட்டிமையுள்ளவர்களாயினர்.

எனவே அவர்களும் விழுந்து போயினர். விழுந்து போன தூதர்கள் பிசாசுகளாய் மாறினர் (எசே 28:12-17) (ஏசாயா 14:12-15). எனவே பூமி ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிற்று.

v. பின்பு தேவன் பூமியை புதுப்பித்து, மனுஷனை சிருஷ்டித்து அவனை ஏதேன் தோட்டத்தில் வைத்தார்.

vi. தாங்கள் சோதிக்கப்படுகையில் உண்மையுள்ளவர்களாயும் ஜெயங்கொண்டவர்களாகவும் விளங்கிய தூதர்கள் இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களுக்குப் பணிவிடை ஆவிகளாகத் தொடர்ந்து காணப்படுகின்றனர்.

## V. *விரிவாகவும் தெளிவாகவும் விடையளி*: (15 Marks)

1. அறியாமையின் காலத்தை பற்றி எழுது,

1. மனிதன் சிருஷ்டிக்கப்பட்டது முதல், அவனுடைய கீழ்படியாமையினால் அவன் விழுந்தது வரையுள்ள காலம் அறியாமையின் காலம் என அழைக்கப்படுகிறது.
2. தூதர்களின் விழுகையினால் ஒழுங்கின்மையும், வெறுமையுமான பூமி தேவனால் புதுப்பிக்கப்பட்டது அல்லது சீர்திருத்தப்பட்டது.
3. இப்பூமியில் மனிதனைத் தேவன் தமது சாயலாகவும், ரூபத்தின்படியேயும் சிருஷ்டித்தார். தேவன் தமது ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினபோது, மனிதன் ஜீவாத்துமாவானான்.
4. மச்சங்கள், பறவைகள், ஆடுமாடுகள், மற்றும் ஜீவராசிகள் ஆகியவற்றின் மீதும் தேவன் அவனுக்கு ஆளுகையைக் கொடுத்தார்.
5. ஏதேன் தோட்டத்தி- ருந்த விருட்சங்கள், அவனது சரீரம், ஆத்துமா இவற்றின் வளர்ச்சிக்குப் போதுமானவையாயிருந்தன.
6. தோட்டத்தின் நடுவில் ஜீவ விருட்சம் இருந்தது. மனிதன் ஜீவ விருட்சத்தின் கனியைப் புசித்து ஜீவனில் வளரவேண்டும் என்பது தேவனுடைய திட்டமாயிருந்தது.
7. நன்மை தீமை அறியத்தக்க விருட்சமும் தோட்டத்தின் நடுவில் இருந்தது. மனிதன் அதைப் புசிக்கக் கூடாது என்றும், அதைப் புசிக்கும் நாளிலே அவன் சாகவே சாவான் என்றும் கர்த்தர் கட்டளையிட்டிருந்தார். (ஆதி 2:17)
8. ஏவாள், ஆதாமின் விலா எலும்பினால் உண்டாக்கப்பட்டு, அவனுக்கு ஏற்ற துணையாகக் கொடுக்கப்பட்டாள். ஆதாமும் ஏவாளும் தேவனுடைய சமூகத்தை இன்பமாய் அனுபவித்து அவரோடு ஐக்கியம் உள்ளவர்களாயிருந்தனர். பூமி ஆசீர்வதிக்கப்பட்டதாயிருந்தது. எவ்வித சாபமோ, தீமையோ அதில் காணப்படவில்லை. அங்கே முள்ளும், குருக்கும் இருக்கவில்லை. தேவன் தோட்டத்தில் உலாவி, அவர்களோடு உறவாடினார்.
9. தேவனுக்கும் மனிதனுக்கும், மனிதனுக்கும் மனிதனுக்கும், மனிதனுக்கும் மிருகங்களுக்கும், மிருகங்களுக்கும் மிருகங்களுக்கும் இடையே பூரண சமாதானம் இருந்தது. (ஆதி 2 : 25)
10. மனிதனுக்கு ஒரு சுயாதீன சித்தம் கொடுக்கப்பட்டிருந்தது. எனவே அவன் மிருகங்களைக் காட்டிலும் மேன்மையான சிருஷ்டியாயிருக்கிறான்.
11. தேவன் மனிதனைச் செம்மையானவனாக உண்டாக்கினார். ஆனால் அவன் விலக்கப்பட்ட கனியைப் புசித்த போது, தேவனுடைய சகல ஆசீர்வாதங்களையும், அவன் அடைந்திருக்க வேண்டிய பூரணத்தையும் இழந்தான்.
12. பூமியுங்கூட சாபத்திற்குட்பட்டது. (ஆதி 3:17-19) சாத்தான் இவ்வுலகத்தின் அதிபதியானான்.

## VI. *போதனை*: (2 Mark)

பாவஞ்செய்த தூதர்களையும், தன்னுடைய கீழ்ப்படியாமையின் செய- ன் நிமித்தம் பாவத்திற்குள்ளான முதலாவது மனுஷனாகிய ஆதாமையும் தேவன் தப்பவிடாதிருக்க, பூரணத்தின் உன்னத உபதேசங்களைப் பெற்றுக்கொண்டிருக்கும் நாம், இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்துக் கவலையற்றவர்களாயிருந்தால், நமக்கும் தப்பித்துக்கொள்ள மார்க்கமே இராது. எனவே, நாம் கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளாக நடந்து கொள்ள வேண்டும்.

*********

வகுப்பு 10 | பாடம்-5 | ஞாயிறு பள்ளி

# காலங்கள்

(பகுதி - III)

**I.** ***மனப்பாட வசனம்***: (2 Marks)

ஊக்கா 21:34-36

உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும், வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்.

பூமியிலெங்கும் குடியிருக்கிற அனைவர்மேலும் அது ஒரு கண்ணியைப் போல வரும்.

ஆகையால் இனிச் சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள் என்றார்.

**II.** ***ஓரிரு வாக்கியங்களில் விடையளி***: (2 Marks)

1. பூர்வகால உலகம் என்பது யாது?
   பூர்வகால உலகம் என்பது மனிதன் விழுந்தது முதல் நோவாவின் காலத்தில் மனிதவர்க்கம் ஜலப்பிரளயத்தினால் அழிக்கப்பட்ட வரையிருந்த உலகம் ஆகும்.(2 பேதுரு 2:5)

2. தேவகுமாரர் என்பவர்கள் யார்? மனுஷ குமாரர் என்பவர்கள் யார்?
   ஆதாமின் குமாரனாகிய சேத்தின் நாட்களில் மனுஷர் கர்த்தருடைய நாமத்தைக் தொழுது கொள்ள ஆரம்பித்தார்கள். (ஆதி 4 : 26) இச்சொற்றொடர் மூலபாஷையாகிய எபிரெய மொழியில் அவர்கள் தங்களைக் கர்த்தருடைய நாமத்தைக் கொண்டு அழைத்துக் கொள்ள ஆரம்பித்தார்கள் என்று பொருள்படுகிறது. எனவே, அவர்கள் தேவகுமாரர் என அழைக்கப்பட்டனர். (ஆதி 4:26)
   காயீனின் பிள்ளைகள் மனுஷகுமாரர் என்று அழைக்கப்பட்டனர். (ஆதி 4:21)

3. மனுஷகுமாரர் எப்படிப்பட்டவர்களாயிருந்தார்கள்?
   மனுஷகுமாரர் சௌந்தரியமுள்ளவர்களாகவும், திறமையுள்ளவர்களாகவும், கின்னரம் நாகசுரம் போன்ற இசைக் கருவிகளை இசைக்கக் கூடியவர்களாகவும், பித்தளை இரும்பு முத- யவற்றின் தொழிலாளர்களாகவும் இருந்தனர். (ஆதி 4:21,22)

4. விழுந்து போன சந்ததியார் யார்?
   தேவகுமாரர் தங்கள் ஆவிக்குரிய நிலவரத்தை இழந்து போக ஆரம்பித்தபோது, அவர்கள் மனுஷகுமாரத்திகளின் அழகினால் மயக்கப்பட்டு, வஞ்சிக்கப்பட்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்து கொண்டார்கள். அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் விழுந்துபோன சந்ததியாயினர். (ஆதி 6:2)

5. தேவன் பூமியை ஜலப்பிரளயத்தினால் அழிக்க தீர்மானித்ததின் காரணம் என்ன?
   தேவன் பூமியை பார்த்த போது, அது சீர்கெட்டதாயிருந்தது. கொடுமையினால் நிறைந்திருந்தது. மாம்சமான யாவரும் பூமியின் மேல் தங்கள் வழியைக் கெடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய இருதயத்தின் நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததாய் இருந்தது. எனவே பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக கர்த்தர் மனஸ்தாபப்பட்டார். ஆகவே, தேவன் பூமியை ஜலப்பிரளயத்தினால் அழிக்கத் தீர்மானித்தார். (ஆதி 6:5-7)

6. மெத்தூசலா, நோவா, ஆதாம் என்பவர்களின் வயதைக் குறிப்பிடுக:
   1. மெத்தூசலா - 969 வயது (ஆதி 5:27)
   2. நோவா - 950 வயது (ஆதி 9:29)
   3. ஆதாம் - 930 வயது (ஆதி 5:5)

7. கர்த்தர் ஜலப்பிரளயத்தினால் பூமியை அழித்தப் போது யாருடைய குடும்பம் பாதுகாக்கப்பட்டது? அவன் தன் காலத்தில் இருந்தவர்களுக்குள் எப்படிப்பட்டவனாயிருந்தான்?

நோவாவின் குடும்பம் பாதுகாக்கப்பட்டது. அவன் தன் காலத்தில் இருந்தவர்களுக்குள் நீதிமானும், உத்தமனுமாயிருந்தான். (11 பேருது 2:5) (ஆதி 6:9)

8. இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தில், மனுஷர் எவைகளில் கருத்துள்ளவர்களாயிருக்கிறார்கள்?

மனுஷர் தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தை அலட்சியம் செய்து, பூமிக்குரிய சிந்தையுள்ளவர்களாகி, புசிப்பது, குடிப்பது, உடுத்துவது, கட்டடங்கள் கட்டுவது, நடுவது, பெண்கொண்டு, கொடுப்பது இவற்றைக் குறித்து மட்டும் கருத்துள்ளவர்களாயிருக்கிறார்கள். (மத் 25:37-39)

9. "மனுஷ குமாரன் பூமியில் வரும்போது விசுவாசத்தைக் காண்பாரோ" என கர்த்தராகிய இயேசு கேட்டக் காரணம் என்ன?

ஜனங்கள் தேவனுடைய இராஜ்யத்தையோ, அவருடைய ஆசீர்வாதங்களையோ தேடுவதில்லை. ஜீவனுள்ள தேவனையும், அவருடைய வசனத்தையும், அவருடைய இரட்சிப்பையும் விசுவாசிப்பது ஜனங்களுக்கு கடினமாயிருக்கிறது. எனவே கர்த்தராகிய இயேசு, 'மனுஷகுமாரன் வரும் போது பூமியில் விசுவாசத்தை காண்பாரோ' என்று கேட்டார். (லூக்கா 18:8)

10. கர்த்தராகிய இயேசு தம்மைத் தாமே எதற்காக ஒப்புக்கொடுத்தார்? ஒரு வசன ஆதாரம் தருக,

நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று அதாவது லௌகீகத்தினின்று விடுவிக்கும் பொருட்டாக இயேசு தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார். (கலா 1:4)

11. இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தி- ருந்து கர்த்தர் ஒரு கூட்டம் ஜனங்களை ஏன் வேறுபிரிக்கிறார்? அவர்களை எவ்வாறு பரிசுத்தமாக்குகிறார்?

இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தின் மேல் வரவிருக்கும் மகா உபத்திரவத்திற்குத் தப்பித்துக் கொள்ளும்படியாக கர்த்தர் ஒரு கூட்டம் ஜனங்களை வேறுபிரிக்கிறார். அவர்களை தம்முடைய (1) இரத்தத்தினாலும் (2) வசனத்தினாலும் (3) ஆவியினாலும் பரிசுத்தமாக்குகிறார். (பாடத்திட்டம்)

12. இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சம் எப்பொழுது உண்டானது? எதுவரைக்கும் தொடர்ந்திருக்கும்?

நோவாவின் நாட்களில், சகல ஜீவராசிகளும் ஜலப்பிரளயத்தினால் அழிக்கப்பட்ட பின்பு, உலகம் பாவத்திலேயே தொடர்ந்திருந்தது. இவ்விதம் இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சம் உண்டானது. இது ஆயிர வருட அரசாட்சி துவங்குமட்டும் தொடர்ந்திருக்கும். (பாடத்திட்டம்)

13. நாம் ஏன் எப்பொழுது ஜெபம் பண்ணி விழித்திருக்க வேண்டும்?

உலகத்தின் மீது வரவிருக்கும் பெரிதான அழிவிற்குத் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்பதற்குப் பாத்திரவான்களாய் எண்ணப்படுவதற்கு நாம் எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருக்க வேண்டும்.(லூக்21:36)

## III. <u>*சுருக்கமான விடையளி*</u>: (5 Marks)

1. ஜலப்பிரளயம் வந்து எவ்வாறு பூர்வ உலகத்தை அழித்தது? அதில் நோவாவும், அவர் குடும்பமும் எவ்வாறு பாதுகாக்கப்பட்டனர் என்பதை விவரி.

நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள் நீதிமானும், உத்தமனுமாயிருந்தான் என்று கர்த்தர் கண்டார். அவனுக்குக் கர்த்தருடைய கண்களில் கிருபையும் தயவும் கிடைத்தது. தேவன் அவனிடம் தாம் பூமியை ஜலப்பிரளயத்தினால் அழிக்கப் போவதாகவும், அவனும் அவன் குடும்பமும் அழிவி- ருந்து தப்பித்துக் கொள்ள ஒரு பேழையை உண்டாக்க வேண்டுமென்றும் சொன்னார்.

நோவா தேவன் தனக்குச் சொன்னதை விசுவாசித்து பேழையை ஆயத்தம் பண்ணினான். அதைக்கட்டி முடிக்கும் நாள் வரைக்கும், அவன் தேவனுடைய நீதியை பிரசங்கித்து விரைவில் வரப்போகிற ஜலப்பிரளயத்தைக் குறித்து ஜனங்களை எச்சரித்தான். (11பேதுரு 2:5 ; எபி 11:7) தேவன் நோவாவிடம் கூறியது போலவே, முழு பூமியின் மீதும் பெரிய ஜலப்பிரளயம் வந்து பூர்வ உலகத்தை அழித்தது. நோவாவும் அவன் குடும்பத்தாரும் காக்கப்பட்டதுடன், ஜீவனுள்ள சிருஷ்டிகளில் ஒவ்வொரு வகையிலும் சிலவும் பேழையில் காக்கப்பட்டன.

2. இப்பொழுதிருக்கிற காலத்தை பொல்லாத பிரபஞ்சம் என அழைக்க காரணம் என்ன?

நோவா, லோத்து என்பவர்களின் நாட்களி- ருந்தது போலவே இப்பொழுதிருக்கிற உலகம் பாவத்தால் நிறைந்திருக்கிறது. கர்த்தராகிய இயேசுவின் இரண்டாம் வருகையை விசுவாசியாது தங்கள் சுய இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர் இருப்பார்கள். (11 பேதுரு 3:3,4) இக்காலத்தில் மனுஷர் காமவிகாரத்தையும், துர் இச்சைகளையும் நடப்பித்து, மதுபானம் பண்ணி, களியாட்டு செய்து வெறிகொண்டு அருவருப்பான விக்கிரகாராதனை போன்றவற்றை செய்கின்றனர். (1பேதுரு 4:3). அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதற்றவர்களாய் செவித்தினவுள்ளவர்களாகி சத்தியத்துக்கு செவியை விலக்குகின்றனர். (11 தீமோ 4:3,4). மனுஷர் தற்பிரியராயிருக்கின்றனர். (11 தீமோ 3:2). மனுஷர் இப்படிப்பட்ட பொல்லாத காரியங்களை செய்வதினால், இக்காலம் பொல்லாத பிரபஞ்சம் என அழைக்கப்படுகிறது.

3. இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தில் வரவிருக்கும் சில சம்பவங்களைக் குறிப்பிடுக,

   i. இக்காலத்தில் அறிவு பெருகிப்போம் (தானி 12:4)
   ii. யுத்தங்களும், பூமியதிர்ச்சிகளும், பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் உண்டாகும். (லூக் 21:9-11)
   iii. அத்திமரம் துளிர்க்கும், அதாவது யூதர்கள் தங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பி வந்து செழித்தோங்குவார்கள். (லூக் 21:29-31)
   iv. பாவம் அதிகமாகப் பெருகி, உலகத்தில் கலவரங்கள் உண்டாயிருக்கும்.

## IV. <u>*விரிவாகவும் தெளிவாகவும் விடையளி*</u>: (15 Marks)

1. பூர்வ கால உலகம் பற்றி வசன ஆதாரத்துடன் விரிவாக எழுது,

இது மனிதன் விழுந்தது முதல் நோவாவின் காலத்தில் மனிதவர்க்கம் ஜலப்பிரளயத்தினால் அழிக்கப்பட்டது வரையிருந்த உலகம் ஆகும். (11பேதுரு 2:5). ஆதாமின் குமாரனாகிய சேத்தின் நாட்களில் "மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ள ஆரம்பித்தார்கள்''. (ஆதி 4 : 26). இச்சொற்றொடெர் மூலபாஷையாகிய எபிரெய மொழியில் ''அவர்கள் தங்களைக் கர்த்தருடைய நாமத்தைக் கொண்டு அழைத்துக் கொள்ள ஆரம்பித்தார்கள்" என்று பொருள்படும். எனவே அவர்கள் தேவகுமாரர் என அழைக்கப்பட்டனர். காயீனின் பிள்ளைகள் 'மனுஷகுமாரர்' என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் சௌந்தரியமுள்ளவர்களாகவும், திறமை வாய்ந்தவர்களாகவும், கின்னரம், நாகசுரம் போன்ற இசைக் கருவிகளை இசைக்கக் கூடியவர்களாகவும், பித்தளை இரும்பு முத- யவற்றின் தொழிலாளர்களாகவும் இருந்தனர். (ஆதி 4:21,22)

தேவகுமாரர் தங்கள் ஆவிக்குரிய நிலவரத்தை இழந்து போக ஆரம்பித்தபோது, அவர்கள் மனுஷகுமாரத்திகளின் அழகினால் மயக்கப்பட்டு, வஞ்சிக்கப்பட்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துகொண்டார்கள். அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் விழுந்துபோன சந்ததியாயிருந்தனர். அவர்களுடைய இருதயத்தின் நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததாயிருந்தது. (ஆதி6:5) அந்நாட்களில் மனுஷர் நீண்ட காலம் ஜீவித்தார்கள். மெத்தூசலா, நோவா, ஆதாம் ஆகியோர் மரித்தபோது முறையே 969, 950, 930 வயதுள்ளவர்களாய் இருந்தார்கள். தேவன் பூமியைப் பார்த்தபோது, அது சீர்கெட்டதாயிருந்தது. கொடுமையினால் நிறைந்திருந்தது. மாம்சமான யாவரும் பூமியின்மேல் தங்கள் வழியைக் கெடுத்துக் கொண்டிருந்தார்கள். எனவே, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்திற்கு விசனமாயிருந்தது. எனவே, தேவன் பூமியை ஒரு ஜலப்பிரளயத்தினால் அழிக்கத்தீர்மானித்தார் (ஆதி 6:6,7, 11-13).

நோவா, தன் காலத்தில் இருந்தவர்களுக்குள் நீதிமானும் உத்தமனுமாயிருந்தான் என்று கர்த்தர் கண்டார். அவனுக்குக் கர்த்தருடைய கண்களில் கிருபையும் தயவும் கிடைத்தது. தேவன் அவனிடம், தாம் பூமியை ஜலப்பிரளயத்தினால் அழிக்கப்போவதாகவும், அவனும் அவன் குடும்பமும் அழிவி- ருந்து தப்பித்துக்கொள்ள ஒரு பேழையை உண்டாக்க வேண்டுமென்றும் சொன்னார். நோவா, தேவன் தனக்குச் சொன்னதை விசுவாசித்து பேழையை ஆயத்தம் பண்ணினான். அதைக் கட்டி முடிக்கும் நாள் வரைக்கும் அவன் தேவனுடைய நீதியைப் பிரசங்கித்து, விரைவில் வரப்போகிற ஜலப்பிரளயத்தைக் குறித்து ஜனங்களை எச்சரித்தான்.(11பேதுரு 2:5 ; எபி 11:7)

தேவன் நோவாவிடம் கூறியதுபோலவே, முழு பூமியின் மீதும் பெரிய ஜலப்பிரளயம் வந்து பூர்வ உலகத்தை அழித்தது. நோவாவும் அவன் குடும்பத்தாரும் காக்கப்பட்டதுடன், ஜீவனுள்ள சிருஷ்டிகளில் ஒவ்வொரு வகையிலும் சிலவும் பேழையில் காக்கப்பட்டன.

2. இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தை பற்றி விவரி,

நோவாவின் நாட்களில், சகல ஜீவராசிகளும் ஜலப்பிரளயத்தினால் அழிக்கப்பட்ட பின்பு, உலகம் பாவத்திலேயே தொடர்ந்திருந்தது. இவ்விதம் இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சம் உண்டாயிருக்கிறது. நோவா, லோத்து என்பவர்களின் நாட்களி- ருந்தது போலவே

இப்பொழுதிருக்கிற உலகம் பாவத்தால் நிறைந்திருக்கிறது. மனுஷர் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தை அலட்சியம் செய்து, பூமிக்குரிய சிந்தையுள்ளவர்களாகி, புசிப்பது, குடிப்பது, உடுத்துவது, கட்டடங்கள் கட்டுவது, நடுவது, பெண்கொண்டு கொடுப்பது இவற்றைக் குறித்து மட்டும் கருத்துள்ளவர்களாயிருக்கிறார்கள். ஜனங்கள், தேவனுடைய இராஜ்யத்தையோ அவருடைய ஆசீர்வாதங்களையோ தேடுவதில்லை. எனவே கர்த்தராகிய இயேசு, 'மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ' என்று கேட்டார். (லூக் 18:8). இந்நாட்களில் ஜீவனுள்ள தேவனையும், அவருடைய வசனத்தையும், அவருடைய இரட்சிப்பையும் விசுவாசிப்பது ஜனங்களுக்குக் கடினமாயிருக்கிறது. கர்த்தராகிய இயேசுவின் இரண்டாம் வருகையை விசுவாசியாது தங்கள் சுய இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர் இருப்பார்கள் என்று நாம் வாசிக்கிறோம். (11பேதுரு 3:3,4). இக்காலத்தில், மனுஷர் காமவிகாரத்தையும் துர்இச்சைகளையும் நடப்பித்து, மதுபானம்பண்ணி, களியாட்டுச் செய்து, வெறிக்கொண்டு, அருவருப்பான விக்கிரகாராதனை போன்றவற்றைச் செய்கின்றனர். (1பேதுரு 4:3). அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதற்றவர்களாய் செவித்தினவுள்ளவர்களாகி சத்தியத்துக்குச் செவியை விலக்குகின்றனர். (11 தீமோ 4:3,4). மனுஷர் தற்பிரியராயிருக்கின்றனர் (11தீமோ 3:2). இக்காலத்தில் அறிவுப் பெருகிப்போம் (தானி 12:4). யுத்தங்களும், பூமியதிர்ச்சிகளும், பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் உண்டாகும். (லூக் 21:9-11). அத்திமரம் துளிர்க்கும், அதாவது யூதர்கள் தங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பி வந்து செழித்தோங்குவார்கள். (லூக் 21:29-31) பாவம் அதிகமாகப் பெருகி, உலகத்தில் கலவரங்கள் உண்டாயிருக்கும்.

இக்காலத்தில், இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தின்மேல் வரவிருக்கும் மகா உபத்திரவத்திற்குத் தப்பித்துக்கொள்ளும்படியாக, கர்த்தர் ஒரு கூட்டம் ஜனங்களை வேறுபிரித்து, அவர்களைத் தம்முடைய இரத்தத்தினாலும் வசனத்தினாலும் ஆவியினாலும் பரிசுத்தமாக்குகிறார். நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று அதாவது லௌகீகத்தினின்று விடுவிக்கும் பொருட்டாக கர்த்தராகிய இயேசு தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் (கலா 1: 4). எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது அவருடைய சித்தமாயிருக்கிறது. இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சம் ஆயிர வருட அரசாட்சி துவங்குமட்டும் தொடர்ந்திருக்கும்.

## V. ***போதனை***: (2 Marks)

பூரணமாக்கப்பட்ட தம்முடைய பரிசுத்தவான்களைச் சேர்க்கும்படியாக கர்த்தராகிய இயேசு சீக்கிரமாக வருகிறார். உலகத்தின் மீது வரவிருக்கும் மகா உபத்திரவத்திற்குத் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்பதற்குப் பாத்திரவான்களாய் எண்ணப்படுவதற்கு, நாம் எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருக்க வேண்டும்.

***********

வகுப்பு 10

பாடம்-6

# காலங்கள்

(பகுதி - IV)

**I.** ***மனப்பாட வசனம்***: (2 Marks)

வெளி 21: 1-3

பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று.

யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது.

மேலும், பரலோகத்தி- ருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.

**II.** ***ஓரிரு வார்த்தைகளில் விடையளி***: (1 Mark)

1. பரிசுத்தவான்களின் இரஜ்யம் என்று அழைக்கப்படுவது ஏது?
   ஆயிர வருட அரசாட்சி (பாடத்திட்டம்)

2. பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு எது?
   மரணம் (1 கொரி 15:26)

3. உயிர்த்தெழுத- ன் கடைசி இரு வரிசைகள் எப்போது நடைபெறும்?
   உயிர்த்தெழுத- ன் கடைசி இரு வரிசைகள் ஆயிரவருட அரசாட்சிக்குப் பின்பு நடைபெறும். (பாடத்திட்டம்)

4. பிந்தின நித்தியத்தில் வாசம் பண்ணுகிறவர்கள் எந்த சரீரத்தில் காணப்படுவார்கள்?
   உயிர்த்தெழுந்த சரீரத்தில் காணப்படுவார்கள். (1 கொரி 15:44)

**III.** ***ஓரிரு வாக்கியங்களில் விடையளி***: (2 Marks)

1. ஆயிரவருட அரசாட்சி என்பது என்ன?
   கிறிஸ்துவும் அவருடைய பரிசுத்தவான்களும் ஏழுவருட உபத்திரவகாலத்திற்கு பின்பு, புதுப்பிக்கப்பட்ட பூமியில் ஆயிரம் வருடம் ஆட்சி செய்யும் காலமே ஆயிரவருட அரசாட்சியாகும். (பாடத்திட்டம்)

2. ஆயிர வருட அரசாட்சியை குறிக்கும் வேறு இருபெயர்களைக் குறிப்பிடுக,
   இனி வரும் உலகம் (எபி 2:5)
   பரிசுத்தவான்களின் இராஜ்யம் (வெளி 20:6)

3. ஆயிரவருட அரசாட்சியில் இந்த பூமியை யார் அரசாளுவார்கள்? யார் குடிமக்களாயிருப்பார்கள்?
   முதலாம் உயிர்த்தெழுத- ல் பங்குபெறும் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுடனும், புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுடனும் இயேசு ஆயிரம் வருடம் இப்பூமியில் அரசாளுவார். (வெளி 20:4,6)
   முத்திரை போடப்பட்ட இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் யூதர்களும், உபத்திரவ காலத்தின் முடிவில் உயிருடனிருக்கும் புறஜாதியாரில் மீதியானவர்களும் அதில் குடிமக்களாயிருப்பார்கள். (சகரியா 14:16; எரேமியா 4:27; ஏசாயா 24:6)

4. ஆயிரம் வருட அரசாட்சியின் போது சாத்தான் எங்கே இருப்பான்?
   சாத்தான் கட்டப்பட்டு, அகாதமான பாதாளத்திலே தள்ளப்பட்டிருப்பான். (வெளி 20:2)

5. ஏசாயா அதி. 65, 66 இவற்றில் குறிப்பிடப்பட்டடுள்ள புதிய வானமும், புதிய பூமியும், வெளிப்படுத்தின விசேஷம் 21-ல் குறிப்பிடப்பட்டுள்ள புதிய வானமும் புதிய பூமியையும் ஒன்றா? அதற்குரிய விளக்கத்தை எழுது,

ஏசாயாவில் குறிப்பிடப்பட்டுள்ள புதிய வானமும், புதிய பூமியும் வெளிப்படுத்த- ல் குறிப்பிடப்பட்டிருப்பதும் ஒன்றல்ல. ஏசாயாவில் குறிப்பிடப்பட்டுள்ளது ஆயிர வருட அரசாட்சியின் போதுள்ள புதிய வானமும் புதிய பூமியையும். வெளிப்படுத்த- ல் குறிப்பிடப்பட்டுள்ளது, நித்தியத்திலுள்ள புதிய வானத்தையும் புதிய பூமியையும். (பாடத்திட்டம்)

6. உயிர்த்தெழுத- ன் கடைசி இரு வரிசைகள் யாவை?

உயிர்த்தெழுத- ன் கடைசி இரு வரிசைகள்

i. நீதிமான்களின் உயிர்த்தெழுதல்
ii. துன்மார்க்கரின் உயிர்த்தெழுதல் ஆகும். (வெளி 20:13-15 ; மத் 25:31-46)

7. பிந்தின நித்தியத்தில் இராஜ்யத்தை யார், யாருக்கு ஒப்புக்கொடுப்பார்?

குமாரனாகிய கிறிஸ்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக் கொடுத்து அவருக்கு கீழ்ப்பட்டிருப்பார். (1 கொரி 15:24-28)

## IV. *<u>சுருக்கமான விடையளி</u>*: (5 Marks)

1. ஆயிரம் வருட அரசாட்சியின் போது பூமியின் தன்மை எவ்வாறு இருக்கும்?
   i. ஆயிர வருட அரசாட்சியின் போது பூமி சாபத்தினின்றும் சத்துருத்துவத்தினின்றும் விடுதலை பெற்று ஏதேனின் பூரணத்திற்கு திரும்பவும் கொண்டு வரப்படும். (ஏசா 55:13 ; 11:6-9 ; 35:9 ; 65:25 ; ரோ 8:19-21)
   ii. சாத்தான் கட்டப்பட்டு ஆயிரம் வருடங்களுக்கு அகாதமான பாதாளத்திலே தள்ளப்பட்டிருப்பான். (வெளி 20:2)
   iii. மிருகத்திற்கும் மிருகத்திற்கும் இடையேயும், மனுஷனுக்கும் மனுஷனுக்குமிடையேயும், மனுஷனுக்கும் மிருகங்களுக்கும் இடையேயும் உள்ள சத்துருத்துவம் நீக்கப்பட்டு, பூமி தன் சாபத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, பூரண சமாதானம் நிலவும்.
   iv. பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். (ஏசா 11:9 ; 2:3 ; மீகா 4:2)
   v. ஜனங்கள் நீண்ட ஆயுசுள்ளவர்களாயிருப்பார்கள். விருட்சத்தின் நாட்களைப் போல மனுஷரின் நாட்கள் இருக்கும். (ஏசா 65:22)

2. உயிர்த்தெழுத- ன் கடைசி இரு வரிசைகள் நடந்த பின்பு, அதை தொடர்ந்து சம்பவிப்பவைகள் யாவை?
   i. வெள்ளை சிங்காசனத்திற்கு முன்பாக நீதிமான்கள் முதலாவதும், துன்மார்க்கர் பின்பும் நியாயந்தீர்க்கப்படுவார்கள். (வெளி 20:11-15)
   ii. ஆயிர வருட அரசாட்சியில் காணப்பட்ட புதிய வானமும் புதிய பூமியும் ஒழிந்து போகும் (ஏசா 65:17). முற்றிலும் புதியவையான புதிய வானமும் புதிய பூமியும் காணப்படும். (வெளி 21:1)
   iii. சமுத்திரமும் இல்லாமற் போகும். இரவோ, சாபமோ, துக்கமோ, அலறுதலோ, வருத்தமோ ஒன்றுமிராது. (வெளி 21:4)
   iv. அருவருப்பை நடப்பிக்கிற ஒன்றுமிராது. (வெளி 21:27)
   v. எல்லாரும் உயிர்த்தெழுந்த சரீரத்தில் காணப்படுவார்கள். (1 கொரி 15:44)
   vi. நித்திய இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு, அது பிதாவாகிய தேவனுக்கு ஒப்புக்கொடுக்கப்படும். (1கொரி 15:24-28)

3. பிந்தின நித்தியத்தில் இல்லாதவைகள் யாவை?
   i. ஆயிர வருட அரசாட்சியில் காணப்பட்ட புதிய வானமும் புதிய பூமியும் ஒழிந்து போகும். (வெளி 21:1)
   ii. சமுத்திரம் இல்லாமற் போகும். (வெளி 21:1)
   iii. இரவோ, சாபமோ, துக்கமோ, அலறுதலோ, வருத்தமோ ஒன்றுமிராது. (வெளி 21:4)
   iv. தீட்டுள்ளதும், அருவருப்பையும், பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் இராது.(வெளி 21:27)

## V. *<u>விரிவான விடையளி</u>*: (10 Marks)

1. பிந்தின நித்தியம் பற்றி எழுது?
   i. ஆயிர வருட அரசாட்சி முடியும்போது சாத்தான் தன் காவ- - ருந்து விடுதலையாகி, பூமியெங்கும் உள்ளதான மனுஷரைத் தன்னோடு கூட்டிக்கொண்டு தேவனுக்கும்

பரிசுத்தவான்களுக்கும் விரோதமாக யுத்தம் பண்ணும் படியாகப் புறப்படுவான். இந்த யுத்தத்தில் இயேசுவும் அவருடைய பரிசுத்தவான்களும் ஜெயம் பெறுவார்கள்.

ii. கடைசி சத்துருவாகிய மரணம் பரிகரிக்கப்பட்டிருக்கும் (1 கொரி 15 : 26). சாத்தான் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே தள்ளப்படுவான் (வெளி. 20 : 10).

iii. நீதிமான்களின் உயிர்த்தெழுதல் துன்மார்க்கரின் உயிர்த்தெழுதல் என அழைக்கப்படுகிற உயிர்த்தெழுத- ன் கடைசி இரு வரிசைகளும் நடைபெறும்.

iv. அதன்பின்பு, வெள்ளைச் சிங்காசனத்திற்கு முன்பாக நீதிமான்கள் நியாயந்தீர்க்கப்பட்டு, உலகம் உண்டானது முதல் அவர்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்திற்கும், துன்மார்க்கர் நியாயந்தீர்க்கப்பட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினிக்கும் செல்வார்கள். (மத் 25:34,41)

v. இதன்பின்பு நித்தியம் ஆரம்பமாகும். ஆயிரவருட அரசாட்சியில் காணப்பட்ட புதிய வானமும் புதிய பூமியும் (ஏசாயா 65 :17) ஒழிந்து போகும். முற்றிலும் புதியவையான புதிய வானமும் புதிய பூமியும் காணப்படும். (வெளி 21:1)

vi. சமுத்திரமும் இல்லாமற்போகும். இரவோ, சாபமோ, துக்கமோ, அலறுதலோ, வருத்தமோ ஒன்றுமிராது. (வெளி 21:4) இதில் தீட்டுள்ளதும், அருவருப்பையும், பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றுமிராது. (வெளி 21:27)

vii. எல்லோரும் உயிர்த்தெழுந்த சரீரத்தில் காணப்படுவார்கள். (1 கொரி 15:44). இதோடு நித்திய இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு அது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவால் தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ஒப்புக்கொடுக்கப்படும் (1 கொரி 15:24-28).

இவ்வாறாக பிந்தின நித்தியத்தில், மனிதனைக் குறித்த தேவனுடைய நோக்கம் பூரணமாய் நிறைவேறும்.

## VI. *விரிவாகவும் தெளிவாகவும் விடையளி*: (15 Marks)

1. இனிவரும் உலகம் அல்லது ஆயிரவருட அரசாட்சிக் காலம் பற்றி விரிவாக எழுது,

இனிவரும் உலகம் அல்லது ஆயிரவருட அரசாட்சி என்பது ஏழுவருட உபத்திரவ காலத்திற்கு பின்பு கிறிஸ்துவும், அவருடைய பரிசுத்தவான்களும் புதுப்பிக்கப்பட்ட பூமியில் ஆயிரம் வருடம் அரசாட்சி செய்வதாகும். அது பரிசுத்தவான்களின் இராஜ்யம் எனவும் அழைக்கப்படுகிறது. (வெளி 11:15)

ஆயிர வருட அரசாட்சிக் காலத்தின் முக்கிய அம்சங்கள்:

i. இவ்வுலகத்தின் அரசாங்கங்களும், இராஜ்யங்களும் அழிக்கப்பட்டு, முதலாம் உயிர்த்தெழுத- ல் பங்குபெறும் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுடனும் புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுடனும் கர்த்தராகிய இயேசு ஆயிரம் வருடம் இப்பூமியில் அரசாளுவார். (வெளி 20:4,6)

ii. முத்திரை போடப்பட்ட லட்சத்து நாற்பத்து நாலாயிரம் யூதர்களும், (வெளி 7:4) உபத்திரவ காலத்தின் முடிவில் உயிருடனிருக்கும் புறஜாதியாரில் மீதியானவர்களும் அதில் குடிமக்களாயிருப்பார்கள். (சக 14:16, எரே 4:27, ஏசாயா 24:6)

iii. சாத்தான் கட்டப்பட்டு ஆயிரம் வருடங்களுக்கு அகாதமான பாதாளத்திலே தள்ளப்பட்டிருப்பான். (வெளி20:2)

iv. இந்தக்காலத்தில் சிருஷ்டிகள் ஏதேனின் பூரணத்திற்குத் திரும்பவும் கொண்டுவரப்படும். எனவே பூமி, சாபத்தினின்றும் சத்துருவத்துவதின்றும் விடுதலை பெற்றிருக்கும். (ஏசா 55:13, 11:6-9, 35:9, 65:25, ரோமர் 8:19-21)

v. மிருகத்திற்கும் மிருகத்திற்கும் இடையேயும், மனுஷனுக்கும் மனுஷனுக்கும் இடையேயும், மனுஷனுக்கும் மிருகங்களுக்கும் இடையேயும் உள்ள சத்துருத்துவம் நீக்கப்பட்டு, பூரண சமாதானம் நிலவும். (ஏசாயா 2:4, 11:6-8)

vi. பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். (ஏசாயா 11:9, 2:3, மீகா 4:2)

vii. ஜனங்கள் நீண்ட ஆயுசுள்ளவர்களாயிருப்பார்கள். (விருட்சத்தின் நாட்களைப் போல மனுஷரின் நாட்களிருக்கும்) (ஏசாயா 65:22)

இவ்வாறாக ஆயிரவருட அரசாட்சியில் இந்தப்பூமி ஏதேனின் சீரைத் திரும்பவும் பெற்றுக்கொள்ளும்.

## VII. *போதனை*: (2 Marks)

ஆதாம், ஏதேன் தோட்டத்தில் தனக்கிருந்த ஆசீர்வாதங்களை இழந்த பின்னர் உலகில் பாவம், அக்கிரமம், அநீதி ஆகியவை பெருகிற்று. இருப்பினும், இப்போதும் கூட தேவனுடைய நோக்கம் மாறாததாய், அவர், தாம் தெரிந்து கொண்ட ஒரு கூட்டம் ஜனங்களுக்குள் கிரியை செய்துகொண்டிருக்கிறார். இப்போது கிருபையின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு ஆதாம் இழந்துபோன சகல ஆசீர்வாதங்களும் திரும்பத் தரப்படும்.

***********

# ஆசரிப்புக் கூடாரம்

(பகுதி - I)

**I. *மனப்பாட வசனம்*:** (2 Marks)

பி- ப்பியர் 3:13,14

சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி,

கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்.

**II. *ஓரிரு வார்த்தைகளில் விடையளி*:** (1 Mark)

1. தேவன் எப்போதும் எங்கு வாசம் பண்ணும்படி விரும்புகிறார்?
   தேவன் எப்போதும் தம் ஜனங்களின் மத்தியில் வாசம் பண்ணும்படி விரும்புகிறார். (சங் 132:13,14)

2. தேவன் யார் மூலமாக தமக்காக ஒரு கூட்டம் ஜனங்களை தமக்கென்று பிரித்தெடுத்தார்?
   ஆபிரகாமின் மூலமாகவும், அவன் சந்ததி மூலமாகவும் ஒரு கூட்டம் ஜனங்களை தமக்கென்று பிரித்தெடுத்தார். (உபா 7:6-8)

3. இஸ்ரவேல் ஜனங்கள் எத்தனை வருடம் எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருந்தார்கள்?
   நானூறு வருடங்கள் (ஆதி 15:13

4. அடிமைத்தனத்தி- ருந்த இஸ்ரவேலரை தேவன் யார் மூலம் மீட்டார்?
   மோசேயின் மூலம் மீட்டார் (யாத் 3:10)

5. தேவன் தம் ஜனத்தின் மத்தியில் வாசம்பண்ணும்படியாய் ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்கும்படி யாரிடம் கூறினார்?
   தேவமனுஷனாகிய மோசேயிடம் கூறினார். (யாத் 25:8

6. ஆசாரிப்புக் கூடாரத்திலுள்ள மகா பரிசுத்த ஸ்தலம், பரிசுத்த ஸ்தலம், வெளிப்பிரகாரம் ஆகிய பகுதிகள் எவற்றால் பிரிக்கப்பட்டிருந்தது?
   திரைகளால் பிரிக்கப்பட்டிருந்தது. (எபி 9:2,3)

7. ஆசரிப்புக் கூடாரத்தில் மகா பரிசுத்த ஸ்தலத்தில் யார் பிரவேசித்து ஊழியம் செய்ய முடியும்?
   பிரதான ஆசாரியன். (எபி 9:7)

8. ஆசரிப்புக் கூடாரத்தில் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து யார் ஊழியம் செய்தார்கள்?
   பிரதான ஆசாரியனும், ஆசாரியர்களும் ஊழியஞ்செய்தார்கள். (எபி 9:6)

9. வெளிப் பிரகாரத்தில் யார் ஊழியஞ் செய்தார்கள்?
   வெளிப்பிரகாரத்தில் லேவியர்கள் பிரதான ஆசாரியனுக்கும், ஆசாரியர்களுக்கும் வாசஸ்தலத்தின் பணிவிடை வேலைகளில் உதவி செய்தனர். ( II நாளா 29:34)

10. ஆசரிப்புக் கூடாரவாசல் யாரைக் குறிக்கிறது?
    கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. (யோவான் 10:9)

**III. *ஓரிரு வாக்கியங்களில் விடையளி*:** (2 Marks)

1. ஏதேனில் தேவன் எவ்விதம் மனிதனோடு வாசம் செய்தார்?
   தேவன் எப்போதும் தம் ஜனங்களின் மத்தியில் வாசம் பண்ண விரும்புகிறார். அவர் முதலாம் மனுஷனாகிய ஆதாமை சிருஷ்டித்து, அவனை ஏதேன் தோட்டத்தில் வைத்தார். (ஆதி 2:8) ஏவாள் அவனுக்கு ஏற்ற துணையாகக் கொடுக்கப்பட்டாள். தேவன் அவர்களைத் தோட்டத்தில் சந்தித்தார். அவர்கள் தேவனோடு நெருங்கிய தொடர்பு கொள்ளக்கூடிய

இணையற்றதோர் சிலாக்கியமுள்ளவர்களாயிருந்தனர். இவ்விதம் தேவன் மனிதனோடுவாசம் செய்தார்.

2. ஆசரிப்புக் கூடாரத்தின் மாதிரி எங்கே யாருக்குக் கொடுக்கப்பட்டது? அதைப் பெற்றுக் கொள்ளும்படி அவன் என்ன செய்ய வேண்டியதாயிருந்தது?

ஆசரிப்புக் கூடாரத்தின் மாதிரி மோசேக்கு சீனாய் மலையில் தேவனால் கொடுக்கப்பட்டது. அதைப் பெற்றுக் கொள்ளும்படியாக மோசே சீனாய் மலையின் உச்சிக்குப் போய் நாற்பது நாள் புசியாமலும், குடியாமலும் தேவனுடைய சமூகத்தில் தனிமையாகத் தங்கியிருக்க வேண்டியதாயிருந்தது. (யாத் 24:18 ; 25:40)

3. தேவன் சபையைப் பற்றிய திட்டங்களை யாருக்கு வெளிப்படுத்துகிறார்?

தேவன் சபையைப் பற்றிய திட்டங்களை, தமக்கென்று வேறுபிரிக்கப்பட்டவர்களாக தங்கள் பூமிக்குரிய, மாம்சீகமான பாசங்களை விட்டு அவருடைய சமூகத்தில் ஜீவிக்கிற அப்போஸ்தலருக்கு வெளிப்படுத்துகிறார். (எபேசியர் 3:6 ; மத்தேயு 13:11)

4. ஆசாரிப்புக் கூடாரத்தைக் கட்டும் வேலை யார் யாருக்கு கொடுக்கப்பட்டது?

ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டும் வேலையானது பெசலெயே- டமும், அகோ- யாபிடமும், அதைச் செய்ய அறியும்படி கர்த்தரால் ஞானமும், புத்தியும் பெற்ற விவேக இருதயமுள்ளவர்களிடமும் கொடுக்கப்பட்டது. (யாத் 36:1,2)

5. ஆசரிப்புக் கூடாரத்தை உண்டாக்கும் வேலையில் மோசேக்கு உதவியாயிருக்கும்படி கர்த்தர் யாரை பேர் சொல்- அழைத்தார்?

கர்த்தர் பெசலெயேலைப் பேர் சொல்- அழைத்து, சகல வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கு வேண்டிய ஞானமும், புத்தியும், அறிவும் அவனுக்கு உண்டாக அவனை தேவ ஆவியினால் நிறைத்தார். (யாத் 31:2,5)

6. ஆசரிப்புக் கூடாரம் இஸ்ரவேல் புத்திரரால் மனப்பூர்வமாய் கொடுக்கப்பட்ட காணிக்கைகளால் கட்டப்பட்டது என்பது எதைக் காட்டுகிறது?

ஆசரிப்புக் கூடாரத்தை கட்ட தேவையான பொருட்களை காணிக்கையாக, மனப்பூர்வமாய் உற்சாகமாய் கொடுப்பவர்களிடத்தில் மாத்திரம் வாங்கும்படியாக கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டிருந்தார். அதன் படியே மோசே மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் கொடுப்பவர்களிடத்தி- ருந்து வாங்கிய காணிக்கைகளைக் கொண்டு ஆசரிப்புக் கூடாரத்தை உண்டாக்கினான். (யாத் 25:2) இது நாம் எவ்விதம் நம்மையும் நமக்குண்டான யாவையும் கர்த்தருக்கென்று மனப்பூர்வமாகவும், முழு இருதயத்தோடும் கொடுக்க வேண்டுமென கர்த்தர் எதிர்பார்க்கிறார் என்பதைக் காட்டுகிறது. (2 கொரி 8:5)

7. ஆசரிப்புக் கூடாரத்திற்கு எத்தனை வாசல்கள் இருந்தது? அதன் ஆவிக்குரிய கருத்து என்ன?

ஆசரிப்புக் கூடாரத்திற்கு ஒரே ஒரு வாசல் இருந்தது. இவ்வாசல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. இதி- ருந்து அவர் மூலமாக மாத்திரமே ஒருவர் நித்திய வாசஸ்தலங்களை அடைய முடியும் என்று நாம் அறிந்துகொள்கிறோம். (யோவான் 10:9)

8. தேவன் நமக்காக வைத்திருக்கும் உன்னதமானவைகளை பெற்றுக்கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும்? (அல்லது) ஆசரிப்புக் கூடாரம் பகுதி-I என்ற பாடத்தின் போதனையை எழுது,

தேவன் நமக்கென வைத்திருக்கும் மிகவும் உன்னதமானவற்றையும், சிறந்தவற்றையும் நாம் அடைந்து கொள்ள விரும்பினால், அதற்கான கிரயத்தைக் கொடுக்கவும், நம்முடைய சகல பூமிக்குரிய இலாபங்களையும், மேன்மைகளையும் மகிமையையும் விட்டுவிடவும் நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

## IV. ***சுருக்கமான விடையளி***: (5 Marks)

1. தம் ஜனத்தின் மத்தியில் தாம் வாசம் பண்ணும்படி தமக்கிருக்கும் வாஞ்சையை தேவன் எவ்விதம் வெளிப்படுத்தினார்?

தேவன் எப்போதும் தம் ஜனங்களின் மத்தியில் வாசம் பண்ணவேண்டும் என்ற வாஞ்சையுள்ளவராயிருந்தார். ஆகையால் தேவன் ஆதாமையும், ஏவாளையும் சிருஷ்டித்து, அவர்களை ஏதேன் தோட்டத்திலே வைத்து அவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். ஆனால் மனிதன் தன் கீழ்படியாமையினால் பாவத்தில் விழுந்தான். எனவே தேவன் அவனை தோட்டத்தை விட்டு துரத்த வேண்டியதாயிற்று. இருப்பினும், தம்முடைய ஜனத்தின் மத்தியில் வாசம் பண்ண வேண்டும் என்று தேவனுடைய வாஞ்சை தொடர்ந்திருந்தது. ஆகவே அவர் ஆபிரகாமின் மூலமாகவும், அவன் சந்ததியின் மூலமாகவும் ஒரு கூட்டம் ஜனங்களை - எகிப்து தேசத்தில் நானூறு வருடம்

அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேலரைப் பிரித்தெடுத்தார். (ஆதி 15 : 13). தேவன் அவர்களை விடுவித்து வனாந்தரத்திற்கு கொண்டு வந்து, தாம் அவர்கள் மத்தியில் வாசம் பண்ணும்படி தமக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்கும்படி மோசேயிடம் கூறினார். (யாத் 25:8)

இவ்வாறாக தம் ஜனத்தின் மத்தியில் தாம் வாசம்பண்ணும்படி தமக்கிருக்கும் வாஞ்சையை தேவன் வெளிப்படுத்தினார்.

2. ஆசரிப்புக்கூடாரம் எவற்றிற்கு நிழலாட்டமாயிருக்கிறது?

ஆசரிப்புக் கூடாரம் பின் வருவனவற்றிற்கு நிழலாட்டமாயிருக்கிறது:

i. கர்த்தராகிய இயேசு (யோவான் 1:14)
ii. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசி. (1 கொரி 3:16)
iii. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற சபை. (1 கொரி 3:9 ; எபேசி 2:19-22)
iv. நித்திய வாசஸ்தலங்கள் (புதிய எருசலேம், புதிய வானம், புதிய பூமி).(வெளி21:1-3)

3. ஆசரிப்புக் கூடாரம் எத்தனை பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தது? அவை யாவை? ஆசரிப்புக் கூடாரத்தில் எந்தெந்த பகுதிகளில் யார், யார் ஊழியம் செய்தனர்?

ஆசரிப்புக் கூடாரம் மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தது. அவை யாவன:

i. வெளிப்பிரகாரம்
ii. பரிசுத்த ஸ்தலம்
iii. மகா பரிசுத்த ஸ்தலம்

மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரதான ஆசாரியன் மாத்திரமே பிரவேசித்து ஊழியஞ் செய்ய முடியும். வெளிப் பிரகாரத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும், ஆசாரியர்கள் பிரவேசித்து ஊழியம் செய்தார்கள். வெளிப்பிரகாரத்தில் ஊழியஞ் செய்த லேவியர்கள் பிரதான ஆசாரியனுக்கும், ஆசாரியர்களுக்கும் வாசஸ்தலத்தின் பணிவிடை வேலைகளில் உதவி செய்தார்கள்.

## V. <u>*விரிவான விடையளி*</u>: (10 Marks)

1. தேவன் எப்போது தம் ஜனங்களின் மத்தியில் வாசம்பண்ண விரும்புகிறார் என்பதை நாம் எவ்வாறு அறியலாம்? விரிவாக எழுது,

தேவன் எப்போதும் தம் ஜனங்களின் மத்தியில் வாசம் பண்ணவிரும்புகிறார். எனவே, முதலாம் மனுஷனாகிய ஆதாமை சிருஷ்டித்து, அவனை ஏதேன் தோட்டத்தில் வைத்தார். (ஆதி 2:8) ஏவாள் அவனுக்கு ஏற்ற துணையாகக் கொடுக்கப்பட்டாள். தேவன் அவர்களைத் தோட்டத்தில் சந்தித்தார். அவர்கள் தேவனோடு நெருங்கிய தொடர்பு கொள்ளக்கூடிய இணையற்றதோர் சிலாக்கியமுள்ளவர்களாயிருந்தனர். இவ்விதம் தேவன் மனிதனோடு வாசம் செய்தார்.

ஆனால் மனிதன் கீழ்ப்படியாமையினால் பாவத்தில் விழுந்தான். எனவே, தேவன் அவனைத் தோட்டத்தை விட்டுத் துரத்த வேண்டியதாயிற்று (ஆதி 3:24). இருப்பினும், தம்முடைய ஜனத்தின் மத்தியில் வாசம்பண்ண வேண்டும் என்ற தேவனுடைய வாஞ்சை தொடர்ந்திருந்தது. ஆகவே, அவர் ஆபிரகாமின் மூலமாகவும், அவன் சந்ததியின் மூலமாகவும் ஒரு கூட்டம் ஜனங்களை இஸ்ரவேலரைத் தமக்கென்று பிரித்தெடுத்தார். எகிப்து தேசத்தில் நானூறு வருடம் அடிமைத்தனத்திலிருந்த அவர்களை மீட்டு, வனாந்தரத்துக்குக் கொண்டுவந்தார். (ஆதி 15:13)

அங்கே தேவன் மோசேயிடம், தாம் இஸ்ரவேலர் மத்தியில் வாசம்பண்ணும்படி தமக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்கும்படி கூறினார். (யாத் 25:8)

இதி- ருந்து, தேவன் எப்போதும் தம் ஜனங்களின் மத்தியில் வாசம்பண்ண விரும்புகிறார் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

## VI. <u>*போதனை*</u>: (2 Marks)

தேவன் நமக்கென வைத்திருக்கும் மிகவும் உன்னதமானவற்றையும், சிறந்தவற்றையும் நாம் அடைந்துகொள்ள விரும்பினால், அதற்கான கிரயத்தைக் செலுத்தவும் நம்முடைய சகல பூமிக்குரிய இலாபங்களையும் மேன்மைகளையும் மகிமையையும் விட்டுவிடவும் நாம் மனமுவந்திருக்க வேண்டும்.

*********

# ஆசரிப்புக் கூடாரம் (பகுதி II)

## (வெளிப்பிரகாரம்)

**I** *மனப்பாடவசனம் :* (2 Marks)

1 தெசலோனிக்கேயர் 4 : 3 - 7

நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து,

தேவனை அறியாத அஞ்ஞானிகளைப் போல மோக இச்சைக்குட்படாமல்,

உங்களில் அவனவன் தன்தன் சரீரபாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து:

இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும் தன் சகோதரனை வஞ்சியாமலும் இருக்கவேண்டும்; முன்னமே நாங்கள் உங்களுக்குச் சொல்லி, சாட்சியாக எச்சரித்தபடியே இப்படிப்பட்ட விஷயங்களெல்லாவற்றையுங்குறித்துக் கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவராயிருக்கிறார்.

தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்.

**II** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி:*: (1 Marks)

**1.** ஆசரிப்புக் கூடாரத்தில் வெளிப்பிரகாரத்தின் அளவு என்ன?
வெளிப்பிரகாரத்தின் நீளம், அகலம், உயரம் முறையே 100, 50, 5 முழம் (பாடத்திட்டம்)

**2.** ஆசரிப்புக் கூடாரத்தில் வெளிப்பிரகாரத்தில் வைக்கப்பட்டிருந்த பணிமுட்டுகள் யாவை?
ஒரு வெண்கலப் பலிபீடமும் ஒரு வெண்கலத் தொட்டியும் இருந்தன. (பாடத்திட்டம்)

**3.** வெண்கலம் எதைக் காட்டுகிறது?
வெண்கலம் கிருபையைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

**4.** ஒப்புக் கொடுத்தலின் ஜீவியம் எங்கு ஆரம்பிக்கிறது?
ஒப்புக் கொடுத்தலின் ஜீவியம் பலிபீடத்தில் ஆரம்பிக்கிறது. (பாடத்திட்டம்)

**5.** கர்த்தர் யாரை பரிசுத்தப்படுத்தி, பூரணப்படுத்தி அவருடைய நாள்வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறார்?
தங்களை கர்த்தரிடம் ஒப்புக் கொடுக்கிறவர்களை அவர் பரிசுத்தப்படுத்தி, பூரணப்படுத்தி, அந்நாள்வரைக்கும் காத்துக் கொள்ள வல்லவராயிருக்கிறார். (2 தீமோ 1 : 12)

**6.** பலிபீடம் பலகைகளினால் உள்வெளிவிட்டு செய்யப்பட்டிருந்தது என்பதன் ஆவிக்குரிய கருத்து என்ன?
கர்த்தராகிய இயேசு எவ்விதம் தம்மைத் தாமே முற்றிலும் வெறுமையாக்கினார் என்பதைக் காட்டுகிறது. (பிலி 2 : 6 - 8 )

**7.** நாம் கிருபையினால் நிரப்பப்படும்படியாக என்ன செய்ய வேண்டும்?
நம்மை நாமே வெறுமையாக்க வேண்டும். ( 2கொரி 8 : 9)

**8.** பலிபீடத்தின் நான்கு கொம்புகள் எதைக் காட்டுகின்றன?
பூரண பலியாகிய கர்த்தராகிய இயேசு உலகத்தின் நான்கு பக்கங்களுக்கும் இரட்சகராயிருக்கிறார் என்பதைக் காட்டுகின்றன. (பாடத்திட்டம்)

**9.** பலிபீடத்தின் கொம்பு யாரைக் காட்டுகிறது?
பலிபீடத்தின் கொம்பு நம்முடைய இரட்சண்யக்கொம்பாகிய கிறிஸ்துவைக் காட்டுகிறது. (லூக் 1 : 75)

**10.** ஆசரிப்புக் கூடாரத்தில் வெண்கலத் தொட்டி எங்கு வைக்கப்பட்டிருந்தது?
வெண்கலத்தொட்டி வெளிப்பிரகாரத்தில், ஆசரிப்புக் கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே வைக்கப்பட்டிருந்தது. (பாடத்திட்டம்)

11. வெண்கலத் தொட்டி எதைக் காட்டுகிறது?
தண்ணீர் ஞானஸ்நானத்தின் மூலம் நாம் பெற்றுக் கொள்ளும் ஆசீர்வாதங்களைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

12. தண்ணீர் எதைக் காண்பிக்கிறது?
தண்ணீர் தேவ வசனத்தினால் உண்டாகும் சுத்திகரிப்பைக் காண்பிக்கிறது. (எபே 5 : 25, 26)

13. வெண்கலத் தொட்டியின் அளவுகள் குறிப்பிடப்படவில்லை என்பது எதைக் காட்டுகிறது?
அளவிடமுடியாத தேவகிருபையைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

14. நம்முடைய ஜீவிய காலம் முழுவதும் நாம் ஏன் ஞானஸ்நான சத்தியத்தின்படி ஜீவிக்க வேண்டும்?
நாம் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கு அல்லது கர்த்தருடைய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு நம் ஜீவியகாலம் முழுவதும் ஞானஸ்நான சத்தியத்தின்படி ஜீவிக்க வேண்டும். (பாடத்திட்டம்)

15. பழைய வஸ்திரங்களைக் களைந்து போடுதல் என்பது எதைக் காட்டுகிறது?
பழைய வஸ்திரங்களைக் களைந்து போடுதல் என்பது பாவங்களை அறிக்கை செய்வதைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

16. புதிய வஸ்திரங்களைத் தரித்தல் என்பது எதைக் காட்டுகிறது?
புதிய வஸ்திரங்களைத் தரித்தல் என்பது தண்ணீர் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்வதைக் காட்டுகிறது. (கலா 3 : 27)

**III** <u>*ஓரிரு வாக்கிய□களில் விடையளி :*</u> (2 Marks)

1. ஆசரிப்புக் கூடாரத்தின் வெளிப்பிரகாரத்தில் யார் பிரவேசிக்கலாம்? யார் ஊழியம் செய்யலாம்?
விருத்தசேதனம் பெற்ற எந்த இஸ்ரவேலனும் வெளிப்பிரகாரத்தில் பிரவேசிக்கலாம். லேவியர் மட்டும் ஊழியம் செய்யலாம். (பாடத்திட்டம்)

2. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனும் மனுஷனும் சந்திக்கும் இடம் எது? எதன் மூலம் சந்தித்தார்கள்?
தேவனும் மனுஷனும் சந்திக்கும் இடம் பலிபீடமாகும், பலியின் மூலம் சந்தித்தார்கள். (பாடத்திட்டம்)

3. பலிபீடத்தின் அளவு என்ன? அது எதைக் குறிக்கிறது?
பலிபீடத்தின் நீளம், அகலம், உயரம் முறையே 5, 5, 3 முழம்.
5 - ஐம்புலன்களுள்ள மனிதனைக் குறிக்கிறது.
3 - திரித்துவ தேவனைக் குறிக்கிறது.

4. பலிபீடம் யாரைக் குறிக்கிறது?
பலிபீடம் பூரண மனுஷனும் பூரண தேவனுமாகிய இயேசுவைக் குறிக்கிறது. இயேசு நமக்காகக் கல்வாரியில் தம்மைத்தாமே பூரணபலியாக ஒப்புக்கொடுத்தார். (பாடத்திட்டம்)

5. பலிபீடம் மரத்தால் உண்டாக்கப்பட்டது என்பது எதைக் காண்பிக்கிறது?
பலிபீடம் மரத்தால் உண்டாக்கப்பட்டது என்பது இயேசு மனுஷரூபமெடுத்ததினாலும், சிலுவையின் மேல் மரித்ததின் மூலமாகவும் எவ்விதம் பெலவீனராக்கப்பட்டார் என்பதைக் காண்பிக்கிறது. (2 கொரி 13 : 4)

6. பலிபீடத்திலுள்ள அக்கினி எதைக் காண்பிக்கிறது?
பலிபீடத்திலுள்ள அக்கினி, அக்கினி சோதனைகளையும் எல்லாவற்றையும் சுட்டெரிக்கக் கூடிய பரிசுத்தாவியின் அக்கினியையும் காண்பிக்கிறது. (பாடத்திட்டம்)

7. ஞானஸ்நானத்தின் மூலம் நாம் எதற்கு மரிக்கிறோம்? எதை விட்டுவிடுகிறோம்?
ஞானஸ்நானத்தில் நாம் பாவத்திற்கும் லௌகீகத்திற்கும் மரிக்கிறோம். இவ்வுலகத்திற்கு ஒத்த வேஷந்தரிப்பதை விட்டு விடுகிறோம். (பாடத்திட்டம்)

8. நாம் ஏன் கர்த்தரிடத்திலிருந்து கிருபையை அளவில்லாமல் பெற்றுக் கொள்ள வேண்டும்?
நாம் ஒவ்வொரு நாளும் நம் சரீரத்தின் ஒவ்வொரு அவயத்தையும் தேவனுக்கு ஒப்புக் கொடுத்து, தொடர்ந்து மரித்துக் கொண்டேயிருக்கும்படி கர்த்தரிடத்திலிருந்து கிருபையை அளவில்லாமல் பெற்றுக் கொள்ள வேண்டும். (பாடத்திட்டம்)

9. கைகளையும் கால்களையும் தண்ணீரினால் கழுவுதல் என்பது எதைக் காண்பிக்கிறது?

கைகளையும் கால்களையும் தண்ணீரினால் கழுவுதல் என்பது தேவனுடைய வசனத்தின் வெளிச்சத்தில் நம்முடைய கிரியைகளையும் நடக்கைகளையும் சுத்திகரிப்பதைக் காண்பிக்கிறது. (பாடத்திட்டம்)

**10.** ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியம் செய்யும்படி போகும் போதும் வெளியே வரும்போதும் என்ன செய்யவேண்டியதாக இருந்தது?

ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்த ஸ்தலத்திற்குள் ஊழியம் செய்யும்படி போகும்போதும், வெளியே வரும்போதும் ஒவ்வொரு முறையும் தங்கள் கைகளையும் கால்களையும் தொட்டியில் கழுவவேண்டியதாயிருந்தது. (பாடத்திட்டம்)

**IV** *__சுருக்கமான விடையளி__*: (5 Marks)

**1.** பலிபீடமானது எவ்வாறு பலிகள் சுட்டெரிக்கப்படுவதினால் ஏற்படும் கடும் வெப்பத்தைத் தாங்கக் கூடியதாயிருந்தது? இதன் மூலம் நாம் அறிந்து கொள்ளும் ஆவிக்குரிய கருத்து என்ன? வெண்கலத் தொட்டியின் அளவுகள் குறிப்பிடப்படவில்லை இதன் ஆவிக்குரிய கருத்து என்ன?

பலிபீடமானது சீத்திம் மரத்தால் செய்யப்பட்டு, வெண்கலத்தகட்டால் மூடப்பட்டிருந்தது. இதினிமித்தம் பலிபீடமானது பலிகள் சுட்டெரிக்கப்படுவதினால் ஏற்படும் கடும் வெப்பத்தைத் தாங்கக் கூடியதாயிருந்தது.

வெண்கலம் கிருபையைக் காட்டுகிறது. நமக்குக் கிருபையிருந்தால் மட்டுமே நம்முடைய எல்லா சோதனைகளையும் கஷ்டங்களையும் நாம் சகிக்கக் கூடும். (பாடத்திட்டம்)

வெண்கலத் தொட்டியின் அளவுகள் குறிப்பிடப்படவில்லை. இது அளவிடமுடியாத தேவ கிருபையைக் காட்டுகிறது. நாம் தேவனிடத்திலிருந்து எந்த அளவிலும் கிருபையைப் பெற்றுக் கொள்ளக் கூடும். அதற்கு எல்லை இல்லை, ஒவ்வொரு நாளும் நம் சரீரத்தின் ஒவ்வொரு அவயத்தையும் தேவனுக்கு ஒப்புக் கொடுத்து, தொடர்ந்து மரித்துக் கொண்டேயிருக்கும்படி கர்த்தரிடத்திலிருந்து கிருபையை அளவில்லாமல் நாம் பெற்றுக் கொள்ளவேண்டும். அப்போது தேவனுடைய வசனம் நம்மை உயிர்ப்பிக்கும். நாம் அனுதினமும் நம்மைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளவேண்டும். (ரோமர் 6 : 11)

**V** *__விரிவான விடையளி :__* (10 Marks)

**1.** வெளிப்பிரகாரத்தில் வைக்கப்பட்டிருந்த வெண்கல பலிபீடத்தைப் பற்றியும் அதன் ஆவிக்குரிய கருத்துக்களையும் வசன ஆதாரத்துடன் எழுது.

பலிபீடம் :

வெண்கல பலிபீடமானது ஆசரிப்புக்கூடாரமாகிய வாசஸ்தலத்தின் வாசலுக்கு முன்பாக அதாவது, வெளிப்பிராகராத்தில் வைக்கப்பட்டிருந்தது. (யாத் 27 : 1 - 8 ; 38 : 1-7) இது சீத்திம் மரத்தால் செய்யப்பட்டு, வெணகலத்தகட்டால் மூடப்பட்டிருந்தது. இதினிமித்தம் பலிபீடமானது பலிகள் சுட்டெரிக்கப்படுவதினால் ஏற்படும் கடும் வெப்பத்தைத் தாங்கக் கூடியதாயிருந்தது. வெண்கலம், கிருபையைக் காட்டுகிறது. நமக்குக் கிருபையிருந்தால் மட்டுமே நம்முடைய எல்லா சோதனைகைளையும் கஷ்டங்களையும் நாம் சகிக்கக் கூடும்.

தேவனும் மனுஷனும் பலியின் மூலம் சந்திக்கும் இடமே பலிபீடம் ஆகும், பலபீடத்தின் நீளம், அகலம், உயரம் முறையே 5, 5, 3 முழம்.

5 - ஐம்புலன்களுள்ள மனிதனைக் குறிக்கிறது.
3 - திரித்துவ தேவனைக் குறிக்கிறது.

வேறு விதமாகக் கூறினால் பலிபீடம் பூரண மனுஷனும் பூரண தேவனுமாகிய இயேசுவைக் குறிக்கிறது. கர்த்தராகிய இயேசு நமக்காகக் கல்வாரியில் தம்மைத்தாமே பூரண பலியாக ஒப்புக் கொடுத்தார்.

5 முழம் நீளம் x 5 முழம் அகலம், 5 - மனிதனைக் காண்பிக்கிறது. பலிபீடமானது தன் மீது வைக்கப்படும் எந்த பலிப்பொருளையும் அது ஏற்றுக் கொண்டு, பலியாக அங்கீகரித்து, சுட்டெரித்துச் சாம்பலாக மாற்றக் கூடியதாயிருக்கிறது. ஒரு ஒப்புக் கொடுத்தலின் ஜீவியம் பலபீடத்தில் ஆரம்பிக்கிறது என்பதை இது காண்பிக்கிறது. தங்களை கர்த்தரிடம் ஒப்புக்கொடுக்கிறவர்களை அவர் பரிசுத்தப்படுத்தி, பூரணப்படுத்தி, அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறார். (2 தீமோ 1 : 12)

பலிபீடம் மரத்தால் உண்டாக்கப்பட்டது என்பது கர்த்தராகிய இயேசு மனுஷரூபமெடுத்ததினாலும், சிலுவையில் மரித்ததின் மூலமாகவும் எவ்விதம் பெலவீனராக்கப்பட்டார் என்பதைக் காண்பிக்கிறது. (2 கொரி 13 : 4)

பலிபீடத்திலுள்ள அக்கினி, அக்கினி சோதனைகளையும் எல்லாவற்றையும் சுட்டெரிக்கக் கூடிய பரிசுத்த ஆவியின் அக்கினியையும் காண்பிக்கிறது

பலிபீடம் பலகைகளினால் உள்வெளிவிட்டு செய்யப்பட்டிருந்தது. இது, கர்த்தராகிய இயேசு எவ்விதம் தம்மைத்தாமே முற்றிலும் வெறுமையாக்கினார் என்பதைக் காட்டுகிறது. (பிலி 2 : 6 – 8 ) நாமுங்கூட கிருபையினால் நிரப்பப்படும்படியாக நம்மை நாமே வெறுமையாக்க வேண்டும் . (2 கொரி 8 : 9)

பலிபீடத்தின் நான்கு கொம்புகள் – பூரண பலியாகிய கர்த்தராகிய இயேசு உலகத்தின் நான்கு பக்கங்களுக்கும் இரட்சகராயிருக்கிறார். கொம்புகளை, நம்முடைய இரட்சணியக் கொம்பாகிய கிறிஸ்துவைக் காட்டுகின்றன. (லூக்கா 1 : 75)

**VI** *விரிவாக தெளிவாக வசன ஆதாரத்துடன் விடையளி :* (15 Marks)

**1.** வெண்கலத்தொட்டியின் அமைப்பு, அது உண்டாக்கப்பட்ட விதம், அதன் ஆவிக்குரிய விளக்கங்கள் பற்றி வசன ஆதாரத்துடன் விவரி?

வெண்கலத்தொட்டி வெளிப்பிரகாரத்தில், ஆசரிப்புக் கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே வைக்கப்பட்டிருந்தது. இது ஒரு தொட்டியும் ஒரு பாதமும் சேர்ந்த அமைப்பாயிருந்தது. தொட்டி, தண்ணீர் ஞானஸ்நானத்தின் மூலம் நாம் பெற்றுக் கொள்ளும் ஆசீர்வாதங்களைக் காட்டுகிறது.

ஸ்திரீகளின் தர்ப்பணங்களால் (looking glasses) தொட்டி உண்டாக்கப்பட்டது. (யாத்38 : 8) இஸ்ரவேலரிலே ஸ்திரீகள் தங்கள் முகங்களைப் பார்த்துக்கொள்ளும்படி வெண்கல கண்ணாடிகளை உபயோகித்து, எகிப்திய ஸ்திரீகளுடன் தங்களை ஒப்பிட்டு, தங்களைத் தாங்களே அழகுபடுத்திக் கொண்டனர். ஞானஸ்நானத்தில் நாம் பாவத்திற்கும் லௌகீகத்திற்கும் மரிக்கிறோம். இவ்வுலகத்திற்கு ஒத்த வேஷந்தரிப்பதை நிறுத்தி விடுகிறோம்.

தொட்டி தண்ணீரினால் நிரப்பப்பட்டிருந்தது. தண்ணீர் தேவ வசனத்தினால் உண்டாகும் சுத்தகரிப்பைக் காண்பிக்கிறது. (எபே 5 : 25, 26)

அது வெண்கலத்தால் செய்யப்பட்டிருந்தது. வெண்கலம் கிருபையைக்காட்டுகிறது. வெண்கலத் தொட்டிக்கு அளவுகள் குறிப்பிடப்படவில்லை. இது அளவிடப்பட முடியாத தேவ கிருபையைக் காட்டுகிறது. நாம் தேவனிடத்திலிருந்து எந்த அளவிலும் கிருபையைப் பெற்றுக் கொள்ளக் கூடும். ஆதற்கு எல்லை இல்லை, ஒவ்வொரு நாளும் நம் சரீரத்தின் ஒவ்வொரு அவயத்தையும் தேவனுக்கு ஒப்புக் கொடுத்து, தொடர்ந்து மரித்துக் கொண்டேயிருக்கும்படி கர்த்தரிடத்திலிருந்து கிருபையை அளவில்லாமல் நாம் பெற்றுக் கொள்ளவேண்டும். அப்போது தேவனுடைய வசனம் நம்மை உயிர்ப்பிக்கும். நாம் அனுதினமும் நம்மைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளவேண்டும். (ரோமர் 6 : 11)

கைகளையும் கால்களையும் தண்ணீரினால் கழுவுதல் என்பது தேவனுடைய வசனத்தின் வெளிச்சத்தில் நம்முடைய கிரியைகளையும் நடக்கைகளையும் சுத்திகரிப்பதைக் காண்பிக்கிறது

ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்த ஸ்தலத்திற்குள் ஊழிய செய்யும்படி போகும்போதும், வெளியே வரும்போதும் ஒவ்வொரு முறையும் தங்கள் கைகளையும் கால்களையும் தொட்டியில் கழுவவேண்டும். இவ்விதம் தொடர்ந்து செய்ததின் மூலம் ஆரோன் வருடத்தில் ஒரு நாள் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்க முடிந்தது. அதுபோலவே நாம் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கு அல்லது கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு, நம் ஜீவியகாலம் முழுவதும் இந்த ஞானஸ்நான சத்தியத்தின் படி ஜீவிக்க வேண்டும்.

பழைய வஸ்திரங்களைக் களைந்து போடுதல் என்பது பாவங்களை அறிக்கை செய்வதைக் காட்டுகிறது. புதிய வஸ்திரங்களைத் தரித்துக் கொள்ளுதல் தண்ணீர் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்வதைக் காட்டுகிறது. (கலா 3 : 27)

**VII** *போதனை :* (2 Marks)

நம் சரீரத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் காத்துக்கொண்டு தேவனுடைய சித்தம் செய்யும்படி நம்மை நாமே ஜீவபலியாக அவருக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும்.

*********

# ஆசரிப்புக் கூடாரம் (பகுதி III)
## (பரிசுத்த ஸ்தலம்)

**I** *மனப்பாடவசனம் :* (2 Marks)
எபிரெயர் 5 : 7 - 10

அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு,

அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு,

தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி,

மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்.

**II** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி* :

**1.** பரிசுத்த ஸ்தலத்தின் அளவு என்ன?
பரிசுத்த ஸ்தலத்தின் நீளம், அகலம், உயரம் முறையே 20, 10, 10 முழம் (பாடத்திட்டம்)

**2.** பரிசுத்த ஸ்தலத்திலிருந்த முக்கிய பணிமுட்டுகள் யாவை?
தூபபீடம், குத்துவிளக்கு, சமுகத்தப்ப மேஜை. (பாடத்திட்டம்)

**3.** ஆசரிப்புக் கூடாரத்தில் தூபபீடம் எங்கு வைக்கப்பட்டிருந்தது?
தூபபீடம் பரிசுத்த ஸ்தலத்தில் திரைச் சீலைக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்தது. (யாத் 30 : 6)

**4.** தூபபீடத்தின் அளவு என்ன?
தூபபீடம் 1 முழ நீளமும், 1 முழ அகலமும், 2 முழ உயரமுமாயிருந்தது. (யாத் 30 : 2)

**5.** தூபம் எதைக் காட்டுகிறது?
தூபம் ஜெபத்தைக் காட்டுகிறது. (வெளி 5 : 8)

**6.** தூபபீடம் எதைக் காட்டுகிறது?
தூபபீடம் தங்கள் ஜீவனை அருமையாக எண்ணாமல் ஜெபத்தில் தங்கள் ஜீவனை ஊற்றும் பரிசுத்தவான்களைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

**7.** ஜெப ஊழியத்தில் நாம் சந்திக்கும் உபத்திரவங்கள் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும்?
விசுவாசத்தினால் மேற்கொள்ளப்படவேண்டும்.

**8.** குத்துவிளக்கு எதற்கு நிழலாயிருக்கிறது?
குத்துவிளக்கு புதிய ஏற்பாட்டு சபைக்கு நிழலாயிருக்கிறது. (வெளி 1 : 20)

**9.** குத்து விளக்கின் பாதம் யாரைக் காட்டுகிறது?
பாதம் கிறிஸ்துவைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

**10.** குத்துவிளக்கின் நடுத்தண்டு யாரைக் குறிக்கிறது?
குத்துவிளக்கின் நடுத்தண்டு அப்போஸ்தலர்களையும் தீர்க்கதரிசிகளையும் குறிக்கிறது. (பாடத்திட்டம்)

**11.** கிறிஸ்து யாருக்கு தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றிய இரகசியங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்?
அப்போஸ்தலர்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் வெளிப்படுத்தியிருக்கிறார். (பாடத்திட்டம்)

12. குத்துவிளக்கில் உள்ள பழம் எதைக்காட்டுகிறது?
பூரணத்தைக் காட்டுகிறது, (பாடத்திட்டம்)

13. குத்துவிளக்கில் உள்ள அகல்கள் எதைக் காட்டுகிறது?
வரங்களையும், ஊழியங்களையும் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

14. சபையில் வரங்கள் பிரகாசிக்காவிட்டால், சபை எப்படிப்பட்ட நிலவரத்தில் இருக்கும்?
சபையானது அந்தகாரத்தில் இருக்கும். (பாடத்திட்டம்)

15. சமுகத்தப்ப மேஜையின் அளவு என்ன?
சமுகத்தப்ப மேஜை 2 முழ நீளமும் 1 முழ அகலமும் 1½முழ உயரமுமானது.(யாத் 25: 23)

16. 12 - என்னும் இலக்கம் யாரைக் குறிக்கிறது?
அப்போஸ்தலரைக் குறிக்கிறது. (பாடத்திட்டம்)

17. மரக்காலில் பத்து என்னும் இலக்கம் எதைக் காட்டுகிறது?
நியாயப்பிரமாணம் அல்லது பத்து கற்பனைகளைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

18. மரக்காலில் பத்தில் இரண்டு என்னும் இலக்கம் எதைக் காட்டுகிறது?
பத்து கட்டளைகளும் புதிய ஏற்பாட்டில் தேவன் மேலுள்ள அன்பு, மனுஷர் மேலுள்ள அன்பு என அன்பின் இரண்டு பிரமாணங்களாகச் சுருக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்டுகிறது.

19. இரண்டு அடுக்கு என்பதில் இரண்டு என்னும் இலக்கம் எதைக் காட்டுகிறது?
சாட்சியின் ஜீவியத்தைக் காட்டுகிறது.

20. சமுகத்தப்ப மேஜையின் மேலுள்ள திரணை எதைக் காட்டுகிறது?
தேவனுடைய உண்மையுள்ள ஊழியக்காரர் பெற்றுக்கொள்ளும் மகிமையின் கிரீடத்தைக் காட்டுகிறது. (1 பேதுரு 5 : 4)

**III** <u>*ஓரிரு வாக்கியங்களில் விடையளி*</u> : (2 Marks)

1. பழைய ஏற்பாட்டு காலத்தில் பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியஞ் செய்யும்படி யார் அதற்குள் பிரவேசித்தார்கள்?
ஆரோனும், அவன் குமாரனாகிய ஆசாரியர்களும் வருடத்தின் எல்லா நாட்களும் ஊழியஞ் செய்யும்படி பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்தார்கள். (யாத் 28 : 43)

2. தூபபீடம் பசும்பொன்னினால் மூடப்படுவது என்பது எதைக் காட்டுகிறது?
தூபபீடம் பசும்பொன்னினால் மூடப்படுவது என்பது நாம் விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. ஜெப ஊழியத்தில் நாம் சந்திக்கும் உபத்திரவங்கள் விசுவாசத்தினால் மேற் கொள்ளப்பட வேண்டும். நாம் தைரியமாக ஜெபத்தில் போராட வேண்டும். (யாத் 30 : 3)

3. தூபபீடத்திற்கு எத்தனை கொம்புகள் இருந்தன? அது எதைக் காட்டுகின்றன?
தூபபீடத்திற்கு நான்கு கொம்புகள் இருந்தன. கொம்புகள் ஜெபத்தின் மூலம் நாம் பெற்றுக் கொள்ளும் பெலனைக் காட்டுகின்றன. இந்தப் பெலன் நாலா பக்கங்களிலிருந்து வரும் சோதனைகளினின்று நம்மைக் காக்கிறது. (1 பேதுரு 1 :5)

4. காலைதோறும் தூபங்காட்டுதல் என்பது எதைக் காட்டுகிறது?
காலைதோறும் தூபங்காட்டுதல் என்பது நம் ஜீவியத்தில் அந்தகாரம் அகற்றப்படும்போது ஜெபஜீவியம் ஆரம்பிக்கிறது என்பதைக் காட்டுகிறது. (யாத் 30 : 7)

5. விளக்குகளை ஏற்றும்போது தூபங்காட்டுதல் என்பது எதைக் குறிக்கிறது?
விளக்குகளை ஏற்றும்போது தூபங்காட்டுதல் என்பது தேவனுடைய வசனத்தின் மூலம் நாம் பெற்றுக்கொள்ளும் வெளிப்படுத்தல்களின் மூலம் ஜெப ஜீவியம் புதுப்பிக்கப்படுகிறது என்பதைக் குறிக்கிறது. (பாடத்திட்டம்)

6. விளக்குகளை விளக்கும்போது தூபங்காட்டுதல் என்பது எதைக் காண்பிக்கிறது?
விளக்குகளை விளக்கும்போது தூபங்காட்டுதல் நம் ஜீவியங்களை நாம் சுத்திகரிக்கும் போது ஜெபஜீவியம் புதுப்பிக்கப்படுகிறது என்பதைக் காண்பிக்கிறது. (பாடத்திட்டம்)

7. குத்துவிளக்கு ஒரு தாலந்து பசும்பொன்னினால் அடிப்பு வேலையாயச் செய்யப்பட்டது என்பது எதைக் காண்பிக்கிறது ?
பொன் விசுவாசத்தைக் குறிக்கிறது. (1 பேதுரு 1 : 7) பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற ஜனங்கள் அனைவரும் எவ்விதம் விசுவாசத்தின் (பொன்)

ஒருமைப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டு, பூரணராக்கப்படுகிறார்கள் என்பதை இது காண்பிக்கிறது. (பாடத்திட்டம்)

8. குத்துவிளக்கின் பாதம் பற்றி எழுது?
பாதம் இல்லாமல் குத்துவிளக்கு நிற்கமுடியாது, பாதம் கிறிஸ்துவைக் காட்டுகிறது. அவர் சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர். அவர் நம்மைச் சுமக்கிறார். நாம் அவருக்குக் கீழ்படிந்து அடங்கியிருக்க வேண்டும். (கொலோ 1 : 18 , 2 : 10)

9. குத்து விளக்கின் ஆறு கிளைகள் எதைக் காட்டுகிறது?
1 கொரிந்தியர் 12 : 28 இல் குறிப்பிடப்பட்டிருக்கிற அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் இவர்களைத் தவிர மற்ற ஆறு ஊழியங்களாகிய போதகர்களையும், அற்புதங்களையும், குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் காட்டுகிறது. (1 கொரி 12 : 28)

10. குத்துவிளக்கின் ஆறு கிளைகளும் நடுத்தண்டிலிருந்தே புறப்பட்டன என்பது எதைக் காட்டுகிறது?
பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றவர்கள் எவ்வளவுதான் வரங்கள் உள்ளவர்களாயிருந்தாலும் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய உபதேசங்களை முழுவதுமாக ஏற்றுக்கொண்டு, அவர்களுடைய ஐக்கியத்தில் நிலைத்திருப்பதின் மூலமாக மாத்திரமே அவர்கள் கர்த்தருடைய வருகையில் எடுத்துக் கொள்ளப்படமுடியும் என்பதைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

11. குத்துவிளக்கில் உள்ள பூ எதைக் காட்டுகிறது?
நாம் அன்பு, விசுவாசம், பரிசுத்தம், தேவசித்தம் ஆகியவற்றின் பூரணங்களில் வளரும்போது மற்ற ஜனங்களுக்கு சுகந்தவாசனையாகிறோம் என்பதைக் காட்டுகிறது. (2 கொரி 2 : 15, 16)

12. குத்துவிளக்கின் அகல்கள் எப்போதும் இரவும் பகலும் எரிந்து கொண்டிருக்க வேண்டும் என்பதின் பொருள் என்ன?
தேவன் நம்முடைய ஜீவியத்தில் இரவும் பகலும் கிரியை செய்ய விரும்புகிறார் என்பது இதன் பொருள்.

13. கிறிஸ்து நமக்குள்ளிருக்கும் வரங்களை எவ்வாறு அனல் மூட்டி எழுப்புகிறார்?
கிறிஸ்து நம்மைச் சுத்திகரித்து, தம்முடைய ஆவியை நமக்குள் ஊற்றி, நமக்குள்ளிருக்கும் வரங்களை அனல் மூட்டி எழுப்புகிறார். (பாடத்திட்டம்)

14. சமுகத்தப்ப மேஜை எதைக் காட்டுகிறது? யாருக்கு நிழலாயிருக்கிறது?
சமுகத்தப்ப மேஜை முக்கியமாக ஊழியத்தைக் காட்டுகிறது. இது இயேசுவிற்கும் தேவ ஊழியருக்கும் நிழலாயிருக்கிறது. (பாடத்திட்டம்)

15. சமுகத்தப்பம் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் எதற்கு அடையாளமாயிருக்கிறது?
1. மேஜை கர்த்தராகிய இயேசுவை குறிக்கும்போது சமுத்தப்பம் தேவ ஊழியரைக் குறிக்கிறது.
2. மேஜை, தேவ ஊழியரைக் குறிக்கும்போது சமுகத்தப்பம், மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பவர்கள், அதாவது கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுகிறவர்களுக்குக் கொடுக்கப்படுகிற வெளிப்படுத்தல்கள் அல்லது ஆவிக்குரிய ஆகாரத்திற்கு அடையாளமாயிருக்கிறது.

## IV <u>*சுருக்கமான விடையளி*</u>: (5 Marks)

1. குத்துவிளக்கின் நடுத்தண்டில் காணப்படும் ஆறுகிளைகள் எதைக் காட்டுகிறது? விவரி?
ஆறு கிளைகள்: ஆறு கிளைகளும் 1கொரிந்தியர்12:28-இல் குறிப்பிடப்பட்டிருப்பவைகளிலுள்ள அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் ஆகியோரைத் தவிர மற்ற ஆறு ஊழியங்களைக் காட்டுகின்றன. ஆறு கிளைகளும் நடுத்தண்டிலிருந்தே புறப்பட்டன. இது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றவர்கள் எவ்வளவுதான் வரங்கள் உள்ளவர்களாயிருந்தாலும், அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய உபதேசங்களை முழுவதுமாக ஏற்றுக்கொண்டு, அவர்களுடைய ஐக்கியத்தில் நிலைத்திருப்பதின் மூலமாக மாத்திரமே அவர்கள் கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்ததுக்கொள்ளப்பட முடியும் என்பதைக் காட்டுகிறது. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவயமாயிருக்கிறார்கள்.

2. குத்துவிளக்கின் நான்கு மொக்குகள் வெளிப்படுத்தும் சத்தியங்களை எழுது.
நான்கு மொக்குகள் : அப்போஸ்தலரையும் தீர்க்கதரிசிகளையும் குறிக்கும் நடுத்தண்டில் நான்கு மொக்குகள் இருந்ததாகவும், ஆறு கிளைகளிலும், ஒவ்வொரு கிளையில் மும்மூன்று மொக்குகள் இருந்ததாகவும் நாம் பார்த்தோம். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகள் அப்போஸ்தலரோடு ஐக்கியப்பட்டிருப்பதின் மூலம் தேவசித்தம் செய்கிற

ஜீவியத்தைக் கற்றுக்கொண்டு, மற்ற மூன்று அம்சங்களாகிய அன்பு, விசுவாசம், பரிசுத்தம் ஆகியவற்றில் பூரணத்தை அடையும்படி வளர வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது.

3. குத்துவிளக்கின் அகல்கள் காண்பிக்கும் ஆவிக்குரிய கருத்துக்களை எழுது.

அகல்கள் : இது எரிந்து கொண்டிருப்பது சபையில் வரங்கள் கிரியை செய்வதைக் காட்டுகிறது. வரங்கள் பிரகாசிக்காவிட்டால் சபையானது அந்தகாரத்தில் இருக்கும். அகல்கள் எப்போதும் - இரவும் பகலும் எரிந்து கொண்டிருக்க வேண்டும். தேவன் நம்முடைய ஜீவியத்தில் இரவும் பகலும் கிரியை செய்ய விரும்புகிறார் என்பது இதன் பொருள். பிரதான ஆசாரியன் திரிகளைக் கத்தரித்து, எண்ணெய் ஊற்றி, விளக்குகளை ஏற்றி வைப்பதுபோல, கிறிஸ்து நம்மைச் சுத்திகரித்து, தம்முடைய ஆவியை நமக்குள் ஊற்றி, நமக்குள்ளிருக்கும் வரங்களை அனல் மூட்டி எழுப்புகிறார்.

4. சமூகத்தப்ப மேஜையும் அதன் கால்களும் ஆவிக்குரிய பிரகாரம் எதற்கு நிழலாட்டமாக இருக்கிறது?

சமுகத்தப்பம் : மேஜை, கர்த்தராகிய இயேசுவைக் குறிக்கும்போது, சமுகத்தப்பம் தேவ ஊழியரைக் குறிக்கிறது. மற்றொரு அர்த்தத்தில், மேஜை தேவ ஊழியரைக் குறிக்கும்போது, சமுகத்தப்பம், மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பவர்கள், அதாவது கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுகிறவர்களுக்குக் கொடுக்கப்படுகிற வெளிப்படுத்தல்கள் அல்லது ஆவிக்குரிய ஆகாரத்திற்கு அடையாளமாயிருக்கிறது.

அதற்கு நான்கு கால்கள் - இருந்தன - இது புதிய ஏற்பாட்டு சபைக்கு அவசியமான நான்கு பூரணங்களைக் காட்டுகிறது அன்பு, விசுவாசம், பரிசுத்தம், தேவசித்தம் செய்தல் ஆகிய இவற்றின் பூரணம்.

5. சமுகத்தப்பம் எவ்வளவு மாவில் எத்தனை அப்பங்களாகச் செய்யப்பட்டது? புதிய ஏற்பாட்டில் இதன் ஆவிக்குரிய அர்த்தம் என்ன? சமுகத்தப்பம் இரண்டு அடுக்காக வைக்கவேண்டும் என்பதின் ஆவிக்குரிய அர்த்தம் என்ன?

ஒவ்வொரு அப்பமும் மரக்காலில் பத்தில் இரண்டு பங்கு மாவினால் பன்னிரண்டு அப்பங்களாக செய்யப்பட்டது. (லேவி 24 : 5). பத்து என்பது நியாயப்பிரமாணம் அல்லது பத்து கற்பனைகளைக் காட்டுகிறது. அவை, புதிய ஏற்பாட்டில் தேவன் மேலுள்ள அன்பு, பிறனிடத்திலுள்ள அன்பு என அன்பின் இரண்டு பிரமாணங்களாக சுருக்கப்பட்டுள்ளன. (மத் 22 : 36 - 40)

பன்னிரண்டு அப்பங்கள் - 12 என்னும் இலக்கம் அப்போஸ்தலரைக் குறிக்கிறது. எனவே, பன்னிரண்டு அப்பங்கள் பிரதிஷ்டையுள்ள அப்போஸ்தலரால் கொடுக்கப்படும் ஆவிக்குரிய ஆகாரத்தைக் காண்பிக்கின்றன.

இரண்டு அடுக்காக வைக்க வேண்டும். இங்கு இரண்டு என்பது சாட்சியின் ஜீவியத்தைக் காட்டுகிறது. தேவன் நமக்குத் தருகிற வெளிப்படுத்தல்கள் நாம் பிரசங்கிப்பது மாத்திரமல்ல, நாம் பிரசங்கிப்பதின்படியே ஜீவிக்கவும் வேண்டும். ஏனெனில் ஜனங்கள் நம் பிரசங்கத்தைக் கேட்பது மாத்திரமல்ல, நம் ஜீவியத்தை உற்றுக் கவனிக்கவும் செய்கிறார்கள். நாம் அவர்களுக்குச் சாட்சியாயிருக்க வேண்டும்.

6. ஓய்வுநாள் தோறும் புதிய அப்பங்கள் வைக்கப்படவேண்டும் என்பதும் சமுகத்தப்பம் புருஷர் மாத்திரமே புசிக்க வேண்டும் என்பதும் எதைக் காட்டுகிறது. மேஜையின் மேலுள்ள திரணை எதைக் காட்டுகிறது?

ஓய்வுநாள் தோறும் புதிய அப்பங்கள் வைக்கப்பட்டு பழையவை நீக்கப்பட்டன. இது தேவனுடைய ஊழியக்காரர் தேவனுடைய சமுகத்தில் காத்திருந்து, தேவனிடத்திலிருந்து புதிய தூதுகளைப் பெற்று, தாங்கள் முதலாவது அதனால் போஷிக்கப்பட்டு, பின்பு அவைகளைச் சபைக்குக் கொடுக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

ஆரோனும் அவனுடைய குமாரரும் அதைப் புசிக்க வேண்டும். புருஷரும் ஸ்திரீகளும் புசிக்கக் கூடிய மன்னாவைப் போலல்லாமல், சமுகத்தப்பம் புருஷர் மாத்திரமே புசிக்க வேண்டிய ஒன்றாகும். ஜெயஜீவியம் செய்கிறவர்கள் அல்லது கர்த்தரின் இரகசிய வருகைக்கென்று காத்துக் கொண்டிருக்கும் பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்ற தேவ ஊழியரும் விசுவாசிகளும் மட்டுமே. தேவனுடைய ஊழியரால் கொடுக்கப்படும் பலமான ஆகாரத்தைப் புசிக்ககூடும் என்பதை இது காட்டுகிறது.

மேஜையின் மேலுள்ள திரணை, தேவனுடைய உண்மையுள்ள ஊழியக்காரர் பெற்றுக்கொள்ளும் மகிமையின் கிரீடத்தைக் காட்டுகிறது. (1 பேதுரு 5 : 4)

## V <u>விரிவான விடையளி</u> : (10 Marks)

1. தூபபீடம் பற்றியும் அதின் ஒவ்வொரு பகுதியும் வெளிப்படுத்தும் ஆவிக்குரிய சத்தியங்களை பற்றியும் எழுது.

பரிசுத்த ஸ்தலத்தின் நீளம், அகலம், உயரம் முறையே 20, 10, 10 முழம் . ஆரோனும், அவன் குமாரனாகிய ஆசாரியர்களும் வருடத்தின் எல்லா நாட்களும் ஊழிய செய்யும்படி பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்தார்கள்.

இதில் மூன்று முக்கியமான பொருட்கள் இருந்தன. அவையாவன: தூபபீடம், குத்துவிளக்கு, சமுகத்தப்ப மேஜை.

தூபபீடம் : (யாத் 30 : 1 - 8)

தூபபீடம், பரிசுத்த ஸ்தலத்தில் திரைச்சீலைக்கு முன்பாக வைக்கப்பட்டது, இது சீத்திம் மரத்தினால் செய்யப்பட்டு, பசும் பொன் தகட்டால் மூடப்பட்டது. இது 1 முழ நீளமும், 1 முழ அகலமும், 2 முழ உயரமுமாயிருந்தது.

தூபம் ஜெயத்தைக் காட்டுகிறது. தூபபீடம் தங்கள் ஜீவனை அருமையாக எண்ணாமல் ஜெபத்தில் தங்கள் ஜீவனை ஊற்றும் பரிசுத்தவான்களைக் காட்டுகிறது.

தூபபீடம் பசும்பொன்னினால் மூடப்படுவது என்பது நாம் விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. ஜெப ஊழியத்தில் நாம் சந்திக்கும் உபத்திரவங்கள் விசுவாசத்தினால் மேற் கொள்ளப்பட வேண்டும். நாம் தைரியமாக ஜெபத்தில் போராட வேண்டும்.

தூபபீடத்திற்கு நான்கு கொம்புகள் இருந்தன. கொம்புகள் ஜெபத்தின் மூலம் நாம் பெற்றுக் கொள்ளும் பெலனைக் காட்டுகின்றன, இந்தப் பெலன் நாலா பக்கங்களிலிருந்து வரும் சோதனைகளினின்று நம்மைக் காக்கிறது. (1 பேதுரு 1 :5)

காலைதோறும் தூபங்காட்டுதல் என்பது நம் ஜீவியத்தில் அந்தகாரம் அகற்றப்படும்போது ஜெபஜீவியம் ஆரம்பிக்கிறது என்பதைக் காட்டுகிறது.

விளக்குகளை ஏற்றும்போது தூபங்காட்டுதல் என்பது தேவனுடைய வசனத்தின் மூலம் நாம் பெற்றுக்கொள்ளும் வெளிப்படுத்தல்களின் மூலம் ஜெப ஜீவியம் புதுப்பிக்கப்படுகிறது என்பதைக் குறிக்கிறது

விளக்குகளை விளக்கும்போது தூபங்காட்டுதல் நம் ஜீவியங்களை நாம் சுத்திகரிக்கும் போது ஜெபஜீவியம் புதுப்பிக்கப்படுகிறது என்பதைக் காண்பிக்கிறது.

## VI <u>*விரிவாக தெளிவாக வசன ஆதாரத்துடன் விடையளி :*</u> (15 Marks)

**1.** குத்துவிளக்கின் அமைப்பையும், அது எவ்வாறு புதிய ஏற்பாட்டு சபைக்கு நிழலாயிருக்கிறது என்பதையும் வசன ஆதாரத்துடன் விவரி.

குத்து விளக்கு புதிய ஏற்பாட்டு சபைக்கு நிழலாயிருக்கிறது.

இது ஒரு தாலந்து பசும்பொன்னினால் அடிப்பு வேலையாய்ச் செய்யப்பட்டது. பொன் விசுவாசத்தைக் குறிக்கிறது. (1 பேதுரு 1 : 7) பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற ஜனங்கள் அனைவரும் எவ்விதம் விசுவாசத்தின் (பொன்) ஒருமைப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டு, பூரணராக்கப்படுகிறார்கள் என்பதை இது காண்பிக்கிறது.

பாதம் இல்லாமல் குத்துவிளக்கு நிற்கமுடியாது, பாதம் கிறிஸ்துவைக் காட்டுகிறது. அவர் சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர். அவர் நம்மைச் சுமக்கிறார். நாம் அவருக்குக் கீழ்படிந்து அடங்கியிருக்க வேண்டும். (கொலோ 1: 18,2 : 10எபே 1 : 22, 23)

நடுத்தண்டு : பாதத்தின் மீது ஒரு நடுத்தண்டு இருந்தது. அதில் நான்கு மொக்குகளும், நான்கு பழங்களும், நான்கு பூக்களும் இருந்தன. அதன் ஆறு கிளைகளிலும், ஒவ்வொரு கிளையிலே ஒவ்வொரு அகலும் மூன்று மொக்குகளும், ஒரு பழமும், ஒரு பூவும் இருந்தன. நடுத்தண்டிலும் ஒரு அகல் இருந்தது. நடுத்தண்டு அப்போஸ்தலர்களையும் தீர்க்கதரிசிகளைஎயம் குறிக்கிறது. அவர்கள் கிறிஸ்துவில் வேருன்றி நிலைபெற்றிருக்க வேண்டும். அவர்களுக்கே கிறிஸ்து தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றிய இரகசியங்களை வெளிப்படுத்தியிருக்கிறார். அப்போது மற்றவர்கள் அவர்களோடு ஐக்கியமுள்ளவர்களாயிருந்து, அவர்களைச் சார்ந்து கொள்ளக் கூடும். (எபே 2 : 19, 20)

ஆறு கிளைகள் : ஆறு கிளைகளும் 1 கொரிந்தியர் 12 : 28 - இல் குறிப்பிடப்பட்டிருப்பவைகளிலுள்ள அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் ஆகியோரைத்தவிர மற்ற ஆறு ஊழியங்களைக் காட்டுகின்றன. ஆறு கிளைகளும் நடுத்தண்டிலிருந்தே புறப்பட்டன. இது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றவர்கள் எவ்வளவுதான் வரங்கள் உள்ளவர்களாயிருந்தாலும், அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய உபதேசங்களை முழுவதுமாக ஏற்றுக் கொண்டு, அவர்களுடைய ஐக்கியத்தில் நிலைத்திருப்பதின் மூலமாக மாத்திரமே அவர்கள் கர்த்தருடைய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட முடியும் என்பதைக் காட்டுகிறது. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவயமாயிருக்கிறார்கள்.

நான்கு மொக்குகள்: அப்போஸ்தலரையும் தீர்க்கதரிசிகளையும் குறிக்கும் நடுத்தண்டில் நான்கு மொக்குகள் இருந்ததாகவும், ஆறு கிளைகளிலும், ஒவ்வொரு கிளையில் மும்மூன்று மொக்குகள் இருந்ததாகுவம் நாம் பார்த்தோம். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகள், அப்போஸ்தலரோடு ஐக்கியப்பட்டிருப்பதின் மூலம் தேவசித்தம் செய்கிற ஜீவியத்தைக் கற்றுக்கொண்டு, மற்ற மூன்று அம்சங்களாகிய அன்பு, விசுவாசம், பரிசுத்தம் ஆகியவற்றில் பூரணத்தை அடையும்படி வளர வேண்டும். இவைகளுடன் சேர்ந்திருக்கும் பூவும் பழமும் நான்கு அம்சங்களிலும் நாம் பூரணத்திற்கு கடந்து செல்வதின் நிலைகளைக் குறிக்கின்றன. நாம் மொட்டாக இருக்கும் நிலையிலே தொடர்ந்து நிலைத்திராமல் நம்முடைய ஜீவியம் மற்றவர்களுக்குச் சுகந்த வாசனையாக இருக்கும்படியாக பூக்களாக மலர வேண்டும்.

முடிவில் கனி கொடுக்கும் நிலைக்கு நாம் வரவேண்டும். இது பூரணத்திற்கு நேராக வளருவதைக் குறிக்கிறது.

அகல்கள் : அகல்கள் எரிந்து கொண்டிருப்பது சபையில் வரங்கள் கிரியை செய்வதைக் காட்டுகிறது. வரங்கள் பிரகாசிக்காவிட்டால் சபையானது அந்தகாரத்தில் இருக்கும். அகல்கள் எப்போதும் - இரவும் பகலும் எரிந்து கொண்டிருக்க வேண்டும். தேவன் நம்முடைய ஜீவியத்தில் இரவும்பகலும் கிரியை செய்ய விரும்புகிறார் என்பது இதன் பொருள். பிரதான ஆசாரியன் திரிகளைக் கத்தரித்து, எண்ணெய் ஊற்றி, விளக்குகளை ஏற்றி வைப்பதுபோல, கிறிஸ்து நம்மைச் சுத்திகரித்து, தம்முடைய ஆவியை நமக்குள் ஊற்றி, நமக்குள்ளிருக்கும் வரங்களை அனல் மூட்டி எழுப்புகிறார்.

குத்துவிளக்கில் மொத்தமாக ஏழு அகல்கள் மட்டுமே இருக்கின்றன. ஆனால் நடுத்தண்டில் இரு ஊழியங்கள் - அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் ஆகியோரின் ஊழியங்கள் சேர்ந்திருக்கின்றன. இவ்விதம் குத்துவிளக்கு எட்டு ஊழியங்களைக் குறிக்கிறது.(1கொரி 12: 28)

**2.** சமுத்தப்பம் வெளிப்படுத்தும் ஆவிக்குரிய சத்தியங்களை தொகுத்தெழுது.

சமுகத்தப்பம் : மேஜை, கர்த்தராகிய இயேசுவைக் குறிக்கும்போது, சமுகத்தப்பம் தேவ ஊழியரைக் குறிக்கிறது. மற்றொரு அர்த்தத்தில், மேஜை தேவ ஊழியரைக் குறிக்கும்போது, சமுகத்தப்பம், மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பவர்கள், அதாவது கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுகிறவர்களுக்குக் கொடுக்கப்படுகிற வெளிப்படுத்தல்கள் அல்லது ஆவிக்குரிய ஆகாரத்திற்கு அடையாளமாயிருக்கிறது.

அதற்கு நான்கு கால்கள் இருந்தன - இது புதிய ஏற்பாட்டு சபைக்கு அவசியமான நான்கு பூரணங்களைக் காட்டுகிறது அன்பு, விசுவாசம், பரிசுத்தம், தேவசித்தம் செய்தல் ஆகிய இவற்றின் பூரணம்.

பன்னிரண்டு அப்பங்கள் - 12 என்னும் இலக்கம் அப்போஸ்தலரைக் குறிக்கிறது. எனவே, பன்னிரண்டு அப்பங்கள் பிரதிஷ்டையுள்ள அப்போஸ்தலரால் கொடுக்கப்படும் ஆவிக்குரிய ஆகாரத்தைக் காண்பிக்கின்றன.

ஒவ்வொரு அப்பமும் மரக்காலில் பத்தில் இரண்டு பங்கு மாவினால் செய்யப்பட்டது. (லேவி 24 : 5). பத்து என்பது நியாயப்பிரமாணம் அல்லது பத்து கற்பனைகளைக் காட்டுகிறது. அவை, புதிய ஏற்பாட்டில் தேவன் மேலுள்ள அன்பு, பிறனிடத்திலுள்ள அன்பு என அன்பின் இரண்டு பிரமாணங்களாக சுருக்கப்பட்டுள்ளன. (மத் 22 : 36 - 40)

இரண்டு அடுக்காக வைக்க வேண்டும். இங்கு இரண்டு என்பது சாட்சியின் ஜீவியத்தைக் காட்டுகிறது. தேவன் நமக்குத் தருகிற வெளிப்படுத்தல்கள் நாம் பிரசங்கிப்பது மாத்திரமல்ல, நாம் பிரசங்கிப்பதின்படியே ஜீவிக்கவும் வேண்டும். ஏனெனில் ஜனங்கள் நம் பிரசங்கத்தைக் கேட்பது மாத்திரமல்ல, நம் ஜீவியத்தை உற்றுக் கவனிக்கவும் செய்கிறார்கள். நாம் அவர்களுக்குச் சாட்சியாயிருக்க வேண்டும்.

ஓய்வுநாள் தோறும் புதிய அப்பங்கள் வைக்கப்பட்டு பழையவை நீக்கப்பட்டன. இது தேவனுடைய ஊழியக்காரர் தேவனுடைய சமுகத்தில் காத்திருந்து, தேவனிடத்திலிருந்து புதிய தூதுகளைப் பெற்று, தாங்கள் முதலாவது அதனால் போஷிக்கப்பட்டு, பின்பு அவைகளைச் சபைக்குக் கொடுக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

ஆரோனும் அவனுடைய குமாரரும் அதைப் புசிக்க வேண்டும். புருஷரும் ஸ்திரீகளும் புசிக்கக் கூடிய மன்னாவைப் போலல்லாமல், சமுகத்தப்பம் புருஷர் மாத்திரமே புசிக்க வேண்டிய ஒன்றாகும். ஜெயஜீவியம் செய்கிறவர்கள் அல்லது கர்த்தரின் இரகசிய வருகைக்கென்று காத்துக் கொண்டிருக்கும் பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்ற தேவ ஊழியரும் விசுவாசிகளும் மட்டுமே. தேவனுடைய ஊழியக்காரால் கொடுக்கப்படும் பலமான ஆகாரத்தைப் புசிக்ககூடும் என்பதை இது காட்டுகிறது.

மேஜையின் மேலுள்ள திரணை, தேவனுடைய உண்மையுள்ள ஊழியக்காரர் பெற்றுக்கொள்ளும் மகிமையின் கிரீடத்தைக் காட்டுகிறது. (1 பேதுரு 5 : 4)

**VII** ***<u>போதனை :</u>*** (2 Marks)

கர்த்தராகிய இயேசுவவைப் போல நாம் மற்றவர்களுக்கு அப்பமாகவும், உலகத்திற்கு வெளிச்சமாகவும், வல்லமையுள்ளதும் மேற்கொள்ளுகிறதுமான ஜெபத்தின் மூலம் ஜெயங்கொண்டவர்களாகவும் விளங்க வேண்டும்.

*************

வகுப்பு :10

பாடம்-10

# ஆசரிப்புக் கூடாரம் (பகுதி IV)

## (மகா பரிசுத்த ஸ்தலம்)

**I** *மனப்பாடவசனம் :* (2 Marks)

எபிரெயர் 4 : 16

ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.

**II** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி* : (2 Marks)

**1.** மகா பரிசுத்த ஸ்தலம் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து எவ்வாறு பிரிக்கப்பட்டிருந்தது? அதன் நீளம், அகலம், உயரத்தைக் குறிப்பிடுக. அதற்குள்ளிருந்த பணிமுட்டுகள் யாவை?

மகா பரிசுத்த ஸ்தலம் பரிசுத்த ஸ்தலத்தினின்று திரைச் சீலையால் பிரிக்கப்பட்டதாயிருந்தது. அதின் நீளம் , அகலம், உயரம் முறையே 10, 10, 10 முழமாயிருந்தன. அதற்குள்ளே உடன்படிக்கைப் பெட்டி கிருபாசனம், கேருபீன்கள் ஆகிய பணி மூட்டுகள் இருந்தன. (பாடத்திட்டம்)

**2.** மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் யார், எப்பொழுது, எதற்காக தன் கையில் இரத்தத்தை எடுத்துக் கொண்டு பிரவேசிக்க கூடியவனாயிருந்தான்?

மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரதான ஆசாரியன் மட்டும் வருடத்தில் ஒரு நாள் தன் கையில் இரத்தத்தோடு தனக்காகவும், தன் வீட்டாருக்காகவும், சபையார் அனைவருக்காகவும், பாவ நிவிர்த்தி செய்யும் படி அதற்குள் பிரவேசிக்க கூடியவனாயிருந்தான். (லேவி 16 : 17)

**3.** உடன்படிக்கைப் பெட்டியின் நீளம், அகலம், உயரம் ஆகியவற்றை குறிப்பிடு.

உடன்படிக்கை பெட்டியின் நீளம் 2½ முழம், அகலம் 1 ½ முழம் , உயரம் 1 ½ முழம். (யாத் 37 : 1)

**4.** உடன்படிக்கைப் பெட்டி யாரைக் குறிக்கிறது?

உடன்படிக்கை பெட்டி, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவரையும் குறிப்பதுடன் புதிய ஏற்பாட்டின் சபை முழுவதையும் குறிக்கிறது. இது கர்த்தரோடு உடன்படிக்கை செய்திருக்கிறவர்களைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

**5.** உடன்படிக்கைப் பெட்டிக்குச் சுற்றிலும் இருந்த திரணை எதைக் காட்டுகிறது?

உடன்படிக்கைப் பெட்டியின் திரணை அதில் செய்ய வேண்டிய வேலை முடிவடைந்தது என்பதையும் இனி அதில் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை என்பதையும் காண்பிக்கிறது. மேலும் இந்தத் திரணை நல்ல போராட்டத்தைப் போராடி ஓட்டத்தை முடித்து விசுவாசத்தைக் காத்துக்கொண்டு கர்த்தருடைய இரகசிய வருகைக்கென்று ஆவலுடன் காத்திருக்கிறவர்கள் பெற்றுக் கொள்ளப்போகும் நீதியின் கிரீடத்தைக் காட்டுகிறது. (2 தீமோ. 4 : 7, 8)

**6.** உடன்படிக்கைப் பெட்டியின் திரணை சுத்தப் பொன்னினால் உண்டாக்கப்பட்டது என்பது எதைக் காட்டுகிறது?

உடன்படிக்கைப் பெட்டியின் திரணை சுத்தப் பொன்னினால் உண்டாக்கப்பட்டது என்பது ஒருவர் சோதனைகள், உபத்திரவங்களின் வழியாகக் கடந்து போவதின் மூலம் விசுவாசத்திற்குச் சாட்சியாயிருப்பதைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

**7.** உடன்படிக்கைப் பெட்டி பசும் பொன் தகட்டினால் மூடப்பட்டது என்பது எதைக் காண்பிக்கிறது? பெட்டிக்குள் வைக்கப்பட்டிருக்கும் பொருட்கள் யாவை?

பொன் மகா பரிசுத்தமான விசுவாசத்தைக் காட்டுகிறது. (1பேதுரு1:7; யூதா20) உடன்படிக்கை பெட்டிக்குள் மூன்று பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன. அவையாவன :

1. மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரம்
2. இரு கற்பலகைகள்
3. ஆரோனின் துளிர்த்த கோல் (எபி 9 : 4)

8. மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரம் எதைக் காண்பிக்கிறது?

மன்னா, ஜீவ அப்பமாகிய இயேசுவை அல்லது மனிதனுடைய மனதைப் புதுப்பித்து (ரோமர் 12 : 2) அதைப் பொற்பாத்திரம் போல் மாற்றுகிற கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்தலைக் காண்பிக்கிறது. மேலும் இது மனதில் பிரமாணங்கள் எழுதப்படுவதைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

9. உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கப்பட்ட இருகற்பலகைகள் எதைக் காட்டுகிறது? புதிய ஏற்பாட்டில் யாரால் எங்கு இந்த பிரமாணங்கள் எழுதப்படுகின்றன?

உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கப்பட்ட இரு கற்பலகைகள் புதிய ஏற்பாட்டில் தேவன் மேலுள்ள அன்பு, மனுஷர் மேலுள்ள அன்பு என அன்பின் இரு பிரமாணங்களாக, கர்த்தராகிய இயேசு எளிதாக்கிய பத்துக் கற்பனைகளைக் காட்டுகிறது. புதிய ஏற்பாட்டில் ஆவியினால் இருதயமாகிய சதையான பலகைகளில் பிரமாணங்கள் எழுதப்படுகின்றன. (2 கொரி 3 : 3)

10. ஆரோனின் துளிர்த்த கோல் எதைக் காட்டுகிறது?

ஆரோனின் துளிர்த்த கோல் சபையில் ஒவ்வொருவரும், உயிர்த்தெழுதலின் வல்லமையினால் சரீரத்தில் உயிர்ப்பிக்கப்பட்டு ஆவியின் கனியைக் கொடுக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. மேலும் இது கர்த்தருடைய வருகையில் நம் சரீரம் மீட்கப்படுவதையும் காட்டுகிறது. (ரோமர் 8 : 11, 23)

11. கிருபாசனம் யாரைக் குறிக்கிறது?

கிருபாசனம் நம்முடைய பெலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடியவராயிருக்கிற பிரதான ஆசாரியரும், அதினிமித்தமாய் நாம் தைரியமாய்க் கிட்டிச் சேரக் கூடியவருமாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. (எபி 4 : 15, 16)

12. கிருபாசனம் எதினால் உண்டாக்கப்பட்டது? அது எதைக் காட்டுகிறது?

கிருபாசனம் பசும் பொன்னினால் உண்டாக்கப்பட்டது, இது இயேசுவின் விலையேறப்பெற்ற விசுவாசத்தைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

13. கிருபாசனத்தின் மீதுள்ள இரு கேருபீன்கள் யாரைக் குறிக்கிறது?

கிருபாசனத்தின் மீதுள்ள இரு கேருபீன்கள் கிருபையின் மீது நிற்பவர்களும், கிறிஸ்துவுக்கு உடன் வேலையாட்களும் (2 கொரி 6 : 1) கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாகிய புதிய ஏற்பாட்டு தேவ ஊழியரைக் காட்டுகின்றன. (2 கொரி 5 : 20 )

14. கேருபீன்களின் முகங்கள் கிருபாசனத்தை நோக்குகிறவையாயிருந்தது என்பது எதைக் காண்பிக்கிறது?

கேருபீன்களின் முகங்கள் கிருபாசனத்தை நோக்குகிறவையாயிருந்தன என்பது தேவனுடைய ஊழியக்காரர் தங்களுடைய சகல நம்பிக்கையையும் விசுவாசத்தையும் கிறிஸ்துவில் மாத்திரம் வைத்து, அவரையே நோக்கிப் பார்ப்பதைக் காண்பிக்கிறது. (பாடத்திட்டம்)

15. கேருபீன்கள் தங்கள் செட்டைகளை உயர விரிக்கின்றன என்பது எதைக் காட்டுகிறது?

கேருபீன்கள் தங்கள் செட்டைகளை உயர விரிக்கின்றன என்பது தேவ ஊழியர் உலகத்தையும் மாம்சத்தையும் வெறுத்து அவற்றிற்கு மேலான ஒரு ஜீவியஞ் செய்து பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தினால் நிறைந்து ஊழியஞ் செய்கின்றனர் என்பதைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

## III *சுருக்கமான விடையளி*: (5 Marks)

1. உடன்படிக்கைப் பெட்டியின் அமைப்பையும் அது வெளிப்படுத்தும் ஆவிக்குரிய சத்தியங்களையும் பற்றி எழுது.

உடன்படிக்கைப் பெட்டியின் நீளம் , அகலம், உயரம் முறையே 2½ , 1 ½ , 1 ½ முழமாகும். அது சீத்திம் மரத்தால் செய்யப்பட்டு, பசும் பொன் தகட்டால் மூடப்பட்டது.

உடன்படிக்கைப் பெட்டி பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவரையும் குறிப்பதுடன் புதிய ஏற்பாட்டு சபை முழுவதையும் குறிக்கிறது. இது கர்த்தரோடு உடன்படிக்கை செய்திருப்பவர்களைக் காட்டுகிறது

அதற்குச் சுற்றிலும் திரணை இருந்தது. இந்தத் திரணை நல்ல போராட்டத்தைப் போராடி ஓட்டத்தை முடித்து விசுவாசத்தைக் காத்துக்கொண்டு கர்த்தருடைய இரகசிய வருகைக்கென்று ஆவலுடன் காத்திருக்கிறவர்கள் பெற்றுக் கொள்ளப்போகும் நீதியின் கிரீடத்தைக் காட்டுகிறது. (2 தீமோ. 4 : 7, 8)

திரணை சுத்தப் பொன்னினால் உண்டாக்கப்பட்டது. பொன் மகாபரிசுத்தமான விசுவாசத்தைக் காட்டுகிறது. (1பேதுரு1:7; யூதா20) ஒருவர் சோதனைகள், உபத்திரவங்களின் வழியாகக் கடந்து போவதின் மூலம் விசுவாசத்திற்குச் சாட்சியாயிருப்பதைக் காட்டுகிறது. பெட்டிக்கு மூடி இல்லை. அது கிருபாசனத்தால் மூடப்பட்டது.

2. கிருபாசனத்தைப் பற்றி விளக்கமாக எழுது.

கிருபாசனம் 2 ½ முழ நீளமும், 1 ½ அகலமுமானது. இது நம்முடைய பெலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடியவராயிருக்கிற பிரதான ஆசாரியரும், அதினிமித்தமாய் நாம் தைரியமாய்க் கிட்டிச் சேரக் கூடியவருமாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. (எபி 4 : 15, 16) கிருபாசனம் பசும் பொன்னினால் உண்டாக்கப்பட்டது, இது கர்த்தராகிய இயேசுவின் விலையேறப்பெற்ற விசுவாசத்தையும் காட்டுகிறது. இரக்கத்தின் ஆசனம் என்று பொருள்படும். "Mercy seat" எனக் கூறப்பட்டிருந்தாலும், புதிய ஏற்பாட்டில் அது கிருபாசனமாகக் காணப்படுகிறது. கிருபை தனிமையாக வருவதில்லை. அது விசுவாசத்தோடு சேர்ந்து வருகிறது. அது போலவே கர்த்தராகிய இயேசு கிருபையின் நிறைவாக வந்தார். அவர் விசுவாசகத்தில் ஐசுவரியமுள்ளவராகவும் வெளிப்பட்டார்.

## IV <u>*விரிவான விடையளி*</u> : (10 Marks)

1. உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கப்பட்ட பொருட்கள் யாவை? அதன் ஆவிக்குரிய அர்த்தங்களை எழுது.

உடன்படிக்கைப் பெட்டிக்குள் மூன்று பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன.(எபி 9:4). அவையாவன:

1. மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரம் : மன்னா, ஜீவ அப்பமாகிய இயேசுவை அல்லது மனிதனுடைய மனதைப் புதுப்பித்து(ரோமர் 12 : 2)அதைப் பொற்பாத்திரம் போல் மாற்றுகிற கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்தலைக் காண்பிக்கிறது. மேலும் இது மனதில் பிரமாணங்கள் எழுதப்படுவதைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

2. இரு கற்பலகைகள் : புதிய ஏற்பாட்டில் தேவன் மேலுள்ள அன்பு, மனுஷர் மேலுள்ள அன்பு என அன்பின் இரு பிரமாணங்களாக, கர்த்தராகிய இயேசு சுருக்கிய பத்துக் கற்பனைகளைக் காட்டுகிறது. புதிய ஏற்பாட்டில் ஆவியினால் இருதயமாகிய சதையான பலகைகளில் பிரமாணங்கள் எழுதப்படுகின்றன. (2 கொரி 3 : 3)

3. ஆரோனின் துளிர்த்த கோல் (எண். 17 : 8) தேவ சமுகத்தில் வைக்கப்பட்ட ஆரோனின் கோல், துளிர்விட்டு பூப்பூத்து, வாதுமைப் பழங்களைக் கொடுத்தது. அதுபோலவே சபையில் ஒவ்வொருவரும், உயிர்த்தெழுதலின் வல்லமையினால் சரீரத்தில் உயிர்ப்பிக்கப்பட்டு ஆவியின் கனியைக் கொடுக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. மேலும் இது கர்த்தருடைய இரகசிய வருகையில் நம் சரீரம் மீட்கப்படுவதையும் காட்டுகிறது. (ரோமர் 8 : 11, 23)

## V <u>*விரிவாக தெளிவாக வசன ஆதாரத்துடன் விடையளி :*</u> (15 Marks)

1. கிருபாசனத்தைப் பற்றியும் அதன் மேலுள்ள இரு கேருபீன்கள் பற்றியும் எழுது.

கிருபாசனம் (யாத் 37 : 6)

கிருபாசனம் 2 ½ முழ நீளமும், 1 ½ அகலமுமானது. இது நம்முடைய பெலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடியவராயிருக்கிற பிரதான ஆசாரியரும், அதினிமித்தமாய் நாம் தைரியமாய்க் கிட்டிச் சேரக் கூடியவருமாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. (எபி 4 : 15, 16) கிருபாசனம் பசும் பொன்னினால் உண்டாக்கப்பட்டது, இது கர்த்தராகிய இயேசுவின் விலையேறப்பெற்ற விசுவாசத்தைக் காட்டுகிறது. இரக்கத்தின் ஆசனம் என்று பொருள்படும். "Mercy seat" எனக் கூறப்பட்டிருந்தாலும், புதிய ஏற்பாட்டில் அது கிருபாசனமாகக் காணப்படுகிறது. கிருபை தனிமையாக வருவதில்லை. அது விசுவாசத்தோடு சேர்ந்து வருகிறது. அது போலவே கர்த்தராகிய இயேசு கிருபையின் நிறைவாக வந்தார். அவர் விசுவாசகத்தில் ஐசுவரியமுள்ளவராகவும் வெளிப்பட்டார்.

கிருபாசனத்தின் மீதுள்ள இரு கேருபீன்கள் (யாத். 37 : 7 - 9)

இரு கேருபீன்கள் கிருபையின் மீது நிற்பவர்களும், கிறிஸ்துவுக்கு உடன் வேலையாட்களும் (2 கொரி. 6 : 1), கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகளுமாகிய புதிய ஏற்பாட்டு தேவ ஊழியரைக் காட்டுகின்றன.

(2 கொரி. 5 : 20) பொன்னைத் தகடாய் அடித்து கேருபீன்கள் செய்யப்பட்டன. அதில் மரம் காணப்படவில்லை. அவை உள்ளே வெறுமையாய் இருந்தது. இது, புதிய ஏற்பாட்டு ஊழியக்காரர் கர்த்தராகிய இயேசுவைப் போல் தங்களைத் தாங்களே வெறுமையாக்கிக் கொண்டவர்களாக ஊழியஞ் செய்ய வேண்டும் என்பதைக் காட்டுகிறது. (பிலி 2 : 5 - 8)

கேருபீன்களின் முகங்கள் கிருபாசனத்தை நோக்குகிறவையாயிருந்தன. இது தேவனுடைய ஊழியக்காரர் தங்களுடைய சகல நம்பிக்கையையும் விசுவாசத்தையும் கிறிஸ்துவில் மாத்திரம் வைத்து, அவரையே நோக்கிப் பார்ப்பதைக் காண்பிக்கிறது

அவைகள் ஒன்றுக்கொன்று எதிர்முகமுள்ளவைகளாய் இருந்தன, இது ஊழியமானது ஐக்கியத்தோடு செய்யப்பட வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

தேவன் கேருபீன்களின் மத்தியிலிருந்து பேசினார். (யாத். 25 : 22) இது, தேவன் தம்முடைய ஸ்தானாபதிகளாகிய தேவ ஊழியர் மூலம் சபையோடு பேசுகிறார் என்பதைக் காட்டுகிறது.

கேருபீன்கள் தங்கள் செட்டைகளை உயர விரிக்கின்றன என்பது தேவ ஊழியர் உலகத்தையும் மாம்சத்தையும் வெறுத்து அவற்றிற்கு மேலான ஒரு ஜீவியஞ் செய்து பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தினால் நிறைந்து ஊழியஞ் செய்கின்றனர் என்பதைக் காட்டுகிறது

**VI** *<u>போதனை :</u>* (2 Marks)

நாம் தேவனோடு நெருங்கிய ஐக்கியமுள்ள ஜீவியம் செய்து அவருடைய சமூகத்தில் தொடர்ந்து ஜீவிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

# ஆசரிப்புக் கூடாரம்

(பகுதி V)

**I** <u>*மனப் பாடவசனம் :*</u> (2 Marks)

1 கொரிந்தியர் 1 : 27 - 29

ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார். பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார்.

உள்ளவைகளை அவமாக்கும்படி உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும் , தேவன் தெரிந்து கொண்டார்.

மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமை பாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்.

**II** <u>*ஓரிரு வார்த்தைகளில் விடையளி*</u> : (2 Mark)

**1.** ஆசரிப்புக் கூடாரத்தை உண்டாக்குவதற்காக உபயோகிக்கப்பட்ட பொருட்கள் யாவை?

ஆசரிப்புக் கூடாரத்தை உண்டாக்குவதற்காக பொன், பசும்பொன், வெண்கலம் ஆகிய உலோகங்களும் சீத்திம் மரமும் உபயோகிக்கப்பட்டன. (பாடத்திட்டம்)

**2.** ஆசரிப்புக் கூடாரத்தில் மரத்தினால் செய்யப்பட்ட பணிமுட்டுகள் யாவை?

உடன்படிக்கைப் பெட்டி, சமூகத்தப்ப மேஜை, தூபபீடம் இவை மூன்றும் சித்தீம் மரத்தினால் செய்யப்பட்டு பசும்பொன்னினால் மூடப்பட்டன. பலிபீடம் மரத்தால் செய்யப்பட்டு வெண்கலத்தால் மூடப்பட்டது. (யாத். 27 : 1, 2) :30 : 1, 3,25 : 23,24: 32:1, 2)

**3.** ஆசரிப்புக் கூடாரத்தில் உபயோகிக்கப்பட்ட பொன், வெண்கலம், மரம் எதைக் காட்டுகிறது?

பொன் விசுவாசத்தையும், வெண்கலம் கிருபையையும் காட்டுகிறது. ஆசரிப்புக் கூடாரத்தில் உபயோகிக்கப்பட்ட சீத்திம் மரம் மனுஷ பெலவீனத்தைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

**4.** ஆசரிப்புக் கூடாரத்தில் மரத்தால் செய்யப்பட்ட பணிமுட்டுகள் பொன், வெண்கலம் இவற்றால் மூடப்பட்டுள்ளது என்பது எதைக் காட்டுகிறது?

ஆசரிப்புக் கூடாரத்தில் மரத்தால் செய்யப்பட்ட பணிமுட்டுகள் பொன், வெண்கலம் இவற்றால் மூடப்பட்டது என்பது சகல பலவீனங்களும் குறைகளுமுள்ள மனுஷனைத் தேவன் எவ்விதம் தெரிந்தெடுத்து அவனை இரட்சித்து, அவனுடைய மனுஷ பெலவீனங்கள் இனிமேல் காணப்படாத விதத்தில் அவனைத் தம்முடைய கிருபையினாலும் விசுவாசத்தினாலும் நிறைக்கிறார் என்பதைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

**5.** புதிய ஏற்பாட்டில் தேவன் எங்கு வாசஞ் செய்கிறார்?

புதிய ஏற்பாட்டில் வேறுபிரிக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்ட தம்முடைய ஜனங்களுக்குள் தேவன் வாசஞ் செய்கிறார்.

**6.** தேவன் மனிதனை எவ்வாறு நித்தியமானவனாக்குகிறார்?

தேவன் அழிவில்லாத வசனத்தை அவனுக்குள் விதைப்பதின் மூலமாக (1பேதுரு1:23) அவனை மறுபடியும் பிறந்த அனுபவத்திற்கு வழிநடத்துவதாலும் (யோவான் 3 : 3) அவனை வேறுபிரிப்பதன் மூலமாகவும் தேவன் அவனை நித்தியத்திற்கு ஆயத்தமாக்குகிறார்.

**7.** தேவன் மனிதனை எப்படி தம்முடைய வாசஸ்தலமாக்குகிறார்?

நித்தியமானவனாக்கப்பட்ட மனுஷனைக் கர்த்தர் பரிசுத்தாவியினால் நிறைத்து, அவனைப் பரிசுத்தப்படுத்தி, தம்முடைய வாசஸ்தலமாக்குகிறார். (1 கொரி 3 : 16, 6 : 19)

**8.** ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள மூன்று இடங்கள் நித்தியத்திலுள்ள எந்தெந்த இடங்களைக் குறிக்கின்றன?

ஆசரிப்புக் கூடாரத்தின் மூன்று பகுதிகளான வெளிப்பிரகாரம், பரிசுத்தஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம் முறையே நித்தியத்திலுள்ள மூன்று இடங்களாகிய புதிய பூமி, புதிய வானம், புதிய எருசலேம் ஆகியவற்றைக் குறிக்கிறது. (வெளி 21 : 1 - 3)

**9.** புதிய பூமியில் யார் வாசஞ் செய்வார்கள் ?
இரட்சிக்கப்பட்டவர்கள் புதிய பூமியில் வாசஞ் செய்வார்கள். (பாடத்திட்டம்)

**10.** புதிய வானத்தில் யார் வாசஞ் செய்வார்கள் ?
புதிய வானத்தில் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள், பொதுவான இரத்தசாட்சிகள், உபத்திரவ கால இரத்த சாட்சிகள் ஆகியோர் வாசஞ் செய்வார்கள். (பாடத்திட்டம்)

**11.** புதிய எருசலேமில் யார் வாசஞ் செய்வார்கள்?
புதிய எருசலேமில் கிறிஸ்துவும், அவருடைய மணவாட்டியும் வாசஞ் செய்வார்கள். (பாடத்திட்டம்)

**III** *<u>சுருக்கமான விடையளி</u>*: (5 Marks)

**1.** ஆசரிப்புக் கூடாரத்தில் முழுவதும் உலோகத்தால் செய்யப்பட்ட பணிமுட்டுகள் யாவை? இவை ஆசரிப்புக் கூடாரத்தின் எந்த எந்தப் பகுதியில் வைக்கப்பட்டிருந்தன?
கிருபாசனம், குத்துவிளக்கு பசும்பொன்னினாலும், கேருபீன்கள் பொன்னினாலும் செய்யப்பட்டன. தொட்டி வெண்கலத்தால் செய்யப்பட்டது. கேருபீன்கள் மகா பரிசுத்த ஸ்தலத்தில் கிருபாசனத்தின் மீது வைக்கப்பட்டன. குத்துவிளக்கு பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டது. வெண்கலத் தொட்டி வெளிப்பிரகாரத்தில் பலிபீடத்திற்கும் ஆசரிப்புக் கூடாரத்திற்கும் இடையே வைக்கப்பட்டது.

**2.** ஆசரிப்புக் கூடாரம் தேவன் தம்முடைய ஜன களின் மத்தியில் வாசம் பண்ணும் புதிய ஏற்பாட்டின் அனுபவத்திற்கு நிழலாயிருக்கிறது என்பதை வசன ஆதாரத்துடன் விவரி?
ஆசரிப்புக் கூடாரம் தேவன் தம்முடைய ஜனங்களின் மத்தியில் வாசம் பண்ணும் புதிய ஏற்பாட்டின் அனுபவத்திற்கு நிழலாயிருக்கிறது. ஏனெனில் நித்திய தேவன் மோசேயினால் உண்டாக்கப்பட்ட ஆசரிப்புக் கூடாரத்தில் வாசஞ் செய்தார். இருப்பினும், அழிந்து போகக் கூடிய பொருட்களால் உண்டாக்கப்பட்ட ஒரு கூடாரம் தேவனுடைய நித்திய வாசஸ்தலமாயிருக்க முடியாது. புதிய ஏற்பாட்டில் வேறு பிரிக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்ட தம்முடைய ஜனங்களுக்குள் தேவன் வாசஞ் செய்கிறார். அழிவில்லாத வசனத்தை மனிதனுக்குள் விதைத்து (1 பேதுரு 1 : 23) அதன் மூலம் அவனை மறுபடியும் பிறந்த அனுபவத்திற்கு வழி நடத்துவதாலும் (யோவான் 3 : 3) அவனை வேறுபிரிப்பதின் மூலமாகவும் , தேவன் அவனை நித்தியத்திற்கு ஆயத்தமாக்குகிறார். அப்படிப்பட்ட மனுஷனைக் கர்த்தர் பரிசுத்த ஆவியினால் நிறைத்து அவனைப் பரிசுத்தப்படுத்தி, தம்முடைய வாசஸ்தலமாக்குகிறார். (1 கொரி 3 : 10, 6 : 19)

**3.** ஆசரிப்புக் கூடாரத்தையும் நித்தியத்தையும் ஒப்பிட்டு வசன ஆதாரத்துடன் எழுது.
ஆசரிப்புக் கூடாரத்தின் மூன்று பகுதிகள் வெளிப்பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்தஸ்தலம் முறையே, நித்தியத்திலுள்ள மூன்று இடங்களாகிய புதிய பூமி, புதிய வானம், புதிய எருசலேம் இவற்றைக் குறிக்கின்றன. (வெளி 21 : 1 - 3)
<u>புதிய பூமி</u> : நித்தியத்திலே இரட்சிக்கப்பட்டவர்கள் புதிய பூமியில் வாசஞ் செய்வார்கள்.
<u>புதிய வானம்</u> : பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள், பொதுவான இரத்தசாட்சிகள் (கிறிஸ்துவின் மணவாட்டியாகிய பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்களின் கூட்டத்திற்குட்படாத இரத்த சாட்சிகள்) உபத்திரவ கால இரத்த சாட்சிகள் ஆகியோர் இங்கு வாசஞ் செய்வார்கள்.
<u>புதிய எருசலேம்</u> : புதிய எருசலேமில் கிறிஸ்துவும், அவருடைய மணவாட்டியும் (ஜெய கொண்ட சபை) நித்தியமாக வாசஞ் செய்யும் இடமாகும். இவ்வாறாக ஆசரிப்புக் கூடாரத்தின் மூன்று பகுதிகளை நித்திய வாசஸ்தலத்தோடு ஒப்பிடலாம்.

**VII** *<u>போதனை :</u>* (2 Marks)

மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாக பெருமைபாராட்டாதபடிக்கு பெலவீனரும் பைத்தியக்காரரும் அற்பமாய் எண்ணப்பட்டவர்களுமாகிய நம்மைத் தேவன் தெரிந்தெடுத்து பூரணத்தின் இப் பெரிய வேலையைச் செய்கிறார். அப்படிச் செய்கிறார். எனவே நாம் தேவனுக்கு சகல மகிமையையும் செலுத்தி, தாழ்மையாயிருக்கக் கற்றுக் கொள்வோமாக.

*************

# பண்டிகைகள்

(பகுதி I)

**I** *மனப்பாடவசனம் :* (2 Marks)

ஏசாயா 51 : 1

நீதியைப் பின்பற்றி, கர்த்தரைத் தேடுகிற நீங்கள் எனக்குச் செவி கொடுங்கள் ; நீங்கள் வெட்டி எடுக்கப்பட்ட கன்மலையையும், நீங்கள் தோண்டி எடுக்கப்பட்ட துரவின் குழியையும் நோக்கிப் பாருங்கள்.

**II** *ஓரிரு வாக்கியங்களில் விடையளி* : (2 Marks)

**1.** இஸ்ரவேலர் ஓய்வு நாள் பண்டிகையை எப்போது ஆசரித்தார்கள்?

இஸ்ரவேல் ஜனங்கள் ஒவ்வொரு வாரத்திலும் ஓய்வு நாள் பண்டிகையை ஏழாம்நாளில் ஆசரித்தார்கள். (லேவி. 23 : 2, 3)

**2.** மனமடிவுள்ளவர்களாயும் இருதயத்தில் இளைப்பாறுதல் அற்றவர்களாயும் எகிப்திலே யார் தவித்துக் கொண்டிருந்தார்கள் ? ஏன்?

இஸ்ரவேல் ஜனங்கள் மனமடிவுள்ளவர்களாயும், இருதயத்தில் இளைப்பாறுதல் அற்றவர்களாயும் எகிப்தில் தவித்துக் கொண்டிருந்தார்கள். ஏனெனில் இஸ்ரவேலர் எகிப்து தேசத்தில் நானூறு வருடம் அடிமைகளாயிருந்தனர். பார்வோனுடைய ஆளோட்டிகள் அவர்களைக் கடினமாக வேலை வாங்கினர். (யாத். 1 : 13, 14)

**3.** இஸ்ரவேல் ஜனங்கள் வாரத்தில் ஒருநாளாயினும் ஓய்ந்திருக்க வேண்டும் என்று விரும்பியது யார்? அவர்கள் எவ்வாறு ஓய்ந்திருக்க வேண்டும்?

இஸ்ரவேல் ஜனங்கள் வாரத்தில் ஒரு நாளாயினும் ஓய்ந்திருக்க வேண்டும் என்று தேவன் விரும்பினார்.

அவர்கள் தேவன் தங்களுக்கு அருளிச் செய்திருந்த விடுதலையை நினைவுகூர்ந்து ஓய்ந்திருந்து அதைக் குறித்து களிகூரவேண்டும் என தேவன் விரும்பினார். (பாடத்திட்டம்)

**4.** இஸ்ரவேலர் எகிப்தில் இருந்த நாட்களில் யாருக்கு சொந்தமானவர்களாயிருந்தார்கள்? அவர்கள் ஓய்வு நாளில் ஓய்ந்திருக்கும்படி அவர்களோடு உடனபடிக்கை செய்தது யார்?

இஸ்ரவேல் எகிப்தில் இருந்த நாட்களிலெல்லாம் பார்வோனுக்குச் சொந்தமானவர்களாயிருந்தனர்.

அவர்கள் ஓய்வுநாளில் ஓய்ந்திருக்கும்படி தேவன் அவர்களோடு உடன்படிக்கை செய்திருந்தார். (உபா. 5 : 15)

**5.** தேவனாகிய கர்த்தர் எந்த இடத்தில் இஸ்ரவேலரோடு உடன்படிக்கை பண்ணினார்? யார் நமக்கு இளைப்பாறுதல் தருவதாக வாக்கு பண்ணியிருக்கிறார்?

தேவனாகிய கர்த்தர் ஒரேபிலே இஸ்ரவேலரோடு உடன்படிக்கை பண்ணினார்.(உபா5:2)

இயேசு நமக்கு இளைப்பாறுதல் தருவதாக வாக்குப் பண்ணியிருக்கிறார். (மத். 11 : 28)

**6.** ஒரு பாவி எப்போது பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொள்ளுகிறான்?

ஒரு பாவி தன் பாவபாரத்தை இயேசுவின் மேல் வைத்து, மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பும் போது, பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொள்ளுகிறான். (பாடத்திட்டம்)

**7.** நம்முடைய ஜீவியத்தில் நாம் எப்போது ஓய்வுநாள் பண்டிகையை ஆசரிக்கிறோம்? எப்போது அதை பரிசுத்த குலைச்சலாக்கி விடுகிறோம்?

நாம் நம்முடைய பாவபாரத்தை இயேசுவின் மேல் வைத்து, மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பும்போது, பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொள்ளுகிறோம். அது நம்முடைய ஆத்துமாவிற்கோர் .இளைப்பாறுதலாயிருக்கிறது. இதுவே நமது ஜீவியங்களில் நாம் ஆசரிக்கும் ஓய்வுநாள் பண்டிகை. இந்த இளைப்பாறுதலை நாம் இழந்துபோகும் போது, ஓய்வுநாள் பண்டிகையை பரிசுத்த குலைச்சலாக்கி விடுகிறோம் (பாடத்திட்டம்)

**8.** இஸ்ரவேல் புத்திரர் எதை நினைவு கூறும் பொருட்டாக பஸ்கா பண்டிகையை ஆசரித்தார்கள்?

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் அடிமைத்தன தேசமாகிய எகிப்திலிருந்து கர்த்தர் எவ்விதம் தங்களை வெளியே கொண்டு வந்தார் என்பதை இஸ்ரவேல் புத்திரர் நினைவுகூரும் பொருட்டாக ஒவ்வொரு வருடமும் முதலாம் மாதம் பதினான்காம் தேதி சாயங்காலத்தில் பஸ்கா பண்டிகையை ஆசரித்தார்கள் (பாடத்திட்டம்)

**9.** இஸ்ரவேலர் பஸ்கா பண்டிகையை எப்போது ஆசரித்ததார்கள் ? ஆவிக்குரிய பிரகாரமாக பஸ்கா ஆட்டுக் குட்டி யாரைக் குறிக்கிறது?

இஸ்ரவேலர் ஒவ்வொரு வருடமும் முதலாம் மாதம் பதினான்காம் தேதி சாயங்காலத்தில் பஸ்கா பண்டிகையை ஆசரித்தார்கள்.

ஆவிக்குரிய பிரகாரமாக பஸ்கா ஆட்டுக்குட்டி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. (1 கொரி. 5 : 7)

**10.** நம்முடைய ஜீவியங்களில் நாம் முதன்முறையாக பஸ்கா பண்டிகையை எப்போது ஆசரிக்கிறோம்?

மனந்திரும்புதலில் நாம் பாவத்தின் அடிமைத்தனத்தினின்று வெளியே வரும்போது, நம் ஜீவியங்களில் முதன்முறையாக பஸ்கா பண்டிகையை ஆசரிக்கிறோம்.. (பாடத்திட்டம்)

**11.** ஒவ்வொரு வருடமும் இஸ்ரவேல் புத்திரர் பஸ்காவை ஆசரிக்க வேண்டும என்பது எதைக் காட்டுகிறது?

ஒவ்வொரு வருடமும் இஸ்ரவேல் புத்திரர் பஸ்காவை ஆசரிக்க வேண்டும் என்பது நாம் எவ்வாறு இரட்சிக்கப்பட்டோம் என்பதை எப்போதும் நினைவுகூர்ந்து தேவனை ஸ்தோத்தரிக்க வேண்டும் என்பதை காட்டுகிறது. (ஏசாயா 51 : 1).

**12.** நாம் எதை மறவாமல் தேவனை ஸ்தோத்தரித்துக் கொண்டே இருக்க வேண்டும்?

நாம் எவ்வாறு இரட்சிக்கப்பட்டோம், நாம் எப்படிப்பட்ட நிர்ப்பந்தமான நிலவரத்திலிருந்தோம் என்பதையும், கர்த்தர் எவ்விதம் இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்குக் கொண்டு வந்தார் என்பதையும் ஒருபோதும் மறவாது, இப்பெரிய விடுதலைக்காகத் தேவனை ஸ்தோத்தரித்துக் கொண்டே இருக்கவேண்டும்.

**13.** தேவன் செய்த நன்மைகளை மறவாமல் அவரை ஸ்தோத்தரித்துக் கொண்டே இருப்பதின் மூலம் நாம் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்கள் யாவை?

தேவன் செய்த நன்மைகளை மறவாமல், அவரை ஸ்தோத்தரித்துக் கொண்டே இருப்பது, நாம் தாழ்மையுள்ளவர்களாயிருக்கவும், தேவனுக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கவும், ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ந்து கொண்டிருக்கவும் நமக்கு உதவி செய்யும். (பாடத்திட்டம்)

**III** *<u>சுருக்கமான விடையளி</u>*: (5 Marks)

**1.** பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் ஜனங்கள் ஆசரித்த பண்டிகைகளை வசன ஆதாரத்துடன் வரிசையாக எழுது.

1. ஓய்வுநாள் பண்டிகை (லேவி. 23 : 1 - 3)
2. பஸ்கா பண்டிகை (லேவி. 23 : 5)
3. புளிப்பில்லா அப்பப் பண்டிகை (லேவி. 23 : 6 - 8)
4. அறுப்புக்கால பண்டிகை அல்லது பெந்தெகொஸ்தே பண்டிகை.(லேவி.23:9-22)
5. எக்காளங்களின் பண்டிகை (லேவி. 23 : 23 - 25)
6. பாவ நிவிர்த்தி செய்யும் பண்டிகை (லேவி. 23 : 26 - 32)
7. கூடாரப் பண்டிகை (லேவி. 23 : 33 - 43)

**2.** பஸ்கா பண்டிகை பற்றி எழுது.

இஸ்ரவேல் புத்திரர் தங்களை அடிமைத்தன தேசமாகிய எகிப்திலிருந்து கர்த்தர் எவ்விதம் வெளியே கொண்டு வந்தார் என்பதை நினைவுகூரும் பொருட்டாக ஒவ்வொரு வருடமும் முதலாம் மாதம் பதினான்காம் தேதி சாயங்காலத்தில் இப்பண்டிகை ஆசரிக்கப்பட்டது.

ஆவிக்குரிய பிரகாரமாக பஸ்கா ஆட்டுக்குட்டி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. பரி. பவுல் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே எனக் கூறுகிறார்.(1 கொரி. 5 : 7) மனந்திரும்புதலில் நாம் பாவத்தின் அடிமைத்தனத்தினின்று வெளியே வரும்போது, நம் ஜீவியத்தில் முதன்முறையாக பஸ்கா பண்டிகையை ஆசரிக்கிறோம். அதன் பின்னர் ஒவ்வொரு வருடமும் இஸ்ரவேல் புத்திரர் பஸ்காவை ஆசரித்தது, நாம் எவ்வாறு இரட்சிக்கப்பட்டோம் என்பதை எப்போதும் நினைவுகூர்ந்து தேவனை ஸ்தோத்தரிக்க வேண்டும் என்பதை காட்டுகிறது. நாம் வெட்டி எடுக்கப்பட்ட கன்மலையையும், தோண்டி எடுக்கப்பட்ட துரவின் குழியையும் நோக்கிப் பார்க்க வேண்டும். (ஏசாயா 51 : 1) நாம் எப்படிப்பட்ட நிர்பந்தமான நிலவரத்திலிருந்தோம் என்பதையும், கர்த்தர் எவ்விதம் இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்குக் கொண்டுவந்தார் என்பதையும் ஒருபோதும் மறவாது,

இப்பெரிய விடுதலைக்காகத் தேவனை ஸ்தோத்தரித்துக் கொண்டே இருக்கவேண்டும். இது நாம் தாழ்மையுள்ளவர்களாயிருக்கவும், தேவனுக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கவும், ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ந்து கொண்டிருக்கவும் நமக்கு உதவி செய்யும்.

**IV** *விரிவான விடையளி* : (10 Marks)

**1.** இஸ்ரவேலர் ஓய்வு நாள் பண்டிகையை ஆசரித்ததற்கான காரணங்களையும், புதிய ஏற்பாட்டு இஸ்ரவேலராகிய நாம் ஓய்வுநாள் பண்டிகையை ஆசரிக்கவேண்டிய விதத்தையும் வசன ஆதாரத்துடன் எழுது.

இஸ்ரவேல் ஜனங்கள் ஆறுநாள் வேலை செய்ய வேண்டும். ஆனால் ஏழாம் நாள் பரிசுத்த சபை கூடுதலான ஓய்வு நாள். அவர்கள் அதில் ஒரு வேலையும் செய்யலாகாது. அது கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் நாளாயிருந்தது. (வேலி. 23 : 2, 3)

காரணங்கள் :

1. இஸ்ரவேலர் எகிப்து தேசத்தில் நானூறு வருடம் அடிமைகளாயிருந்தனர். பார்வோனுடைய ஆளோட்டிகள் அவர்களைக் கடினமாக வேலை வாங்கினர்.(யாத்.1 : 13, 14)
மனமடிவுள்ளவர்களாயும், இருதயத்தில் இளைப்பாறுதல் அற்றவர்களாயும் எகிப்தில் தவித்துக் கொண்டிருந்தார்கள். இவ்விதம் ஓய்வில்லாமல் இரவும் பகலும் உழைத்துக் கொண்டிருந்த தம்முடைய ஜனங்கள், தங்களுடைய மீட்புக்குப் பின்னர், தேவன் தங்களுக்கு அருளிச் செய்திருந்த விடுதலையை நினைவுகூர்ந்து, ஓய்திருந்து அதைக் குறித்து களிகூரவேண்டும் என தேவன் விரும்பினார்.

2. மேலும் எகிப்தில் இருந்த நாட்களிலெல்லாம் அவர்கள் பார்வோனுக்குச் சொந்தமானவர்களாயிருந்தனர். ஆனால், இப்போது அவர்கள் தங்களை மீட்டுக் கொண்ட கர்த்தருக்குச் சொந்தமானவர்களாயினர். எனவே, தேவன் அவர்களோடு செய்திருந்த உடன்படிக்கையின்படியே அவர்கள் ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தனர். மோசே இஸ்ரவேலர் எல்லாரையும் அழைத்து, அவர்களிடம், இஸ்ரவேலரே, நான் இன்று உங்கள் காதுகள் கேட்கச் சொல்லும் கட்டளைகளையும் நியாயங்களையும் கேளுங்கள். நீங்கள் அவைகளின்படியே செய்யும்படிக்கு அவைகளைக் கற்றுக் கைக்கொள்ளக்கடவீர்கள். நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஓரேபிலே நம்மோடே உடன்படிக்கை பண்ணினார். அந்த உடன்படிக்கையைக் கர்த்தர் நம்முடைய பிதாக்களுடன் பண்ணாமல், இந்நாளில் இங்கே உயிரோடிருக்கிற நம்மெல்லாரோடும் பண்ணினார் எனக் கூறினான். (உபா. 5 : 1 - 3). ஓய்வுநாளை ஆசரித்தல் இக்கட்டளைகளில் ஒன்றாகும். (உபா. 5 : 15) இவ்விதம் ஒவ்வொரு வாரத்திலும் ஆறுநாட்கள் அவர்கள் கானானை நோக்கிப் பிரயாணம் செய்தனர். ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தனர்.

புதிய ஏற்பாட்டில் ஓய்வுநாள் பண்டிகை ஆசரிக்க வேண்டிய விதம் :

ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நாம் குறிக்கப்பட்ட ஒரு நாளில் சரீரப்பிரகாரமாக ஓய்ந்திருக்கத் தேவையில்லை. மத்தேயு 11:28இல் கர்த்தராகிய இயேசு நமக்கு இளைப்பாறுதல் தருவதாக வாக்குப் பண்ணியிருக்கிறார். ஒரு பாவி தன் பாவபாரத்தை இயேசுவின் மேல் வைத்து, மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பும் போது, பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொள்ளுகிறான். அது அவனுடைய ஆத்துமாவிற்கோர் இளைப்பாறுதலாயிருக்கிறது. இதுவே நமது ஜீவியங்களில் நாம் ஆசரிக்கும் ஓய்வினாள் பண்டிகை. இந்த இளைப்பாறுதலை நாம் இழந்து போனால் ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்கி விட்டோம் என்பது பொருள்.

***********

# பண்டிகைகள்

(பகுதி II)

**I** *மனப்பாடவசனம் :* (2 Marks)

தீத்து 2 : 11 - 14

ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபையானது பிரசன்னமாகி,

நாம் அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும், நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி,

நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது.

அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.

**II** *ஓரிரு வாக்கியங்களில் விடையளி* : (2 Marks)

**1.** புளிப்பில்லாத அப்பப்பண்டிகை எதைக் காண்பிக்கிறது? இப்பண்டிகையை நம் ஜீவியங்களில் நாம் எப்போது ஆசரிக்கிறோம்?

இப்பண்டிகை பரிசுத்தமாகுதலைக் காண்பிக்கிறது. நம் ஜீவியங்களில் இரட்சிப்புக்குப் பின்னர் நாம் இப்பண்டிகையை ஆசரிக்கிறோம். (பாடத்திட்டம்)

**2.** 1 கொரிந்தியர் 5 : 8 ன்படி பழைய புளித்தமாவு எதைக் குறிக்கிறது? புளிப்பில்லா அப்பம் எதைக் குறிக்கிறது?

பழைய புளித்தமாவு துர்க்குணம், பொல்லாப்பு போன்ற சுபாவங்களையும் புளிப்பில்லா அப்பம் என்பது துப்புரவு உண்மை போன்ற திவ்விய சுபாவங்களையும் குறிக்கிறது,

**3.** முதலாம் நூற்றாண்டு ஜனங்கள் புளிப்பில்லா அப்பப் பண்டிகை உணர்த்தும் சத்தியத்தின்படி எவ்வாறு ஜீவித்தனர்?

முதலாம் நூற்றாண்டில் ஜனங்கள் இரட்சிக்கப்பட்ட போது புளிப்பில்லா அப்பப்பண்டிகை உணர்த்தும் சத்தியத்தின் படி, அவர்கள் தங்களுக்குள் ஒருமனப்பட்டவர்களாகவும் பாவிகளிலிருந்து வேறுபிரிந்தவர்களாகவும் ஜீவித்தனர். (பாடத்திட்டம்),

**4.** 'புளித்தமாவுள்ளவர்கள்' - யாரைக் குறிக்கிறார்கள்? நாம் எப்பொழுது நம்முடைய துப்புரவையும் உண்மையையும் இழந்து போகக் கூடியவர்களாயிருப்போம்?

தங்களுக்குள் புளித்தமாவுள்ளவர்கள் - தவறான உபதேசங்களைப் போதிப்பவர்களைக் காட்டுகிறது. இப்படிப்பட்டவர்களோடு நாம் கலந்து கொள்ளக் கூடாது. (மத். 16 : 11, 12) நாம் நம்முடைய வேறுபாட்டின் ஜீவியத்தை விட்டு விட்டால் நம்முடைய துப்புரவையும் உண்மையையும் இழந்து போவோம். (பாடத்திட்டம்)

**5.** அறுப்புக்காலப் பண்டிகை எப்பொழுது ஆசரிக்கப்பட்டது? இப்பண்டிகையின் மற்றொரு பெயரைக் குறிப்பிடு.

அறுப்புக்காலப் பண்டிகை அறுப்பின் முதற்பலனாகிய கதிர்க்கட்டு அசைவாட்டப்பட்டதன் பின்பு ஐம்பதாவது நாள் இப்பண்டிகை ஆசரிக்கப்பட்டது. பெந்தெகொஸ்தே என்பதன் பொருள் 'ஐம்பது' என்பதாகும். எனவே இப்பண்டிகை பெந்தெகொஸ்தே பண்டிகை எனவும் அழைக்கப்படுகிறது. (லேவி. 23 : 17)

**6.** பெந்தெகொஸ்தே நாளில் உருவாக்கப்பட்ட இரு கூட்டத்தார் யாவர்?

பெந்தெகொஸ்தே நாளில் அதாவது கர்த்தராகிய இயேசு உயிர்த்தெழுந்த ஐம்பதாவது நாளில் எருசலேமில் மேல் வீட்டில் ஏறக்குறைய நூற்றிருபது பேர் கூடியிருந்தனர். அவர்கள் யாவர் மேலும் பரிசுத்தாவி பொழிந்தருளப்பட்டது. (அப். 2:1-4) அந்நாளில் பரிசுத்தாவியின் ஞானஸ்நானத்தின் மூலமாய் விசுவாசிகள், பிரதிஷ்டை செய்யப்பட்ட தேவ ஊழியர் என்னும் இரு கூட்டத்தார் உருவாக்கப்பட்டனர்.

**7.** நாம் எப்பொழுது நம் ஜீவியங்களில் முதன் முறையாக பெந்தெகொஸ்தே பண்டிகையை ஆசரிக்கிறோம் ? நாம் எவ்வாறு அதைத் தொடர்ந்து ஆசரித்துக் கொண்டே இருக்கிறோம்?

நாம் பரிசுத்த ஆவியைப் பெறும்போது இப்பண்டிகையை நம் ஜீவியங்களில் முதன்முறையாக ஆசரிக்கிறோம், அதன்பின்னர் மறுபடியும் மறுபடியும் நாம் ஆவியினால் நிரப்பப்படுவதன் மூலம் அதைத் தொடர்ந்து ஆசரித்துக் கொண்டே இருக்கிறோம். (பாடத்திட்டம்)

**8.** நாம் எந்தெந்த பண்டிகைகளை ஆவிக்குரிய பிரகாரமாக சரியான விதத்தில் ஆசரித்தால் மிகுந்த சந்தோஷத்தோடே எக்காளப் பண்டிகையை ஆசரிக்கக் கூடியவர்களாயிருப்போம்?

நாம் ஓய்வுநாள் பண்டிகை, பஸ்கா பண்டிகை, புளிப்பில்லா அப்பப் பண்டிகை, பெந்தெகொஸ்தே பண்டிகை ஆகிய இவற்றை, ஆவிக்குரிய பிரகாரமாக சரியான விதத்தில் ஆசரித்தால் எக்காளப் பண்டிகையை அனுபவிக்கக் கூடியவர்களாய் இருப்போம்.

**9.** எக்காளங்களின் பண்டிகையும், கூடாரப்பண்டிகையும் எதைக் காட்டுகிறது?

<u>எக்காளப்பண்டிகை</u> ஆவிக்குரிய பிரகாரமாக கர்த்தருடைய இரகசிய வருகையில் சபை எடுத்துக் கொள்ளப்படுகிறதைக் காட்டுகிறது.

<u>கூடாரப்பண்டிகை</u> ஆவிக்குரிய பிரகாரமாக இப்பூமியில் ஆயிரவருட அரசாட்சியில் நாம் கர்த்தரோடுக்கூட சேர்ந்து ஆளுகை செய்து மகிழ்ச்சியாய் இருக்கும் நாட்களைக் காட்டுகிறது.

**10.** பாவ நிவிர்த்தி செய்யும் பண்டிகை எந்த சம்பவத்தைக் குறிக்கிறது?

கர்த்தர் தம்முடைய இரகசிய வருகையில் மணவாட்டி சபையைத் தம்மிடம் சேர்த்துக் கொண்ட பின் நடக்கும் ஒரு சம்பவத்தைக் குறிக்கிறது. சபையில் பூரணராக்கப்படாதவர்கள் கைவிடப்படுவார்கள். இவர்கள் கர்த்தருடைய வருகைக்குப் பின்பு உள்ள மூன்றரை வருட உபத்திரவ காலத்தில் மிருகத்தின் நாமத்தையோ, இலக்கத்தையோ, முத்திரையையோ தரித்துக் கொள்ளாது இரத்த சாட்சிகளாக மரிப்பதால் அவர்கள் தங்கள் பாவத்தை நிவர்த்தி செய்யும் பண்டிகையை ஆசரிக்கிறார்கள். இவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவார்கள். இதுவே பாவ நிவிர்த்தி செய்யும் பண்டிகை குறிக்கும் சம்பவம் ஆகும். (பாடத்திட்டம்)

**11.** எந்த எந்த பண்டிகையை ஆசரிப்பவர்கள் ஆயிர வருட அரசாட்சியில் பங்கு பெறுவார்கள் ?

1. கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்ததுக் கொள்ளப்படுகிறவர்களும் (எக்காளப் பண்டிகையை ஆசரிப்பவர்கள்)
2. கர்த்தருடைய இரகசிய வருகையில் கைவிடப்பட்டாலும் மிருகத்தின் நாமத்தையோ, இலக்கத்தையோ, முத்திரையையோ தரித்துக் கொள்ளாது இரத்த சாட்சியாக மரித்தவர்களும் (பாவ நிவிர்த்தி செய்யும் பண்டிகையை ஆசரித்தவர்கள்) -ஆயிர வருட அரசாட்சியில் பங்கு பெறுவார்கள். (பாடத்திட்டம்)

**12.** எந்தப் பண்டிகையை ஆசரிக்கும்படியாக நம்மை நாமே பாவத்திலிருந்தும் பாவிகளிலிருந்தும் வேறு பிரித்துக் கொள்ள வேண்டும்? எந்தப் பண்டிகையை ஆசரிக்க நாம் ஆவலோடு காத்திருக்க வேண்டும்?

புளிப்பில்லா அப்பப்பண்டிகையை ஆசரிக்கும்படியாக நம்மை நாமே பாவத்திலிருந்தும் பாவிகளிலிருந்தும் வேறுபிரித்துக் கொள்ள வேண்டும்.

எக்காளங்களின் பண்டிகையை ஆசரிக்க நாம் ஆவலோடு காத்திருக்க வேண்டும்.(பாடத்திட்டம்)

**13.** இஸ்ரவேலில் பிறந்தவர்கள் எல்லாரும் ஏன் கூடாரப்பண்டிகையை ஆசரிக்க வேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட்டார்? எத்தனை நாள் ஆசரிக்க வேண்டும்?

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின போது அவர்களைக் கூடாரங்களில் குடியிருக்கப்பண்ணினதை அவர்கள் சந்ததியார் அறியும்படிக்கு இஸ்ரவேலில் பிறந்தவர்கள் எல்லாரும் கூடாரப்பண்டிகையை ஆசரிக்க வேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட்டார்.

கூடாரப்பண்டிகையை ஏழு நாள் ஆசரிக்க வேண்டும். (லேவி. 23 : 42, 43)

**14.** இஸ்ரவேல் புத்திரர் புளிப்பில்லா அப்பப்பண்டிகையை எப்போது ஆசரித்தார்கள்? கூடாரங்களின் பண்டிகையை எப்போது ஆசரித்தார்கள்?

புளிப்பில்லா அப்பப்பண்டிகையை முதலாம் மாதம் பதினைந்தாம் தேதி ஆசரித்தார்கள். கூடாரப்பண்டிகையை ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி முதல் ஏழு நாட்கள் ஆசரித்தார்கள். (லேவி. 23 : 5, 6, 7)

**15.** இஸ்ரவேலர் ஏழாம் மாதத்தில் ஆசரித்த பண்டிகைகளை எழுது.

*1.* எக்காளங்களின் பண்டிகை (லேவி. 23 : 23)
*2.* பாவ நிவர்த்தி செய்யும் பண்டிகை (லேவி. 23 : 27)
*3.* கூடாரங்களின் பண்டிகை (லேவி. 23 : 39)

**16.** கர்த்தருடைய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய தேவனுடைய பிள்ளைகள் எந்த நான்கு பண்டிகைகள் குறிக்கும் ஆவிக்குரிய அனுபவங்களை அடைந்திருக்க வேண்டும்?

கர்த்தருடைய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய தேவனுடைய பிள்ளைகள் முதல் நான்கு பண்டிகைகளாகிய 1, ஓய்வுநாள் பண்டிகை 2. பஸ்கா பண்டிகை 3. புளிப்பில்லா அப்பப் பண்டிகை 4. அறுப்புக்கால பண்டிகை. அல்லது பெந்தெகொஸ்தே பண்டிகை குறிக்கும் ஆவிக்குரிய அனுபவங்களை அடைந்திருக்க வேண்டும். (பாடத்திட்டம்)

**17.** பரி.பவுல் 1 கொரி. 5 : 9, 11 வசனத்தின் மூலம் யாரோடு நாம் கலந்து கொள்ளக் கூடாது என கூறுகிறார்?

சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபச்சாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக் கூடாது. அப்படிப்பட்டவனுடனே கூடப் புசிக்கவுங் கூடாது என்று பரி, பவுல் கூறுகிறார்.

**18.** ஆயிர வருஷ அரசாட்சிக்கு நிழலாட்டமாக ஆசரிக்கப்பட்ட பண்டிகை எது? எவ்விரு பண்டிகைகளை ஆசரிப்பவர்கள் இப்பண்டிகையை ஆசரிப்பார்கள்?

ஆயிரவருட அரசாட்சிக்கு நிழலாட்டமாக ஆசரிக்கப்பட்டது கூடாரப்பண்டிகை ஆகும்.

எக்காளங்களின் பண்டிகையையும் பாவ நிவர்த்தி செய்யும் பண்டிகையையும் ஆசரிப்பவர்கள் ஆயிர வருஷ அரசாட்சிக்கு நிழலாட்டமான கூடாரப்பண்டிகையை ஆசரிப்பார்கள். (பாடத்திட்டம்)

**III** ***<u>சுருக்கமான விடையளி</u>*:** (5 Marks)

**1.** பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேலர் புளிப்பில்லா அப்பப் பண்டிகையை எவ்வாறு ஆசரித்தார்கள் ? ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நாம் அப்பண்டிகையை எவ்வாறு ஆசரிக்க வேண்டும்?

புளிப்பில்லா அப்பப் பண்டிகை முதலாம் மாதம் பதினைந்தாம் தேதி ஆசரிக்கப்பட்டது. இஸ்ரவேல் புத்திரர் ஏழுநாள் புளிப்பில்லா அப்பத்தைப் புசித்து, ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனபலியிட வேண்டும். முதலாம் நாளும் ஏழாம் நாளும் கர்த்தருக்கென்று பரிசுத்தமான சபை கூடுதல். அதில் அவர்கள் சாதாரணமான யாதொருவேலையும் செய்யலாகாது. (லேவி. 23:6-8).

1. ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நாம் இப்பண்டிகையை ஆசரிக்கும்படியாக, நம்மை நாமே பாவத்திலிருந்தும், பாவிகளிலிருந்தும் வேறு பிரித்துக் கொள்ள வேண்டும்.
2. நம்முடைய ஜீவியங்களில் துப்புரவும் உண்மையும் காணப்பட வேண்டும்.
3. துர்க்குணம், பொல்லாப்பு என்னும் புளித்தமாவு நீக்கப்பட வேண்டும்.

4 தங்களுக்குள் இச்சுபாவங்கள் உள்ளவர்களோடு நாம் கலந்திருக்கக்கூடாது. (1கொரி. 5 : 8 - 11)

5 தவறான உபதேசங்களைப் போதிப்பவர்களோடு நாம் கலந்திருக்கக்கூடாது. (மத்16:11,12)

**2.** அறுப்புக்காலப் பண்டிகை அல்லது பெந்தெகொஸ்தே பண்டிகை பற்றி குறிப்பு வரைக..

அறுப்புக்காலப் பண்டிகை அல்லது பெந்தெகொஸ்தே பண்டிகை :(லேவி. 23 : 9 - 22)

அறுப்புக் காலப் பண்டிகை அறுப்பின் முதற்பலனாகிய கதிர்க்கட்டு அசைவாட்டப்பட்டதன் பின்பு ஐம்பதாவது நாள் இப்பண்டிகை ஆசரிக்கப்பட்டது. பெந்தெகொஸ்தே என்பதன் பொருள் 'ஐம்பது' என்பதாகும். அந்நாளில் ஒரு மரக்காலில் பத்தில் இரண்டு பங்காகிய மெல்லிய மாவிலே இரண்டு அப்பங்கள் ஒன்றுபோல் பாகம் பண்ணப்பட்டு அசைவாட்டப்பட்டன(லேவி. 23 : 17) பெந்தெகொஸ்தே நாளில், அதாவது கர்த்தராகிய இயேசு உயிர்த்தெழுந்த ஐம்பதாவது நாள் எருசலேமில், மேல் வீட்டில் கூடியிருந்த ஏறக்குறைய நூற்றிருபது பேர் மேலும் பரிசுத்த ஆவி பொழிந்தருளப்பட்டது என நாம் காண்கிறோம். (அப். 2 : 1 - 4) அந்நாளில் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலமாய் விசுவாசிகள், பிரதிஷ்டை செய்யப்பட்ட தேவ ஊழியர் என்னும் இரு கூட்டத்தார் உருவாக்கப்பட்டனர். அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையின்போது ஒன்றாக முதற்பலன்களாகக் எடுத்துக் கொள்ளப்படுவர். நாம் பரிசுத்த ஆவியைப் பெறும்போது இப்பண்டிகையை நம் ஜீவியங்களில் முதன்முறையாக ஆசரிக்கிறோம். அதன்பின்னர் மறுபடியும் மறுபடியும் நாம் ஆவியினால் நிரப்பப்படுவதன் மூலம் அதைத் தொடர்ந்து ஆசரித்துக் கொண்டே இருக்கிறோம்.

**3.** எக்காளங்களின் பண்டிகை எப்பொழுது ஆசரிக்கப்பட்டது? அதின் ஆவிக்குரிய கருத்து என்ன?

எக்காளங்களின் பண்டிகை : (லேவி. 23 : 23 - 25)

இப்பண்டிகை ஏழாம் மாதத்தின் முதலாம் தேதி ஆசரிக்கப்பட்டது. அது எக்காளச் சத்தத்தால் ஞாபகக்குறியாகக் கொண்டாடப்படும் பண்டிகையும், சபை கூடுதலான பரிசுத்த ஓய்வுநாளுமாகும். அதில் அவர்கள் யாதொரு சாதாரண வேலையும் செய்யாமல் கர்த்தருக்குத் தகனபலி செலுத்த வேண்டும். இப்பண்டிகை ஆவிக்குரிய பிரகாரம், கர்த்தருடைய இரகசிய வருகையில் சபை எடுத்துக் கொள்ளப்படுதலைக் குறிக்கிறது. "ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்.அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்"(1தெச.4 : 16,17) நாம் ஓய்வுநாள் பண்டிகை, பஸ்கா பண்டிகை, புளிப்பில்லா அப்பப் பண்டிகை, பெந்தெகொஸ்தே பண்டிகை இவற்றை, சரியான விதத்தில் ஆசரித்தால், எக்காளங்களின் பண்டிகையையும் நிச்சயமாகவே மிகுந்த சந்தோஷத்துடன் ஆசரிக்கக் கூடியவர்களாயிருப்போம், இந்த எக்காளங்களின் பண்டிகையை ஆசரிக்க நாம் ஆவலோடு காத்திருக்க வேண்டும். இல்லாவிடில் நாம் இதற்கு முன் மற்ற பண்டிகைகளை ஆசரித்ததும் வீணாயிருக்கும்.

**4.** இஸ்ரவேலர் பாவ நிவிர்த்தி செய்யும் பண்டிகையை எப்போது எவ்வாறு ஆசரித்தார்கள்? இனி இப்பண்டிகையை யார் எப்போது எவ்வாறு ஆசரிப்பார்கள்?

இஸ்ரவேலர் பாவ நிவிர்த்தி செய்யும் பண்டிகையை ஏழாம் மாதம் ஒன்பதாம் தேதி சாயங்காலம் ஆரம்பித்து, மறுநாள், அதாவது பத்தாம் தேதி சாயங்காலம் வரை கொண்டாடப்பட்டது. அது அவர்களுக்கு பாவ நிவிர்த்தி செய்யும் நாளும், சபை கூடும் பரிசுத்த நாளுமாயிருக்க வேண்டும். அந்த நாளில் அவர்கள் தங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தி, கர்த்தருக்குத் தகனபலி செலுத்த வேண்டும். அந்நாளில் அவர்கள் யாதொரு வேலையும் செய்யக் கூடாது, அந்நாளில் யாதொரு வேலையைச் செய்கிறவர்களோ அல்லது தங்கள் ஆத்துமாவைத் தாழ்மைப்படுத்தாதவர்களோ, ஜனத்தில் இராதபடி அறுப்புண்டு போவார்கள்.

பாவ நிவிர்த்தி செய்யும் பண்டிகை, கர்த்தர் தம்முடைய இரகசிய வருகையில் மணவாட்டி சபையைத் தம்மிடம் சேர்த்துக் கொண்ட பின் நடக்கும் ஒரு சம்பவத்தைக் குறிக்கிறது. பூமியின் முதற் பலன்கள் என அழைக்கப்படும் ஜெயங்கொண்ட பரிசுத்தவான்கள் எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு பூரணமாக்கப்பட்டாதவர்களான சபையில் மீதியானவர்கள் கைவிடப்படுவார்கள். அவர்கள் பூரணராக்கப்படாதபடியினால் கைவிடப்படுகின்றனர். இருப்பினும், அவர்கள் கர்த்தருடைய இரகசிய வருகைக்குப்பின்பு உள்ள மூன்றரை வருட உபத்திரவ காலத்தில் இரத்த சாட்சிகளாக மரித்தால், அவர்கள் முதலாம் உயிர்தெழுதலில் பங்கு பெறுவார்கள். மிருகத்தின் நாமத்தையாவது அதின் முத்திரையையாவது தங்கள் மேல் தரித்துக் கொள்ளாமலிருப்பதாலும், எல்லா உபத்திரவங்களையும் சகிப்பதினாலும், முடிவிலே இரத்த சாட்சிகளாக மரிப்பதால், அவர்கள் இந்தப்பாவ நிவிர்த்தி செய்யும் பண்டிகையை ஆசரிக்கின்றனர்.

**5.** இஸ்ரவேலர் கூடாரப் பண்டிகையை எவ்வாறு ஆசரித்தார்கள்? ஏன் ஆசரித்தார்கள் ? அதின் ஆவிக்குரிய கருத்து என்ன?

1. கூடாரப்பண்டிகையை ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி முதல் ஏழு நாட்கள் ஆசரிக்கப்பட்டது. ஏழு நாட்களும் அவர்கள் கர்த்தருக்குத் தகனபலி செலுத்த வேண்டும். அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது. அவர்கள் அலங்காரமான விருட்சங்களின் கனிகளையும , பேரீச்சின் ஓலைகளையும், தழைத்திருக்கிற விருட்சங்களின் கிளைகளையும், ஆற்றலரிகளையும் கொண்டு வந்து, ஏழு நாட்கள் கூடாரங்களில் குடியிருந்து, தங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும்.

2. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின போது அவர்களைக் கூடாரங்களில் குடியிருக்கப்பண்ணினதை அவர்கள் சந்ததியார் அறியும்படிக்கு இஸ்ரவேலில் பிறந்தவர்கள் எல்லாரும் கூடாரங்களில் வாசம்பண்ண வேண்டும்.

3. இப்பண்டிகை ஆயிர வருஷ அரசாட்சிக்கு நிழலாயிருக்கிறது. ஆயிர வருஷ அரசாட்சியில் நாம் கர்த்தருடன் ஆயிர வருடம் ஆளுகை செய்து அவரோடு மகிழ்ச்சியாயிருப்போம்

**IV** *போதனை :* (2 Marks)

தேவனுடைய பிள்ளைகள் கர்த்தராகிய இயேசுவோடு என்றென்றுமாய் பேரின்பமாய் வாழ்வதற்குத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்வதற்காகப் பண்டிகைகள் யாவும் புதிய ஏற்பாட்டின் காலத்திற்கென்று பெரிதான ஆவிக்குரிய கருத்துடன் கர்த்தரால் நியமிக்கப்பட்டன.

**************

# கிறிஸ்துவின் இரகசியம்

எபேசியர் 3 : 3 - 6

**I** *மனப் பாடவசனம் :* (2 Marks)

எபேசியர் 3 : 3 - 7

அதென்னவெனில் புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன் பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார்.

இதைக் குறித்து நான் முன்னமே சுருக்கமாய் எழுதியிருக்கிறேன்.

அதை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின் இரகசியத்தைக் குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்து கொள்ளலாம்.

இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது போல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை.

தேவனுடைய பலத்த சத்துவத்தால் எனக்கு அளிக்கப்பட்ட வரமாகிய அவருடைய கிருபையினாலே இந்தச் சுவிசேஷத்துக்கு ஊழியக்காரனானேன்.

**II** *ஓரிரு வாக்கியங்களில் விடையளி* : (2 Marks)

**1.** வேதாகமத்தில் எத்தனை இரகசியங்கள் உள்ளன?

வேதாகமத்தில் பதின்மூன்று இரகசியங்கள் உள்ளன (பாடத்திட்டம்),

**2.** ஆபிரகாம் வாக்குத்தத்தங்களை எவ்வாறு பெற்றுக் கொண்டான்?

ஆபிரகாம் வாக்குத்தத்தங்களை விசுவாசத்தினால் வரும் நீதியினால் பெற்றுக் கொண்டான். (ரோமர் 4 : 13)

**3.** பிதாவின் வாக்குத்தத்தம் எப்போது நமக்குள் நிறைவேற்றப்படுகிறது?.

நாம் பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெறும்பொழுது பிதாவின் வாக்குத்தத்தம் நமக்குள் நிறைவேற்றப்படுகிறது.(லூக்கா 24 : 49)

**III** *ஓரிரு வாக்கியங்களில் விடையளி* : (2 Marks)

**1.** கிறிஸ்துவின் இரகசியத்தில் எத்தனை பகுதிகள் உள்ளன? அவையாவை?

கிறிஸ்துவின் இரகசியத்தில் மூன்று பகுதிகள் உள்ளன. (எபே. 3 : 3) அவையாவன : புறஜாதிகள்

1) ஒரே சரீரத்திற்குள்ளானவர்கள்

2)கிறிஸ்துவுக்குள் பிதாவின் வாக்குத்தத்ததுக்கு உடன் பங்காளிகள்

3)சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரர்

**2.** கிறிஸ்துவின் சபையாகிய சரீரத்தின் அவயவங்களாய் யார் மாற்றப்படுகிறார்கள்?

பரிசுத்தாவியின் ஞானஸ்நானத்தைப் பெறுகிற யாவரும், யூதராயினும் கிரேக்கராயினும், சபையாகிய அவருடைய சரீரத்தின் அவயவங்களாய் மாற்றப்படுகிறார்கள்.(1 கொரி. 12:13)

**3.** இக்கிருபையின் காலத்தில் புறஜாதிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பெரியதோர் சிலாக்கியம் என்ன ?

1.புறஜாதிகள் இயேசுகிறிஸ்துவின் மூலமாக அவருடைய சரீரமாகிய சபைக்குள் கொண்டு வரப்படுகின்றனர். (எபே 2 : 12 - 16)

2. பரிசுத்தாவியின் ஞானஸ்நானத்தின் மூலமாக அவருடைய சபையாகிய சரீரத்தின் அவயங்களாய் மாற்றப்படுகிறார்கள். ( 1கொரி 12 : 13)

இது இக்கிருபையின் காலத்தில் புறஜாதிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பெரியதோர் சிலாக்கியமாகும்.

**4.** தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தங்கள் என்ன?
ஆபிரகாமுக்கு 'உலகத்தைச் சுதந்தரிப்பான்' என்றும் 'அநேக ஜாதிகளக்குத் தகப்பனாவான்' என்றும் தேவன் அவனுக்கு வாக்குத்தத்தங்கள் கொடுத்தார்.(ஆதி.12:2,3).

**5.** ஆபிரகாமுக்கு அருளப்பட்ட ஆசீர்வாதங்கள் (வாக்குத்தத்தங்கள்) எவ்வாறு நமக்கு வருகின்றன?
ஆபிரகாமின் சந்ததி கிறிஸ்து. (கலா. 3 : 16) பரிசுத்தாவியின் ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்து நமக்குள் வருகிறார். (யோவான் 14 : 16, 20) இவ்விதம் கிறிஸ்து நமக்குள்ளே வருவதால், ஆபிரகாமுக்கு அருளப்பட்ட ஆசீர்வாதங்கள் அவர் மூலம் நமக்கு வருகின்றன.

**6.** தேவன் எவ்வாறு இஸ்ரவேலரை சுதந்தரவாளிகளாக ஏற்படுத்தினார்?
தேவன் இஸ்ரவேலரைத் தெரிந்தெடுத்து, தம் பிரமாணங்களை அவர்களுக்குக் கொடுத்து, அவற்றின் வாயிலாக அவர்களைச் சுதந்தரவாளிகளாக ஏற்படுத்தினார்.. (பாடத்திட்டம்)

**7.** தேவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏன் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார்?
தேவன் தம் சொந்தக் குமாரனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பினார். மனிதனாய் அவதரித்த அவர் சாத்தானைச் சிலுவையின் மேல் ஜெயித்தபடியால் (எபி. 2 : 14, 15) தேவன் அவரை சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். (எபி. 1 : 2)

**8.** புறஜாதிகள் எவ்வாறு உடன் சுதந்தரராக்கப்படுகின்றனர்?
கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கல்வாரி மரணத்தின் மூலமாக புறஜாதியாருங்கூட அவரைப் பற்றும் விசுவாசத்தினாலும், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலமாகவும் பூரண சுவிசேஷத்தாலும் உடன் சுதந்திரராக்கப்படுகின்றனர். (பாடத்திட்டம்)

**9.** புறஜாதிகளை உடன் சுதந்தரராக்கும் பூரண சுவிசேஷத்தை அறிவிக்கும்படி தேவன் யாரை எழுப்பியிருக்கிறார்?
புறஜாதிகளை உடன் சுதந்தரராக்கும் பூரண சுவிசேஷத்தை அறிவிக்கும்படி எல்லாவற்றையும் விட்ட பிரதிஷ்டையுள்ள அப்போஸ்தலரை தேவன் எழுப்பியிருக்கிறார். (2 தீமோத். 1 : 10 , 11)

**IV** *__சுருக்கமான விடையளி__*: (5 Marks)

**1.** 'புறஜாதிகள் ஒரே சரீரத்திற்குள்ளானவர்கள்' என்ற கிறிஸ்துவின் இரகசியத்தை வசன ஆதாரத்துடன் எழுது.

1) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 'சரீரம்' என்பது ஆவிக்குரிய சரீரமாகிய சபை என்று பொருள்படும். . (கொலோ 1 : 18) கர்த்தராகிய இயேசுவே இந்த ஆவிக்குரிய சரீரத்தின் தலையாயிருக்கிறார்.
2) பழைய ஏற்பாட்டின் காலத்தில் இஸ்ரவேலர் மட்டுமே தேவனுடைய ஜனங்கள் அல்லது தேவனுடைய சபையாயிருந்தனர். (அப். 7 : 38)
3) இப்போது இருப்பினும் தேவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாகப் புறஜாதியாரையும் கிறிஸ்துவின் அவருடைய சரீரமாகிய சபைக்குள் கொண்டு வருகிறார்.. (எபே. 2 : 11 - 16)
4) பரிசுத்தாவியின் ஞானஸ்நானத்தைப் பெறுகிற யாவரும், யூதராயினும் கிரேக்கராயினும், சபையாகிய அவருடைய சரீரத்தின் அவயவங்களாய் மாற்றப்படுகிறார்கள். (1 கொரி. 12 : 13)
5) இது இக்கிருபையின் காலத்தில் புறஜாதிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பெரியதோர் சிலாக்கியமாகும்.

**2.** புறஜாதிகள் கிறிஸ்துவுக்குள் பிதாவின் வாக்குத்தத்தத்துக்கு உடன் பங்காளிகள் என்ற கிறிஸ்துவின் இரகசியத்தை வசன ஆதாரத்துடன் எழுது.

1) தேவன் ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் வாக்குத்தத்தங்களைக் கொடுத்தார். அவற்றைக் குறித்து ஆதி. 12 : 2 , 3 - ல் நாம் வாசிக்கிறோம்.

2) அவன் 'உலகத்தைச் சுதந்தரிப்பான்' என்றும், 'அநேக ஜாதிகளுக்குத் தகப்பானாவான்' என்றும் அவனுக்கு வாக்குக் கொடுக்கப்பட்டது.(ரோமர்4: 13,17 : ஆதி. 17 : 5)
3) அவன் இவ்வாக்குத்ததத்தங்களை நியாயப் பிரமாணத்தினால் அல்ல, விசுவாசத்தினால் வரும் நீதியினால் பெற்றுக் கொண்டான்.
4) இவ்வாக்குத்தத்தங்கள் ஆபிரகாமுக்கு மட்டுமல்ல அவனுடைய சந்ததிக்குங்கூட உரியன. அந்தச் சந்ததி கிறிஸ்துவே.(கலா. 3 : 16)
5) பரிசுத்தாவியின் ஞானஸ்நானதின் மூலம் கிறிஸ்து நமக்குள் வருகிறார். (யோவான் 14 : 16, 20) இவ்விதம் கிறிஸ்து நமக்குள்ளே வருவதால், ஆபிரகாமுக்கு அருளப்பட்ட ஆசீர்வாதங்கள் அவர் மூலம் நமக்கு வருகின்றன. எனவே நாம், பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெறும்போது பிதாவின் வாக்குத்ததத்தம் நமக்குள் நிறைவேற்றப்படுகிறது. (கலாத்தியர் 3 : 14,லூக்கா24:49, அப். 1 : 4, 5, 2 : 38, 39)

**3.** புற ஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரர் என்பதை வசன ஆதாரங்களுடன் விளக்கு

1) ஆதியிலே தேவன் தம் சாயலின்படியேயும் ருபத்தின்படியேயும் மனுஷனைச் சிருஷ்டித்து, பூமியிலுள்ள எல்லாவற்றிற்கும் அவனைச் சுதந்தரவாளியாக்கினார். (ஆதி 1 : 27, 28)இருப்பினும் மனுஷன் சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு, தன் சுதந்தரத்தை இழந்தான்.
2) அதன்பின் தேவன் இஸ்ரவேலரைத் தெரிந்தெடுத்து, தம் பிரமாணங்களை அவர்களுக்குக் கொடுத்து, அவற்றின் வாயிலாக அவர்களைச் சுதந்தரவாளிகளாக ஏற்படுத்தினாா. ஆனால் அவர்களோ அதை நிறைவேற்றக் கூடாதவர்களாய்ப் போனார்கள்.
3) காலங்கள் நிறைவேறின போது தேவன் தம் சொந்தக் குமாரனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு அனுப்பினார், மனிதனாய் அவதரித்த அவர் சாத்தானை சிலுவையின் மேல் ஜெயித்தபடியால் (எபி. 2 : 14, 15) தேவன் அவரை சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். (எபி 1 : 2)
4) கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கல்வாரி மரணத்தின் மூலமாக புறஜாதியாருங் கூட அவரைப் பற்றும் விசுவாசத்தினாலும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலமாகவும் பூரண சுவிசேஷத்தாலும் உடன் சுதந்தரராக்கப்படுகின்றனர். புறஜாதிகளை உடன் சுதந்தரராக்கும் பூரண சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி பிரதிஷ்டையுள்ள அப்போஸ்தலரைத் தேவன் எழுப்பி, அவர்களுக்கு இந்த இரகசியத்தை வெளிப்படுத்துகிறார். (2 தீமோ. 1 : 10, 11)

**V** *<u>விரிவாக தெளிவாக வசன ஆதாரத்துடன் விடையளி :</u>* (15 Marks)

**1.** கிறிஸ்துவின் இரகசியம் - என்ற பாடத்திலிருந்து நீ கற்றவைகளை தொகுத்தெழுது.
வேதாகமத்தில் உள்ள பதின்மூன்று இரகசியங்களில் கிறிஸ்துவின் இரகசியம் ஒன்றாகும். கிறிஸ்துவின் இரகசியத்தில் மூன்று பகுதிகள் உள்ளன. (எபே. 3 : 3).
அவையாவன :

1) புறஜாதிகள், ஒரே சரீரத்திற்குள்ளானவர்கள்
2) புறஜாதிகள கிறிஸ்துவுக்குள் பிதாவின் வாக்குத்தத்ததுக்கு உடன் பங்காளிகள்.
3) புறஜாதிகள சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரர்.

புறஜாதிகள் ஒரே சரீரத்திற்குள்ளானவர்கள் :

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 'சரீரம்' என்பது ஆவிக்குரிய சரீரமாகிய சபை என்று பொருள்படும். . (கொலோ 1 : 18) கர்த்தராகிய இயேசுவே இந்த ஆவிக்குரிய சரீரத்தின் தலையாயிருக்கிறார்.பழைய ஏற்பாட்டின் காலத்தில் இஸ்ரவேலர் மட்டுமே தேவனுடைய ஜனங்கள் அல்லது தேவனுடைய சபையாயிருந்தனர். (அப். 7 : 38) இப்போது இருப்பினும் தேவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாகப் புறஜாதியாரையும் கிறிஸ்துவின் அவருடைய சரீரமாகிய சபைக்குள் கொண்டு வருகிறார்கள். (எபே.2:12-16) பரிசுத்தாவியின் ஞானஸ்நானத்தைப் பெறுகிற யாவரும், யூதராயினும் கிரேக்கராயினும், சபையாகிய அவருடைய சரீரத்தின் அவயவங்களாய் மாற்றப்படுகிறார்கள். (1 கொரி. 12 : 13) இது இக்கிருபையின் காலத்தில் புறஜாதிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பெரியதோர் சிலாக்கியமாகும்.

புறஜாதிகள் கிறிஸ்துவுக்குள் பிதாவின் வாக்குத்தத்தத்துக்கு உடன் பங்காளிகள் :

தேவன் ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் வாக்குத்தத்தங்களைக் கொடுத்தார். அவற்றைக் குறித்து ஆதி. 12 : 2 , 3 - ல் நாம் வாசிக்கிறோம். அவன் ‘உலகத்தைச் சுதந்தரிப்பான்’ என்றும், ‘அநேக ஜாதிகளுக்குத் தகப்பானாவான்’ என்றும் அவனுக்கு வாக்குக் கொடுக்கப்பட்டது. (ரோமர்4:13, 17: ஆதி. 17 : 5) அவன் இவ்வாக்குத்ததத்தங்களை நியாயப் பிரமாணத்தினால் அல்ல, விசுவாசத்தினால் வரும் நீதியினால் பெற்றுக் கொண்டான். இவ்வாக்குத்தத்தங்கள் ஆபிரகாமுக்கு மட்டுமல்ல அவனுடைய சந்ததிக்குங்கூட உரியன. அந்தச் சந்ததி கிறிஸ்துவே. (கலா. 3 : 16) பரிசுத்தாவியின் ஞானஸ்நானதின் மூலம் கிறிஸ்து நமக்குள் வருகிறார். (யோவான் 14:16,20) இவ்விதம் கிறிஸ்து நமக்குள்ளே வருவதால், ஆபிரகாமுக்கு அருளப்பட்ட ஆசீர்வாதங்கள் அவர் மூலம் நமக்கு வருகின்றன. எனவே நாம், பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெறும்போது பிதாவின் வாக்குத்ததத்தம் நமக்குள் நிறைவேற்றப்படுகிறது. (கலாத்தியர் 3 : 14, லூக்கா 24 : 49, அப். 1 : 4, 5; 2 : 38, 39)

புற ஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரர்:

ஆதியிலே தேவன் தம் சாயலின்படியேயும் ருபத்தின்படியேயும் மனுஷனைச் சிருஷ்டித்து, பூமியிலுள்ள எல்லாவற்றிற்கும் அவனைச் சுதந்தரவாளியாக்கினார். (ஆதி1:27,28) இருப்பினும் மனுஷன் சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு, தன் சுதந்தரத்தை இழந்தான்.அதன்பின் தேவன் இஸ்ரவேலரைத் தெரிந்தெடுத்து, தம் பிரமாணங்களை அவர்களுக்குக் கொடுத்து, அவற்றின் வாயிலாக அவர்களைச் சுதந்தரவாளிகளாக ஏற்படுத்தினா. ஆனால் அவர்களோ அதை நிறைவேற்றக் கூடாதவர்களாய்ப் போனார்கள்.காலங்கள் நிறைவேறின போது தேவன் தம் சொந்தக் குமாரனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு அனுப்பினார், மனிதனாய் அவதரித்த அவர் சாத்தானை சிலுவையின் மேல் ஜெயித்தபடியால் (எபி.2: 14, 15) தேவன் அவரை சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். (எபி 1 : 2) கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கல்வாரி மரணத்தின் மூலமாக புறஜாதியாருங்கூட அவரைப் பற்றும் விசுவாசத்தினாலும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலமாகவும் பூரண சுவிசேஷத்தாலும் உடன் சுதந்தரராக்கப்படுகின்றனர். புறஜாதிகளை உடன் சுதந்தரராக்கும் பூரண சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி பிரதிஷ்டையுள்ள அப்போஸ்தலரைத் தேவன் எழுப்பி, அவர்களுக்கு இந்த இரகசியத்தை வெளிப்படுத்துகிறார். (2 தீமோ.1 : 10, 11)

## VI *போதனை :* (2 Marks)

நாம் யாதொரு வித்தியாசமுமற்றவர்களாயிருக்கும்படி கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒன்றாக்கப்பட வேண்டும். அத்துடன் விசுவாசத்தினால் வாக்குத்தத்தங்களைப் பெற்றுக் கொள்ளப் பிரயாசப்பட்டு, பிசாசையும் மாம்சத்தையும் உலகத்தையும் ஜெயித்து, நித்தியத்தில் கர்த்தராகிய இயேசுவோடு உடன் சுதந்தரராய் ஆளுகை செய்ய வேண்டும்

.

********************

வகுப்பு :10

பாடம்-15

# வசனத்தினால் பரிசுத்தமாக்கப்படுதல்

**I** *மனப் பாடவசனம் :* (2 Marks)

யோவான் 17 : 14

நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது.

யோவான் 17 : 17

உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்.

யோவான் 17 : 19

அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்.

**II** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி* : (2 Marks)

**1.** தேவனுடைய அழியாத வசனத்தினால் சிருஷ்டிக்கப்பட்ட சகல சிருஷ்டியும் எப்போது அழிவுக்குட்பட்டது?
மனிதன் கீழ்ப்படியாமையினால் விழுந்தபோது, சகல சிருஷ்டியும் அழிவுக்குட்பட்டது. (ரோமர் 8 : 20 , 21)

**2.** தேவன் தம்முடைய கரத்தின் கிரியைகளின் மீது எப்பொழுது விழுந்த மனிதனை மீண்டும் அதிகாரியாக வைப்பார்?
சகல சிருஷ்டியும் மாயை, அழிவு ஆகிய இவைகளின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்படும் போது, தேவன் தம்முடைய கரத்தின் கிரியைகளின் மீது அவனை மீண்டும் அதிகாரியாக வைப்பார். (ரோமர் 8 : 20)

**3.** விழுந்துபோன மனிதன், தேவனுடைய கரத்தின் கிரியைகளின் மீது மீண்டும் ஆளுகை பெற என்ன செய்ய வேண்டும்?
தேவனுடைய கரத்தின் கிரியைகள் மீது மீண்டும் அளுகை பெறும்படியாக விழுந்து போன மனிதன் இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவனாக வேண்டும். (2 பேதுரு 1 : 4)

**4.** ஒரு தேவ பிள்ளைக்கு எப்பொழுது உலகம், அதின் சகல வீணான கவர்ச்சிகளுடனும் சுகபோகங்களுடனும் வனாந்தரமாகத் தோற்றமளிக்கும்?
ஞானஸ்நான சத்தியத்தில் நிலைத்திருக்கும் போது, அவர்களுக்கு உலகம், அதின் சகல வீணான கவர்ச்சிகளுடனும் சுகபோகங்களுடனும் வனாந்தரமாகத் தோற்றமளிக்கும். (பாடத்திட்டம்)

**5.** சத்தியம் என்பது யாது?.
தேவனுடைய வசனமே சத்தியம் (யோவான் 17 : 17)

**6.** தேவனுடைய வாாத்தை யார்?
கிறிஸ்து தேவனுடைய வார்த்தையாயிருக்கிறார். (யோவான் 1 : 1)

**III** ***ஓரிரு வாக்கியங்களில் விடையளி*** : (2 Marks)

**1.** இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்ட ஜனங்கள், பூரணத்திற்கு கடந்து செல்லும்படி என்ன செய்ய வேண்டும்?

மீட்கப்பட்ட ஜனங்கள், தங்களை உலகத்திலிருந்தும் உலகப்பொருட்களிலிருந்தும் வேறுபிரித்து கர்த்தருடைய வசனத்தினால் பரிசுத்தமாக்கப்பட்டு, பூரணத்திற்குக் கடந்து செல்ல வேண்டும். (பாடத்திட்டம்)

**2.** வசனத்தினால் பரிசுத்தமாக்கப்படும் கிரியை எப்போது நம்முடைய ஜீவியத்தில் ஆரம்பிக்கிறது?

நாம் ஞானஸ்நானத்தில் தேவனுடைய ஆலோசனைக்குக் கீழப்படிந்து, இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடி நம்மை நடக்கச் செய்த பாவ சுபாவத்திற்கு மரிக்கும்போது ஆரம்பிக்கிறது. (எபே. 2 : 2, 3)

**3.** தேவன் இஸ்ரவேலருக்கு, வனாந்தரத்தில் ஒவ்வொரு நாளும் மன்னாவினால் பிழைக்கக் கற்றுக் கொடுத்தார் - என்பதின் ஆவிக்குரிய கருத்து என்ன?

மனிதன் இவ்வுலகத்தின் அழிவுக்குரிய காரியங்களுக்கு மரித்த பின்பு, தேவனுடைய ஒவ்வொரு வசனத்தாலும் ஜீவிக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

**4.** இஸ்ரவேல் புத்திரர் புளிப்பில்லா அப்பப் பண்டிகையை ஆசரிக்க வேண்டும் - என்பது எதற்கு நிழலாயிருக்கிறது?

நாம் துர்உபதேசங்களாகிய புளிப்பைத் தவிர்த்து (மத். 16 : 6, 12) துப்புரவோடும் உண்மையோடும் நாம் கர்த்தரைப் பின்பற்றி, துர்க்குணம், பொல்லாப்பு என்னும் புளிப்பற்றவர்களாய் (1 கொரி. 5 : 7, 8) ஜீவிக்கும் பரிசுத்தமாக்கப்பட்ட ஜீவியத்திற்கு நிழலாயிருக்கிறது.

**5.** துப்புரவோடும் உண்மையோடும் கர்த்தரைப் பின்பற்றும் தேவனுடைய பிள்ளைகள், இவ்வுலகத்தில் எவ்வாறு பிரகாசிப்பார்கள்?

துப்புரவோடும் உண்மையோடும் கர்த்தரைப் பின்பற்றும் தேவனுடைய பிள்ளைகள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாய், ஜீவ வசனத்தைப் பிடித்துக்கொண்டு உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிப்பர்கள். (பிலி. 2 : 14 - 16)

**6.** 'விரி குளம்புள்ளது', 'அசைபோடுதல" - என்பது எதைக் காட்டுகிறது.

'விரிகுளம்புள்ளது' என்பது வேறுபிரிந்த ஜீவியத்தைக் காட்டுகிறது. 'அசைபோடுதல" என்பது கர்த்தருடைய வசனத்தைத் தியானிப்பதைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

**7.** தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று நாம் அறிந்து கொள்ளும்படி நம் மனது எப்போது புதுப்பிக்கப்படுகிறது?

நாம் தேவனுடைய வசனத்தைத் தியானித்து இவ்வுலகத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவசித்தம் செய்யும்படியாக நம் சரீரத்தை ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்கும்போது நம் மனது புதுப்பிக்கப்படுகிறது. (ரோமர் 12 : 1, 2)

**8.** மீன்களுக்கு சிறகுகள் எவ்வாறு உதவி செய்கிறது? நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் சிறகுகள் எதைக் காட்டுகிறது?

மீன்கள் தண்ணீரின் ஓட்டத்தை எதிர்த்துப் பிரயாணம் செய்ய அவற்றிற்கு சிறகுகள் உதவி செய்கின்றன.

நம் ஜீவியங்களுக்கு வழிகாட்டி நடத்தி, இவ்வுலகத்தின் வழக்கத்தை எதிர்த்து முன்னோக்கிச் செல்ல நமக்கு உதவி செய்யும் நம்பிக்கையை இச்சிறகுகள் காட்டுகின்றன. (பாடத்திட்டம்)

**9.** மீன்களுக்கு செதில்கள் எவ்வாறு உதவி செய்கிறது? ஆவிக்குரிய ஜீவியத்தில் செதில்கள் எதைக் காட்டுகிறது?.

செதில்கள் மூலம் மீன்கள் தண்ணீரில் பாதுகாக்கப்படுகின்றன.

செதில்கள் இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தில் நம் ஆத்துமாவைப் பரிசுத்தத்தில் பாதுகாக்கும் விசுவாசத்தைக் காட்டுகிறது.(1 யோவான் 5 : 4)

**10.** சத்திய வசனமாகிய சுவிசேஷத்தின் இரண்டு அம்சங்கள் யாவை?

சத்திய வசனமாகிய சுவிசேஷமானது, ஆத்துமாவைப் பரிசுத்தமாக்குகிற விசுவாசம், நம்பிக்கை என்னும் இரு அம்சங்களையுடையது.(கொலோ. 1 : 22)

**11.** இஸ்ரவேல் புத்திரர் புசிக்கலாம் என்று அனுமதிக்கப்பட்டிருந்த சுத்தமான பறவைகள் எதைக் காண்பிக்கின்றன?

வசனத்தின் மூலம் ஆவியில் தூய்மையான பரிசுத்தமாக்கப்பட்ட ஜீவியத்தைக் காண்பிக்கின்றன. (பாடத்திட்டம்)

**12.** கர்த்தருடைய வசனதின் மூலம் நம் சரீரம், ஆத்துமா, ஆவி முற்றிலும் பரிசுத்தமாக்கப்படும்படி நாம் என்ன செய்ய வேண்டும்?

நாம் அன்றாடம் கர்த்தருடைய வசனத்தை வாசித்துத் தியானித்து, அவற்றினால் கிடைக்கும் வெளிப்படுத்தல்களுக்கு ஒப்புக் கொடுத்து, தேவ சித்தத்தை விளங்கிக் கொண்டவர்களாய் ஜீவிக்க வேண்டும். (போதனை)

**IV** *<u>சுருக்கமான விடையளி</u>*: (5 Marks)

**1.** நாம் ஏன் தேவனுடைய வசனத்தினால் பரிசுத்தமாக்கப்பட வேண்டும்?

1. தேவனுடைய சாயலின்படி சிருஷ்டிக்கப்பட்ட மனிதனுக்கு தேவனுடைய அழியாத வசனத்தினல் சிருஷ்டிக்கப்பட்ட சகல சிருஷ்டிகளின் மீதும் அளுகை கொடுக்கப்பட்டிருந்தது.
2. மனிதன் கீழ்ப்படியாமையினால் விழுந்தபோது, அவன் அழிவுக்குரியவனானது மட்டுமல்லாமல், சகல சிருஷ்டியும் அழிவுக்குட்பட்டது. (ரோமர் 8 : 20, 21)
3. ஆளுகை செய்ய வேண்டியவனாயிருந்த மனிதன் அடிமையாய் மாறி, இச்சையினால் உலகத்திலுண்டான வீணானதும் கேடானதுமான காரியங்களுக்கு அடிமைப்படுத்தப்பட்டான்.
4. சகல சிருஷ்டியும் மாயை, அழிவு இவற்றின் அடிமைத் தனத்திலிருந்து விடுதலையாக்கப்படும் போது தேவன் தம்முடைய கரத்தின் கிரியைகளின் மீது அவனை மீண்டும் அதிகாரியாக வைப்பார். அதற்கு அவன் இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவதிற்குப் பங்குள்ளவனாக வேண்டும். (2 பேதுரு 1 : 4)

அதற்கென அருளப்பட்ட வாக்குத்தத்தங்களை அடைய அவன் வசனத்தினால் பரிசுத்த மாக்கப்பட வேண்டியது அவசியமாயிருக்கிறது.

**2.** ஒரு தேவ பிள்ளைக்கு உலகமும், உலகத்தின் சகல வீணான கவர்ச்சிகளும் வனாந்தரமாக தோற்றமளிக்கின்றன - விளக்குக.

நாம் தேவனுடைய ஆலோசனைக்குக் கீழ்ப்படிந்து இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடி நம்மை நடக்கச் செய்த நம்முடைய பாவ சுவாவத்துக்கு நாம் மரிக்கிறோம். (எபே. 2 : 2, 3). இச்சத்தியத்தை இஸ்ரவேல் புத்திரர் சிவந்த சமுத்திரத்தைக் கடந்த போது, பாவ சுபாவத்திற்கு நிழலாட்டமான எகிப்திய சேனை நியாயம் தீர்க்கப்பட்டு, அழிக்கப்பட்டது நமக்கு நினைப்பூட்டுகிறது. இப்படியாக ஞானஸ்நானத்துக்கு நிழலாட்டமான செங்கடலைக் கடந்தவர்கள் வனாந்தரத்திற்குள் பிரவேசித்தார்கள். எனவே, ஞானஸ்நான சத்தியத்தில் நிலைத்திருக்கும் ஒரு தேவ பிள்ளைக்கு உலகம், அதின் சகல வீணான கவர்ச்சிகளுடனும், சுக போகங்களுடனும் வனாந்தரமான தோற்றமளிக்கிறது.

**3.** தேவனுடைய வசனம் எப்போது ஒருவனை பரிசுத்தப்படுத்த ஆரம்பிக்கிறது?

கர்த்தராகிய இயேசு தம்முடைய சீஷர்களுக்காக, ஜெபித்த போது "நான் உலகத்தானல்லாதது போல, அவர்களும் உலகத்தாரல்ல. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் "பரிசுத்தமாக்கும் உம்முடைய வசனமே சத்தியம்" என்று ஜெபித்தார். (யோவான்17:16,17). வனாந்தரத்தில் ஒவ்வொரு நாளும் மன்னாவினால் பிழைக்கத் தேவன் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். இவ்வுலகத்தின் அழிவுக்குரிய காரியங்களுக்கு மரித்து, பின், மனிதன் தேவனுடைய ஒவ்வொரு வசனத்தாலும் ஜீவிக்க வேண்டும் அப்போது அவ்வசனம் அவனைப் பரிசுத்தப்படுத்த ஆரம்பிக்கிறது.

**4.** நாம் எப்போது "உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்கிறவர்களாயிருக்கிறோம்"?

வசனத்தினால் பரிசுத்தமாக்கப்படுவதற்கு துர் உபதேசமாகிய புளிப்பு தவிர்க்கப்பட வேண்டும். இஸ்ரவேல் புத்திரர் புளிப்பில்லா அப்பப்பண்டிகையை ஆசரிக்க வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது. அது துர் உபதேசங்களாகிய புளிப்பபைத் தவிர்த்து (மத். 16 : 6, 12) துப்புரவோடும், உண்மையோடும் நாம் கர்த்தரைப் பின்பற்றி, துர்க்கசுணம், பொல்லாப்பு என்னும் புளிப்பற்றவர்களாய் (1 கொரி. 5 : 7, 8) ஜிவிக்கும் பரிசுத்தமாக்கப்பட்ட ஜீவியத்திற்கு நிழலாயிருக்கிறது, இந்நிலவரத்தில் நாம், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாய், ஜீவ

வசனத்தைப் பிடித்துக் கொண்டு உலகத்திலே சுடர்களைப்போல பிரகாசிக்கிறவர்களாயிருக்கிறோம். (பிலி. 2 : 14 - 16)

**V** *விரிவான விடையளி* : (10 Marks)

**1.** வசனத்தின் மூலம் சரீரம் பரிசுத்தமாக்கப்படுதலை விவரி?

சரீரம் பரிசுத்தமாக்கப்படுதல்:மிருகங்களில் விரிகுளம்புள்ளவைகளாயிருந்து அசைபோடுகிறவை (லேவி. 11 : 3)

"விரிகுளம்புள்ளது" என்பது வேறுபிரிந்த ஜீவியத்தையும் "அசைபோடுதல்" என்பது கர்த்தருடைய வசனத்தைத் தியானிப்பதையும் காட்டுகிறது. நாம் தேவனுடைய வசனத்தைத் தியானித்து இவ்வுலகத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவசித்தம் செய்யும்படியாக நம் சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்கும்போது தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று நாம் அறிந்து கொள்ளும்படி தேவனுடைய வசனத்தினால் நம் மனது புதுப்பிக்கப்படுகிறது.(ரோமர் 12 : 1, 2) வேறுபாட்டின் ஜீவியத்தைக் காத்துக் கொண்டு, கர்த்தருடைய வசனத்தின் மேல் தியானமாயிருக்கிற மனுஷனுடைய பாக்கியத்தைக் குறித்துச் சங்கீதக்காரன் (சங். 1 : 1 - 3)ல் கூறுகிறான்.

**2.** வசனத்தின் மூலம் நம் ஆத்துமா பரிசுத்தமாக்கப்படுதலை விவரி?

ஆத்துமா பரிசத்தமாக்கப்படுதல்: தண்ணீரில் வாழும் சிறகும் செதிளுமுள்ளயாவும் (வேலி.11:9)

மீன்கள் தண்ணீரின் ஒட்டத்தை எதிர்த்துப் பிரயாணம் செய்ய அவற்றிற்கு சிறகுகள் உதவி செய்கின்றன.

நம் ஜீவியங்களுக்கு வழிகாட்டி நடத்தி, இவ்வுலகத்தின் வழக்கத்தை எதிர்த்து முன்னோக்கிச் செல்ல நமக்கு உதவி செய்யும் நம்பிக்கையை இச்சிறகுகள் காட்டுகின்றன. இந்நம்பிக்கை திரைக்குள் போகிறதான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது எனக் கூறப்பட்டுள்ளது. (எபி. 6 : 19). அதுபோலவே செதிள்கள் மூலம் மீன்கள் தண்ணீரில் பாதுகாக்கப்படுகின்றன. இது இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தில் நம் ஆத்துமாவைப் பரிசுத்தத்தில் பாதுகாக்கும் விசுவாசத்தைக் காட்டுகிறது.(1யோவான்5:4) சத்திய வசனமாகிய சுவிசேஷமானது, ஆத்துமாவைப் பரிசுத்தமாக்குகிற விசுவாசம், நம்பிக்கை என்னும் இரு அம்சங்களையுடையது. (கொலோ. 1 : 22)

**3.** வசனத்தினால் நம் ஆவி பரிசுத்தமாக்கப்படுதல் பற்றி விவரி.

ஆவி பரிசுத்தமாக்கப்படுதல் : புறா போன்ற சுத்தமான பறவைகள்.

நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள் (யோவான் 15 : 3) என்று கர்த்தராகிய இயேசு சொன்னார். இஸ்ரவேல் புத்திரர் புசிக்கலாம் என்று அனுமதிக்கப்பட்ப்டிருந்த சுத்தமான பறவைகள், வசனத்தின் மூலம், ஆவியில் தூய்மையான பரிசுத்தமாக்கப்பட்ட ஜீவியத்தைக் காண்பிக்கின்றன. ஆகாயத்தில் பறக்கிற ஒரு பறவையைப் போன்று ஞானஸ்நானம் பெற்ற பின்பு விசுவாசத்தால் ஆவியில் கிறிஸ்துவுடன் கூட எழுந்த ஒரு உன்னத ஜீவியம் செய்ய நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.(கொலோ.2 : 12). கிறிஸ்து தேவனுடைய வார்த்தையாயிருக்கிறார். நாம் அவரிலும், அவர் நம்மிலும் தொடர்ந்து நிலைத்திருக்கும் போது, நாம் அவருடைய வசனத்தால் பரிசுத்தமாக்கப்படுகிறோம். பூமியிலுள்ளவைகளை நாடாமல், மேன்மையானவைகளை நாட அவ்வசனம் நம்மை உயிர்ப்பிக்கிறது.

**VI** *விரிவாக தெளிவாக வசன ஆதாரத்துடன் விடையளி :* (15 Marks)

**1.** வசனத்தினால் பரிசுத்தமாக்கப்படும் சத்தியத்தை சுத்தமான மூன்றுவித ஜீவன்களைக் கொண்டு விளக்குக.

சரீரம் பரிசுத்தமாக்கப்படுதல்: மிருகங்களில் விரிகுளம்புள்ளவைகளாயிருந்து அசைபோடுகிறவை (லேவி. 11 : 3)

1. "விரிகுளம்புள்ளது" என்பது வேறுபிரிந்த ஜீவியத்தையும் "அசைபோடுதல்" என்பது கர்த்தருடைய வசனத்தைத் தியானிப்பதையும் காட்டுகிறது.
2. நாம் தேவனுடைய வசனத்தைத் தியானித்து இவ்வுலகத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவசித்தம் செய்யும்படியாக நம் சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்கும்போது தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று நாம் அறிந்து கொள்ளும்படி தேவனுடைய வசனத்தினால் நம் மனது புதுப்பிக்கப்படுகிறது.(ரோமர் 12 : 1, 2)
3. வேறுபாட்டின் ஜீவியத்தைக் காத்துக் கொண்டு, கர்த்தருடைய வசனத்தின் மேல் தியானமாயிருக்கிற மனுஷனுடைய பாக்கியத்தைக் குறித்துச் சங்கீதக்காரன் (சங். 1 : 1 - 3)ல் கூறுகிறான்.

ஆத்துமா பரிசத்தமாக்கப்படுதல்: தண்ணீரில் வாழும் சிறகும் செதிளுமுள்ளயாவும் (லேவி. 11 : 9)

1. மீன்கள் தண்ணீரின் ஓட்டத்தை எதிர்த்துப் பிரயாணம் செய்ய அவற்றிற்கு சிறகுகள் உதவி செய்கின்றன. நம் ஜீவியங்களுக்கு வழிகாட்டி நடத்தி, இவ்வுலகத்தின் வழக்கத்தை எதிர்த்து முன்னோக்கிச் செல்ல நமக்கு உதவி செய்யும் நம்பிக்கையை இச்சிறகுகள் காட்டுகின்றன.
2. இந்நம்பிக்கை திரைக்குள் போகிறதான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது எனக் கூறப்பட்டுள்ளது. (எபி. 6 : 19).
3. அதுபோலவே செதிள்கள் மூலம் மீன்கள் தண்ணீரில் பாதுகாக்கப்படுகின்றன. இது இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தில் நம் ஆத்துமாவைப் பரிசுத்தத்தில் பாதுகாக்கும் விசுவாசத்தைக் காட்டுகிறது.(1 யோவான் 5 : 4)
4. சத்திய வசனமாகிய சுவிசேஷமானது, ஆத்துமாவைப் பரிசுத்தமாக்குகிற விசுவாசம், நம்பிக்கை என்னும் இரு அம்சங்களையுடையது.(கொலோ. 1 : 22)

ஆவி பரிசுத்தமாக்கப்படுதல் : புறா போன்ற சுத்தமான பறவைகள்

1. நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள் (யோவான் 15 : 3) என்று கர்த்தராகிய இயேசு சொன்னார்.
2. இஸ்ரவேல் புத்திரர் புசிக்கலாம் என்று அனுமதிக்கப்பட்ப்டிருந்த சுத்தமான பறவைகள், வசனத்தின் மூலம், ஆவியில் தூய்மையான பரிசுத்தமாக்கப்பட்ட ஜீவியத்தைக் காண்பிக்கின்றன.
3. ஆகாயத்தில் பறக்கிற ஒரு பறவையைப் போன்று ஞானஸ்நானம் பெற்ற பின்பு விசுவாசத்தால் ஆவியில் கிறிஸ்துவுடன் கூட எழுந்த ஒரு உன்னத ஜீவியம் செய்ய நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். (கொலோ. 2 : 12). கிறிஸ்து தேவனுடைய வார்த்தையாயிருக்கிறார்.
4. நாம் அவரிலும், அவர் நம்மிலும் தொடர்ந்து நிலைத்திருக்கும் போது, நாம் அவருடைய வசனத்தால் பரிசுத்தமாக்கப்படுகிறோம்.
5. பூமியிலுள்ளவைகளை நாடாமல், மேன்மையானவைகளை நாட அவ்வசனம் நம்மை உயிர்ப்பிக்கிறது.

இவ்விதமாய் பரிசுத்த மாக்கப்பட்ட நாம் குற்றமற்றவர்களாய்ப் பாதுகாக்கப்பட்டு, கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாய் இருக்க வேண்டும்.(பிலி. 1 : 1) தேவன் நம் ஆவி, ஆத்துமா, சரீரத்தைப் பரிசுத்தப்படுத்தி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக் கென்று நம்மைக் குற்றமற்றவர்களாகக் காக்க வல்லவராயிருக்கிறார்.

**VII** *போதனை :* (2 Marks)

அன்றாடம் கர்த்தருடைய வசனத்தை வாசித்துத் தியானித்து, அவற்றினால் கிடைக்கும் வெளிப்படுத்தல்களுக்கு நம்மை ஒப்புக் கொடுத்து, தேவசித்தத்தை விளங்கிக் கொண்டவர்களாய் நாம் ஜீவிக்க வேண்டும். நாம் இதைச் செய்யும்போது கர்த்தருடைய வசனம் நம் சரீரம், ஆத்துமா, ஆவி ஆகியவற்றை முற்றிலும் பரிசுத்தமாக்கும்.

***************

# தெய்வீக சுகம்

(பகுதி I)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

மத்தேயு 8 : 16, 17

"அஸ்தமனமானபோது, பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; அவர் அந்த ஆவிகளை தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார்.

அவர் தாமே, நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களை சுமந்தார் என்று ஏசாயா தீர்க்கதரிசியினால் உறைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது"

**II** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

**1.** தெய்வீக சுகம் என்றால் என்ன?

ஒருவன் தன் சரீரத்தில் வியாதிப்பட்டால், சரீரத்திற்கும் ஆத்துமாவிற்கும் ஆண்டவராயிருக்கிற தேவன்மேல் தன் முழு நம்பிக்கையையும் வைத்து, மருத்துவர்களையோ, மருந்தையோ நாடாமல், விசுவாசத்தால் பெறும் சுகமே தெய்வீகம் ஆகும் (பாடத்திட்டம்).

**2.** தெய்வீக சுகத்திற்காக காத்திருக்கும் ஒரு தேவனுடைய பிள்ளைக்குள் கர்த்தர் குணமாக்கும் வேலையை எங்கு ஆரம்பிக்கிறார்? ஒரு வசன ஆதாரம் எழுது.

மனுஷனுடைய சரீரம் அழிவுக்குரியதாயிருந்தாலும், அவனுடைய ஆத்துமா நித்தியமானனது. எனவே, தன் சரீர சுகத்திற்காக தேவனுக்கு காத்திருக்கும் ஒருவனுடைய உள்ளான மனுஷனில் முதலாவது கர்த்தர் குணமாக்குதலின் வேலையை ஆரம்பிக்கிறார். வேறு வார்த்தைகளில் கூறின் தெய்வீக சுகம் ஆத்துமாவில் ஆரம்பிக்கிறது. அப்போஸ்தலன், "உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன் " என்று கூறியது இதைக் குறிக்கிறது எனலாம். ( III யோவான் 2)

**3.** வியாதியிலிருந்து சுகம்பெற நாம் மருந்து உபயோகிப்பதை வேதாகமம் அங்கீகரிக்கிறதா? ஏன்?

1. யாத்திராகமம் 15 : 26 - ல், 'நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்' என்று தேவன் கூறுகிறார். எனவே, தேவனுடைய பிள்ளைகளுக்கு கிடைக்கும் சுகம் மருந்தின் மூலமாயிருக்கக்கூடாது.
2. II நாளாகமம் 16 : 12 - இல் ஆசா தன் வியாதியில், 'கர்த்தரை அல்ல, பரிகாரிகளையே தேடினான் ' என எழுதப்பட்டுள்ளது.

இதிலிருந்து நாம் மருந்தை நாடுவதை வேதாகமம் அங்கீகரிப்பதில்லை என் விளங்கிக் கொள்கிறோம்.

**4.** தேவனுடைய பிள்ளைகள் தெய்வீக சுகத்தைப் பெற்றுக்கொள்ளும் வழிகள் யாவை?

1. குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுதல் (யாக். 5 : 16).
2. சபையின் மூப்பர்களை வரவழைத்தல் (யாக். 5 : 14, 15).
3. கஷ்டத்திலிருக்கும் மற்றவர்களுக்காக ஜெபம்பண்ணுதல் (யோபு 42 : 10).

**5.** தெய்வீக சுகத்திற்காக காத்திருக்கும் வியாதியஸ்தர் எப்போதுமே உடனடியாக சுகத்தைப் பெற்றுக்கொள்கிறார்களா? ஊதாரணங்களுடன் எழுது.

இல்லை. தேவன் ஒரு அற்புதத்தை நடப்பிக்கும்போது அவர்கள் உடனடியாக சுகம் பெறலாம். ஆனால் உடனடியான சுகம் என்பது கட்டாயமான காரியம் அல்ல.

உதாரணங்கள்:

1. அப். பவுல் துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்பட்டவராக விட்டுவந்தார் (2 தீமோ.4 : 20).
2. அப். பவுலுக்கு மாம்சத்தில் ஒரு முள் கொடுக்கப்பட்டிருந்தது. அவர் மூன்று முறை ஜெபித்தும் அவருக்கு உடனடியாக விடுதலை கிடைக்கவில்லை (2 கொரி. 12 : 7-9).

**6.** தெய்வீக சுகத்திற்கென்று காத்திருப்பதால் உண்டாகும் பயன்கள் யாவை?
1. விசுவாசம் கட்டி எழுப்பப்படுகிறது.
2. நம்முடைய பாவங்களை அறிந்துணர்ந்து நம்மை சுத்திகரித்துக்கொண்டு, ஒருவரோடொருவர் ஒப்புரவாக அது ஏதுவாயிருக்கிறது.
3. தேவ பயம் பெருகுகிறது. (பாடத்திட்டம்).

**7.** தேவனுடைய பிள்ளை வியாதிக்காக மருந்து எடுப்பது தேவ ஆலோசனை அல்ல - விளக்கு.

தேவன் மனுஷனை உண்டாக்கியபொழுது, மருந்து அவருடைய திட்டத்தில் இருக்கவில்லை; மனுஷனுக்குப் புசிக்கத் தேவையான ஆகாரத்தையும், குடிப்பதற்குத் தண்ணீரையும் மட்டுமே அவர் கொடுத்திருந்தார். மனுஷன் பாவம் செய்வதற்கு முன்பு, அவன் வியாதியாயிருந்ததில்லை. கல்வாரியின் மூலம் பாவத்திலிருந்து விடுதலை கிடைப்பதுபோல, பாவத்தின் பலனாகிய வியாதி சுகமாக்கப்படுவதற்கும் கர்த்தரின் கல்வாரி மரணம் போதுமானது. ஆதலால் வியாதிக்காக மருந்து நாடுவது தேவ ஆலோசனையல்ல (போதனை).

## III <u>*சுருக்கமான விடையளி*</u>: (5 Marks)

**1.** ஒருவன் வியாதிப்படுவதற்கான முக்கியமான சில காரணங்களை எழுது.

*i)* சுகாதாரக் குறைவு, பெருந்திண்டி, தீய பழக்கங்களாகிய புகையிலை, மதுபானம், போதைப்பொருள் ஆகியவற்றை உபயோகித்தலுக்கு அடிமைப்படுதல், மற்றும் இயற்கையின் பிரமாணங்களை மீறுதல்.
*ii)* பாவமும் கீழ்ப்படியாமையும் (உபா. 28 : 15, 22, 27).
*iii)* சாத்தானின் நேரடியாய் வாதித்தல் (யோபு 2 : 7)
*iv)* விசுவாசத்தின் பரீட்சை (1 பேதுரு 1 : 7)
*v)* தேவனுடைய சிட்சை (எண். 12 : 1-10 ;2 இராஜா5: 22-27 ;1 கொரி. 11 : 29, 30).

**2.** வியாதியஸ்தர் சுகமடைந்ததைப்பற்றி வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள ஐந்து சந்தர்ப்பங்களை எழுது.

*i)* அபிமலேக்கின் வீட்டார் ஆபிரகாமுடைய ஜெபத்தினால் குணமாக்கப்பட்டார்கள் (ஆதி. 20 : 17, 18).
*ii)* மிரியாமுடைய குஷ்டரோகம் மோசேயின் ஜெபத்தினால் சுகமானது (எண்.12:13-15).
*iii)* கொள்ளிவாய்ச் சர்ப்பங்களால் கடிக்கப்பட்டவர்கள், மோசேயினால் உண்டாக்கப்பட்ட வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்த்துப் பிழைத்தார்கள் (எண். 21 : 6 – 9).
*iv)* கர்த்தராகிய இயேசு தம்மிடம் வந்த வியாதியஸ்தரை சுகமாக்கினார் (மத். 8 : 16).
*v)* அப்போஸ்தலர் வியாதியஸ்தரை சுகமாக்கினார்கள் (அப். 5 : 15, 16, 14:8-10).

**3.** தேவனுடைய பிள்ளைகள் தெய்வீக சுகத்தைப் பெற்றுக்கொள்ளும் வழிகளையும், தெய்வீக சுகத்திற்காகக் காத்திருக்கும் வியாதியஸ்தர் எப்போதுமே உடனடியாக சுகத்தைப் பெற்றுக்கொள்கிறார்களா என்பதையும் வசன ஆதாரங்களுடன் எழுதுக.

<u>தேவனுடைய பிள்ளைகள் தெய்வீக சுகத்தைப் பெற்றுக்கொள்ளும் வழிகள் :</u>

1. குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுதல் (யாக். 5 : 16).
2. சபையின் மூப்பர்களை வரவழைத்தல் (யாக். 5 : 14, 15).
3. கஷ்டத்திலிருக்கும் மற்றவர்களுக்காக ஜெபம்பண்ணுதல் (யோபு 42 : 10).

தெய்வீக சுகத்திற்காகக் காத்திருக்கும் வியாதியஸ்தர் எப்போதுமே உடனடியாக சுகத்தைப் பெற்றுக்கொள்வதில்லை. தேவன் ஒரு அற்புதத்தை நடப்பிக்கும்போது அவர்கள் உடனடியாக சுகம் பெறலாம். ஆனால் உடனடியான சுகம் என்பது கட்டாயமான காரியம் அல்ல.

<u>உதாரணங்கள்:</u>

1. அப். பவுல் துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்பட்டவராக விட்டுவந்தார் (2 தீமோ.4 : 20).
2. அப். பவுலுக்கு மாம்சத்தில் ஒரு முள் கொடுக்கப்பட்டிருந்தது. அவர் மூன்று முறை ஜெபித்தும் அவருக்கு உடனடியாக விடுதலை கிடைக்கவில்லை. (2 கொரி. 12 : 7-9).

**IV** *விரிவான விடையளி :* (10 Marks)

**1.** ஒருவர் வியாதிப்படுவதற்கான முக்கியமான சில காரணங்களையும் வியாதியஸ்தர் சுகமடைந்ததைப் பற்றி வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள ஐந்து சந்தர்ப்பங்களையும் வசன ஆதாரங்களுடன் எழுது.

ஒருவன் வியாதிப்படுவதற்கான முக்கியமான சில காரணங்கள்:.

*i)* சுகாதாரக் குறைவு, பெருந்திண்டி, தீய பழக்கங்களாகிய புகையிலை, மதுபானம், போதைப்பொருள் ஆகியவற்றை உபயோகித்தலுக்கு அடிமைப்படுதல், மற்றும் இயற்கையின் பிரமாணங்களை மீறுதல்.
*ii)* பாவமும் கீழ்ப்படியாமையும் (உபா. 28 : 15, 22, 27).
*iii)* சாத்தானின் நேரடியாய் வாதித்தல் (யோபு 2 : 7)
*iv)* விசுவாசத்தின் பரீட்சை (1 பேதுரு 1 : 7)
*v)* தேவனுடைய சிட்சை (எண். 12 : 1-10 ;2 இராஜா5: 22-27 ;1 கொரி. 11 : 29, 30).

வியாதியஸ்தர் சுகமடைந்ததைப்பற்றி வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள ஐந்து சந்தர்ப்பங்கள்:

*i)* அபிமலேக்கின் வீட்டார் ஆபிரகாமுடைய ஜெபத்தினால் குணமாக்கப்பட்டார்கள் (ஆதி. 20 : 17, 18).
*ii)* மிரியாமுடைய குஷ்டரோகம் மோசேயின் ஜெபத்தினால் சுகமானது (எண்.12:13-15).
*iii)* கொள்ளிவாய்ச் சர்ப்பங்களால் கடிக்கப்பட்டவர்கள், மோசேயினால் உண்டாக்கப்பட்ட வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்த்துப் பிழைத்தார்கள் (எண். 21 : 6 – 9).
*iv)* கர்த்தராகிய இயேசு தம்மிடம் வந்த வியாதியஸ்தரை சுகமாக்கினார் (மத். 8 : 16).
*v)* அப்போஸ்தலர் வியாதியஸ்தரை சுகமாக்கினார்கள் (அப். 5 : 15, 16, 14:8-10).

**V** *போதனை :* (2 Marks)

தேவன் மனுஷனை உண்டாக்கியபொழுது, மருந்து அவருடைய திட்டத்தில் இருக்கவில்லை; மனுஷனுக்குப் புசிக்கத் தேவையான ஆகாரத்தையும், குடிப்பதற்குத் தண்ணீரையும் மட்டுமே அவர் கொடுத்திருந்தார். மனுஷன் பாவம் செய்வதற்கு முன்பு, அவன் வியாதியாயிருந்ததில்லை. கல்வாரியின் மூலம் பாவத்திலிருந்து விடுதலை கிடைப்பதுபோல, பாவத்தின் பலனாகிய வியாதி சுகமாக்கப்படுவதற்கும் கர்த்தரின் கல்வாரி மரணம் போதுமானது. ஆதலால் வியாதிக்காக மருந்து நாடுவது தேவ ஆலோசனையல்ல

************

# தெய்வீக சுகம்

(பகுதி II)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

1 பேதுரு 2 : 24

“நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் ”

ரோமர் 8 : 11

“அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்”

**II** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

**1.** சிலர் தாங்கள் வியாதிப்படும்போது ‘விடுதலை பெறச் சம்மதியாமல் வாதிக்கப்பட்ட பரிசுத்தவான்களின் கூட்டத்திற்குட்பட்டவர்கள்’ என்று தங்களைக்குறித்து எண்ணுவது பிசாசின் வஞ்சகம் என்பதை விளக்கு.

தாங்கள் ‘விடுதலைபெறச் சம்மதியாமல் வாதிக்கப்பட்ட’ பரிசுத்தவான்களின் கூட்டத்திற்குட்பட்டவர்கள் என சிலர் கூறுகிள்றனர் (எபி. 11 : 35 – 38) ஆனால் அவர்கள் குறிப்பிடும் வேதபகுதி அப்படிப்பட்ட பரிசுத்தவான்கள் வியாதியினால் வாதிக்கப்படாமல், சத்துருக்களால் வதைக்கப்பட்டனர் என்பதை மிகத் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

**2.** ‘கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன் வாலிபத்தில் மரித்ததுபோல வியாதியினால் கஷ்டப்படும் நானும் ஏன் வாலிபத்தில் மரிக்கக்கூடாது’ என்கிற பிசாசின் தந்திரமான வஞ்சகத்தை மேற்கொள்வது எப்படி?

கர்த்தராகிய இயேசு வாலிபனாக மரித்தது உண்மைதான். ஆனால் அவர் வியாதியினால் மரிக்கவில்லை. அவர் குரூர மனிதராலே கொல்லப்பட்டார். மேலும், கர்த்தராகிய இயேசுவின் மரணத்தின் நோக்கம் மனுகுலத்தின் மீட்பாயிருந்தது. ஆனால் மருபக்கத்தில் நாமோ, காலத்திற்கு முன் மரிப்பதால் ஒருவரையும் பாவத்தினின்று மீட்கப்போவதில்லை. எனவே, நாம் வாலிபப் பிராயத்தில் மரிக்க விரும்புவதற்கு அனுகூலமாக எவ்விதத்திலும் தர்க்கம் செய்யமுடியாது (பாடத்திட்டம்).

**3.** ‘எசேக்கியா ராஜாவைப்போல் பிழைத்துப் பின்வாங்கிப்போவதைக் காட்டிலும், வியாதியில் மரிப்பதே நல்லது’ என்று யாராவது உன்னிடம் கூறினால், நீ அவர்களுக்கு என்ன பதில் கொடுப்பாய்?

இது பொய்யான தத்துவம். தேவன் தம்முடைய இரக்கத்தினால் எசேக்கியாவைச் சுகமாக்கியபோதிலும் தேவனுடைய பார்வையில் செம்மையானவற்றைச் செய்யும்படி அவன் தன் வழிகளைச் சரிப்படுத்தவில்லை. நாம் தெய்வீக சுகத்தை உரிமைபாராட்டிக் கேட்கும்போது, உண்மையாக மனஸ்தாபப்பட்டு நம்முடைய ஜீவியத்தின் மீதியான நாட்களெல்லாம் தேவனுடைய மகிமைக்காக ஜீவிக்கத் தீர்மானிக்கவேண்டும் (பாடத்திட்டம்).

**4.** ‘நான் வியாதியாகவே இருக்க விரும்புகிறேன் ஏனெனில் என் வியாதியின் மூலமாக நான் பரிசுத்தமாக்கப்படுகிறேன்’ என்பது தெய்வீக சுகத்தை உரிமை பாராட்டிப் பெற்றுக்கொள்வதைத் தடைசெய்யும் பிசாசின் வஞ்சகமான கூற்று என்பதை விளக்கு.

வியாதி தேவனிடத்திலிருந்து வருகிறதில்லை. அது சாத்தானிடமிருந்து வருகிறது. எனவே, அது நம்மைப் பரிசுத்தப்படுத்துவதில்லை. நம்மைப் பரிசுத்தப்படுத்தவும், பூரணத்திற்குக் கொண்டுவரவும் கர்த்தராகிய இயேசுவின் பலி நமக்குப் போதுமானது. எனவே, கர்த்தராகிய இயேசுவோடு நெருங்கி ஜீவிக்கவும், அவருடைய பரிசுத்தத்திற்குப் பங்குள்ளவர்களாகவும், நமக்கு வியாதி அவசியமில்லை. நாம் வியாதியாயிருந்தாலும், ஆரோக்கியமுள்ளவர்களாயிருந்தாலும், நம்மை நாமே பரிசுத்தப்படுத்திக்கொள்வதற்காகவும்,

நம்முடைய மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மீது நம்மைக் கட்டி எழுப்பிக்கொள்வதற்காகவும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் (பாடத்திட்டம்).

5. பிசாசின் கிரியைகளில் இரண்டினை எழுது.
   *i)* வியாதி
   *ii)* அகால மரணம் (பாடத்திட்டம்).
6. நாம் சுகமாக்கப்படுவது தேவனுடைய சித்தம் என்பதற்கான இரண்டு வசன ஆதாரங்களை எழுதுக.
   *i)* மத்தேயு 8 : 23
   *ii)* III யோவான் 2
7. வியாதியினால் காலத்திற்குமுன் மரிப்பது நம்முடைய ஜீவியத்தில் எவற்றைத் தடைசெய்யும்?
   *i)* நம்முடைய ஊழியத்தை நாம் நிறைவேற்றுவதையும்,
   *ii)* நம்முடைய ஓட்டத்தை நாம் முற்றுமுடிய ஓடுவதையும் தடைசெய்யும் (கொலோ. 4 : 17; 2 தீமோ 4 : 7)

**III** ***<u>சுருக்கமான விடையளி</u>***: (5 Marks)

1. சில சமயங்களில், சுகமாக்கப்படுவதற்குத் தாமதிக்கும்போது தேவன் சுகமாக்குவதற்கு ஒரு குறித்த வேளை உண்டு என்பதை நாம் நினைவிற்கொண்டு நாம் என்னென்ன செய்ய வேண்டும்?

சில சமயங்களில், சுகமாக்கப்படுவதற்குத் தாமதிக்கும்போது தேவனுக்கு சுகமாக்குவதற்கு ஒரு குறித்த வேளை உண்டு என்பதை நாம் நினைவிற்கொண்டு சில குறிப்பான காரியங்களைச் செய்ய வேண்டும். அவையாவன:

*i)* தேவனில் விசுவாசத்தைக் கட்டி எ ப்ப வேண்டும்.ஏனெனில் ஒரு திட்டவட்டமான அற்புதத்தை நடப்பிப்பதற்கு அல்லது சுகமாக்குவதற்கு தேவன் கிரியை செய்யத் துவங்குமுன் நமக்குள் உறுதியான விசுவாசம் இருக்க வேண்டும் (மாற்கு9:17 - 23; மத். 9 : 27 - 30).

*ii)* அவர் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்றும் வரை சுகத்திற்காகத் தேவனைத் தொடர்ந்து ஸ்தோத்தரித்துக் கொண்டேயிருக்கவேண்டும்(ரோமர்4:20, 21).

*iii)* தங்கள் நிலவரத்தைக்குறித்து திருப்திப்படவோ அதைரியப்படவோ செய்யாமல், தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பற்றிப் பிடித்துக்கொண்டு, தெய்வீக சுகத்தை உரிமை பாராட்டிக் கேட்கவேண்டும் (எபி. 6 : 15).

*iv)* அவருடைய வாக்குத்தத்தத்தை நீங்கள் சந்தேகிக்காவண்ணம், உங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொள்ளும்பொருட்டு பொறுமையையும் ஜாக்கிரதையையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் (எபி. 6 : 11, 12).

**IV** ***<u>விரிவான விடையளி :</u>*** (10 Marks)

1. ஜனங்கள் தெய்வீக சுகத்தை உரிமை பாராட்டிப் பெற்றுக்கொள்வதைத் தடைசெய்யும்படியாக சாத்தான் கொண்டுவரும் சில தந்திரமான வஞ்சக எண்ணங்களையும் அதற்கு பதிலளிக்கும் வகையில் தேவ வசனத்தோடுகூடிய விளக்கத்தையும் எழுது.

வியாதிப்பட்டிருக்கும் தேவனுடைய பிள்ளைகள் சிலர், தாங்கள் தெய்வீக சுகத்தை உரிடை பாராட்டி ஜெபித்து பெற்றுக்கொள்வதை தடைசெய்யும் நோக்கத்தோடு, சாத்தான் சில வஞ்சகமான எண்ணங்களை அவர்களுக்குள் கொண்டுவருகிறான். அப்படியாக அவன் கொண்டுவரும் வஞ்சகமான எண்ணங்களையும், அந்த எண்ணங்கள் தவறு என்று உணர்த்தும் தேவ வசனத்தோடுகூடிய விளக்கத்தையும் கீழே காண்போமாக.

**1.** தாங்கள் 'விடுதலைபெறச் சம்மதியாமல் வாதிக்கப்பட்ட' பரிசுத்தவான்களின் கூட்டத்திற்குட்பட்டவர்கள் என சிலர் கூறுகின்றனர் (எபி. 11 : 35 – 38)

ஆனால் அவர்கள் குறிப்பிடும் வேதபகுதி அப்படிப்பட்ட பரிசுத்தவான்கள் வியாதியினால் வாதிக்கப்படாமல், சத்துருக்களால் வதைக்கப்பட்டனர் என்பதை மிகத் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

**2.** சிலர், 'இயேசு வாலிபனாக மரித்தாரே. நான் ஏன் அவ்விதம் மரிக்கக்கூடாது? ' என்று கேட்கின்றனர்.

கர்த்தராகிய இயேசு வாலிபனாக மரித்தது உண்மைதான். ஆனால் அவர் வியாதியினால் மரிக்கவில்லை. அவர் குரூர மனிதராலே கொல்லப்பட்டார். மேலும், கர்த்தராகிய இயேசுவின் மரணத்தின் நோக்கம் மனுகுலத்தின் மீட்பாயிருந்தது. ஆனால் மருபக்கத்தில் நாமோ, காலத்திற்கு முன் மரிப்பதால் ஒருவரையும் பாவத்தினின்று மீட்கப்போவதில்லை.

**3.** எசேக்கியா ராஜாவைப்போல ஜீவனோடிருந்து பின்வாங்கிப் போவதைக் காட்டிலும், வியாதியில் மரிப்பதே நல்லது' என சிலர் கூறுகின்றனர்.

இது பொய்யான தத்துவம். தேவன் தம்முடைய இரக்கத்தினால் எசேக்கியாவைச் சுகமாக்கியபோதிலும் தேவனுடைய பார்வையில் செம்மையானவற்றைச் செய்யும்படி அவன் தன் வழிகளைச் சரிப்படுத்தவில்லை. நாம் தெய்வீக சுகத்தை உரிமைபாராட்டிக் கேட்கும்போது, உண்மையாக மனஸ்தாபப்பட்டு நம்முடைய ஜீவியத்தின் மீதியான நாட்களெல்லாம் தேவனுடைய மகிமைக்காக ஜீவிக்கத் தீர்மானிக்கவேண்டும்.

**4.** லிநான் வியாதியாகவே இருக்க விரும்புகிறேன் ஏனெனில் என் வியாதியின் மூலமாக நான் பரிசுத்தமாக்கப்படுகிறேன்' என்று சிலர் கூறுகின்றனர்.

வியாதி தேவனிடத்திலிருந்து வருகிறதில்லை. அது சாத்தானிடமிருந்து வருகிறது. எனவே, அது நம்மைப் பரிசுத்தப்படுத்துவதில்லை. நம்மைப் பரிசுத்தப்படுத்தவும், பூரணத்திற்குக் கொண்டுவரவும் கர்த்தராகிய இயேசுவின் பலி நமக்குப் போதுமானது. எனவே, கர்த்தராகிய இயேசுவோடு நெருங்கி ஜீவிக்கவும், அவருடைய பரிசுத்தத்திற்குப் பங்குள்ளவர்களாகவும், நமக்கு வியாதி அவசியமில்லை. நாம் வியாதியாயிருந்தாலும், ஆரோக்கியமுள்ளவர்களாயிருந்தாலும், நம்மை நாமே பரிசுத்தப்படுத்திக்கொள்வதற்காகவும், நம்முடைய மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மீது நம்மைக் கட்டி எழுப்பிக்கொள்வதற்காகவும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

**V** *<u>விரிவாகவும் தெளிவாகவும் விடையளி:</u>* (15 Marks)

**1.** நாம் தெய்வீக சுகத்தை உரிமை பாராட்டிக் கேட்கவேண்டும் என்பதற்கான காரணங்களை எழுதுக.

*i)* குர்த்தராகிய இயேசு நம் பாவங்களையும் வியாதிகளையும் தம்மீது சுமந்து அவற்றை நீக்கிப் போடும்படியாக வந்தார் (மத். 8 : 16, 17; 1 பேதுரு 2 : 24).

*ii)* வியாதி, நியாயப்பிரமாணத்தின் சாபங்களில் ஒன்றாக உபாகமம் அதி. 28 - இல் கூறப்பட்டுள்ளது. ஆனால் இயேசு நமக்காகச் சாபமாகி, எல்லாச் சாபங்களினின்றும் நம்மை விடுதலையாக்கியிருக்கிறார் (கலா. 3 : 13).

*iii)* கர்த்தராகிய இயேசு பிசாசின் கிரியைகளை அழித்துப்போடும்படியாக வந்தார் (1 யோவான் 3 : 8). பிசாசின் கிரியைகளில் வியாதியும் அகால மரணமும் உட்படும்.

*iv)* தேவனுடைய வல்லமையானது மரித்தவர்களைக் கல்லறைகளிலிருந்து உயிர்த்தெழச் செய்யக்கூடியதும், ஜீவனோடிருக்கும் பரிசுத்தவான்களை மறுரூபமடையச் செய்யக்கூடியதுமாய் இருக்குமானால், அதே வல்லமை எவ்வளவு அதிகமாக இன்று நம்மைச் சுகமாக்க கூடியதாயிருக்கும் (ரோமர் 8 : 11).

*v)* குர்த்தராகிய இயேசு எவ்வித விதிவிலக்குமின்றி தம்மிடம் வந்த யாவரையும் சுகமாக்கினார். 'உன்னைச் சுகமாக்க முடியாத அளவிற்கு உன் வியாதி கடுமையானது' என்று சொல்லி, ஒருவரையாவது அவர் அனுப்பிவிடவில்லை (மத். 12 : 15; லூக்கா 6 : 19; அப். 10 : 38). அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

*vi)* நாம் சுகமாக்கப்படுவது தேவனுடைய சித்தம் (மத். 8 : 2,3; III யோவான் 2)

*vii)* நாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பற்றிப் பிடித்துக்கொள்ளவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. சுகமாகுதல் நமக்குக் கொடுக்கப்பட்ட தேவனுடைய வாக்குத்தத்தங்களில் ஒன்றாகும் (எபி. 6 : 11, 12; யாத். 15 : 26; 23 : 25).

*viii)* நாம் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட ஊழியத்தைச் நிறைவேற்றம்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். வியாதியினால் காலத்திற்கு முன் மரிப்பது நம்முடைய ஊழிய நாட்களைக் குறைக்கும் அல்லது நம்முடைய ஓட்டத்தை நாம் முற்றுமுடிய ஓடுவதைத் தடைசெய்யும் (கொலோ. 4 : 17; II தீமோ. 4 : 7).

*ix)* ஆயிரவருட அரசாட்சியிலோ, பரலோகத்திலோ வியாதியே இராது. இவ்வுலகத்திலுங்கூட நாம் வியாதியற்றவர்களாய் இருக்கவேண்டும் என தேவன் விரும்புகிறார் என்பதை இது காண்பிக்கிறது.

**VI** *<u>போதனை :</u>* (2 Marks)

தெய்வீக சுகம் மேஜையிலிருந்து விழும் வெறும் துணிக்கைகளல்ல. அது பிள்ளைகளின் அப்பமாயிருக்கிறது. எனவே நாம் தெய்வீக சுக சத்தியத்தைக் கவனமாய்க் கற்றுக்கொண்டு, சுகத்தை உரிமைபாராட்டிக் கேட்கும்படி நம் விசுவாசத்தைக் கட்டி எழுப்பவேண்டும்.

************

# இஸ்ரவேல் ராஜ்யம்

(பகுதி I)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

உபாகமம் 4 : 7, 8

"நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது?

இந்நாளில் நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாயப்பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதியும் எது?"

உபாகமம் 7 : 6

"நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார்"

**II** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

**1.** ஒரு காலத்தில் கானான் என்றும், பின்பு பலெஸ்தீனா என்றும் அழைக்கப்பட்ட நாடு எது? அது எங்கே இருக்கிறது?

ஒரு காலத்தில் கானான் என்றும், பின்பு பலெஸ்தீனா என்றும் அழைக்கப்பட்ட நாடு இஸ்ரவேல் நாடு ஆகும். இது, இரு பெரிய கண்டங்களாகிய ஆசியாவும் ஆப்பிரிக்காவும் ஐரோப்பியாவை சந்திக்கும் இடத்தில், ஆசியாவின் மேற்கேயும், மத்தியதரைக் கடலுக்குக் கிழக்கேயும் இருக்கிறது (பாடத்திட்டம்).

**2.** ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்த நாடு எது? அதில் எத்தனை இராஜாக்களும் எத்தனை ஜாதியினரும் இருந்தனர்?

ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்த நாடு இஸ்ரவேல் நாடு ஆகும். அதில் முப்பத்தொரு ராஜாக்களும் ஏழு ஜாதியினரும் இருந்தனர் (ஆதி. 15 : 18 - 21; உபா. 7 : 1; யோசுவா 12 : 8 – 24).

**3.** ஆபிரகாமுடைய பேரன்களில் யாருக்கு இஸ்ரவேல் நாடு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது? அவனுக்கு எத்தனை பிள்ளைகள் இருந்தனர்? அவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

ஆபிரகாமுடைய பேரன்களில் யாக்கோபுக்கு இஸ்ரவேல் நாடு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது. அவனுக்கு பன்னிரண்டு குமாரர் இருந்தனர். அவர்களுடைய பிள்ளைகள் இஸ்ரவேலர் அல்லது இஸ்ரவேல் புத்திரர் என்று அழைக்கப்பட்டனர் (பாடத்திட்டம்).

**4.** இஸ்ரவேலர் எதற்காக எகிப்துக்குப்போய் குடியேறினர்? அங்கே எத்தனை வருடங்களாக அடிமைத்தனத்திலிருந்தனர்?

கானான் தேசத்தில் ஒரு கொடிய பஞ்சம் உண்டானதினால், அவர்கள் ஆகாரத்தைத் தேடி எகிப்துக்குப் போய் குடியேறினர். அங்கே நானூறு வருடங்கள் அடிமைத்தனத்திலிருந்தனர் (பாடத்திட்டம்).

**5.** எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேலரை தேவன் யார்மூலம் விடுதலையாக்கினார்? அவர்கள் எத்தனை வருடங்கள் வனாந்தரத்தில் வழிநடத்தப்பட்டனர்?

எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேலரை தேவன் மோசேயின்மூலம் விடுதலையாக்கினார். அவர்கள் 40 வருடங்கள் வனாந்தரத்தில் வழிநடத்தப்பட்டனர்.

**6.** இஸ்ரவேலரின் வனாந்திர பிரயாணத்தில் மோசே மரித்தபின் அவர்களைக் கானானுக்குள் வழிநடத்தியது யார்? அவன் எல்லாக் கோத்திரங்களுக்கும் தேசத்தைப் பிரித்துக்கொடுத்தது எப்படி?

மோசே மரித்தபின், யோசுவா அவர்களைக் கானானுக்குள் வழிநடத்தினான். அவன் சீட்டுப்போட்டு தேசத்தைப் பிரித்துக்கொடுத்தான் (பாடத்திட்டம்).

7. இஸ்ரவேலரின் முதலாம் நியாயாதிபதியாகிய ஒத்னியேலின் காலம் முதல், ராஜாவாகிய சவுலின் காலம் வரை உள்ள வருடங்கள் எத்தனை? அத்தனை வருடங்களும் இஸ்ரவேலரை எத்தனை நியாயாதிபதிகள் ஆண்டனர்?

சுமார் 450 வருடங்கள்.

13 நியாயாதிபதிகள் ஆண்டனர் (பாடத்திட்டம்).

8. இஸ்ரவேலரின் கடைசி நியாயாதிபதி யார்? அந்த நியாயாதிபதியிடம் இஸ்ரவேலர் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று கேட்டது ஏன்?

இஸ்ரவேலரின் கடைசி நியாயாதிபதி சாமுவேல்.

இஸ்ரவேலர், தாங்களும் மற்ற ஜாதிகளைக்போலிருக்கும்படியாக தங்களை ஆளுகை செய்யவும், யுத்தத்தில் வழி நடத்தவும் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று விரும்பினார்கள் (பாடத்திட்டம்).

9. தேவன் இஸ்ரவேலரை தமக்கு எப்படிப்பட்ட ஜனமாக இருக்கும்படி தெரிந்தெடுத்தார்? ஏன்?

தேவன் இஸ்ரவேலரை பூமியிலுள்ள மற்றெல்லா ஜாதிகளைக்காட்டிலும், தமக்குச் சொந்த ஜனமாகவும் சுதந்தரமாகவும் இருக்கும்படி தெரிந்தெடுத்தார் (1 இராஜா. 8 : 51). ஏனெனில், தேவன்தாமே அவர்களை ஆளுகை செய்ய விரும்பினார்.

10. இஸ்ரவேலர் தேவசித்தத்திற்கு விரோதமாக விரும்பினது என்ன? அதற்கு தேவன் என்ன செய்தார்?

இஸ்ரவேலர் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று தேவசித்தத்திற்கு விரோதமாக விரும்பினர். இருப்பினும், அவர்கள் கேட்டதை தேவன் அவர்களுக்கு அருளிச்செய்தார் (பாடத்திட்டம்).

11. இஸ்ரவேலரின் முதல் ராஜா யார்? அவனுக்குப் பின் இஸ்ரவேலரை ஆண்ட இரண்டு ராஜாக்கள் யார்?

இஸ்ரவேலின் முதல் ராஜா சவுல். அவனுக்குப்பின் தாவீதும் சாலொமோனும் இஸ்ரவேலரை ஆட்சி செய்தனர் (பாடத்திட்டம்).

12. யாருடைய பின்மாற்றம் ராஜ்யத்தின்மீது நியாயத்தீர்ப்பைக் கொண்டு வந்தது? யாருடைய நாட்களில் ராஜ்யம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது?

சாலொமோனின் பின்மாற்றம் ராஜ்யத்தின்மீது நியாயத்தீர்ப்பைக் கொண்டுவந்தது. சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாமின் நாட்களில் ராஜ்யம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது (பாடத்திட்டம்).

13. இஸ்ரவேல் ராஜ்யம் பிரிக்கப்பட்டபோது யூதா ராஜ்யத்தில் இருந்த கோத்திரங்கள் எத்தனை? அவை யாவை? அதன் ராஜா யார்?

யூதா ராஜ்யத்தில் இரண்டு கோத்திரங்கள் இருந்தன. அவை : யூதா, பென்யமீன். அதன் ராஜா ரெகொபெயாம் (பாடத்திட்டம்).

14. இஸ்ரவேல் ராஜ்யம் பிரிக்கப்பட்டபோது இஸ்ரவேல் ராஜ்யத்தில் இருந்த கோத்திரங்கள் எத்தனை? அவை யாவை? அதன் ராஜா யார்?

இஸ்ரவேல் ராஜ்யத்தில் யூதா, பென்யமீன் கோத்திரங்களைத் தவிர்த்து மற்ற பத்து கோத்திரங்கள் இருந்தன. அதன் ராஜா யெரொபெயாம் (பாடத்திட்டம்).

15. யூதா ராஜ்யமும் இஸ்ரவேல் ராஜ்யமும் எவ்வாறு அழைக்கப்பட்டது?

யூதா ராஜ்யம் தெற்கத்திய ராஜ்யம் எனவும், இஸ்ரவேல் ராஜ்யம் வடக்கத்திய ராஜ்யம் எனவும் அழைக்கப்பட்டது (பாடத்திட்டம்).

## III <u>*சுருக்கமான விடையளி*</u>: (5 Marks)

1. சாலொமோன் ராஜாவின் பின்மாற்றத்தினால் ராஜ்யத்தில் ஏற்பட்ட மாற்றம் என்ன?

சாலொமோனின் பின்மாற்றம் ராஜ்யத்தின்மீது தேவனுடைய நியாத்தீர்ப்பைக் கொண்டு வந்தது. அவனுடைய குமாரனாகிய ரெகொபெயாமின் நாட்களில் ராஜ்யம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. யூதா, பென்யமீன் கோத்திரங்கள் சேர்ந்து யூதா ராஜ்ஜியமாயிற்று. ரெகொபெயாம் அதற்கு இராஜாவாயிருந்தான். மற்றப் பத்து கோத்திரங்களும் சேர்ந்து இஸ்ரவேல் ராஜ்யமாயிற்று; அதற்கு யெரொபெயாம் ராஜாவாயினான். யூதா இராஜ்யம்

தெற்கத்திய ராஜ்யம் எனவும், இஸ்ரவேல் ராஜ்யம் வடக்கத்திய ராஜ்யம் எனவும் அறியப்பட்டன (பாடத்திட்டம்).

## IV *விரிவான விடையளி :* (10 Marks)

**1.** இஸ்ரவேலரின் முதலாம் நியாயாதிபதி காலமுதல் இஸ்ரவேல் இராஜ்யம் இரண்டாகப் பிரியுமட்டுள்ள சரித்திரத்தை எழுது.

இஸ்ரவேலரின் முதலாம் நியாயாதிபதியாகிய ஒத்னியேலின் காலம் முதல், இராஜாவாகிய சவுலின் காலம் வரை (சுமார் 450 வருடங்கள்) இஸ்ரவேலரை பதின்மூன்று நியாயாதிபதிகள் ஆண்டனர். (அப். 13 : 20). இஸ்ரவேலர் தேவனுடைய கட்டளைகளைத் விட்டுவிட்டு, தங்களைச் சுற்றியிருந்த ஜாதிகளின் வழிகளில் நடந்தபோது, தேவன் அவர்களைச் சத்துருக்களின் கைகளில் ஒப்புக்கொடுத்தார்.ஆனால் அவர்கள் தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுக் கர்த்தரிடத்தில் திரும்பினபோது அவர் தமது இரக்கத்தினால் அவ்வப்போது ஒரு இரட்சகனை எழும்பப்பண்ணி, அவன்மூலம் அவர்களை ஜெயத்திற்கு வழிநடத்தினார்.கடைசி நியாயாதிபதியாகிய சாமுவேலின் நாட்களில், இஸ்ரவேலர், தாங்களும் மற்ற ஜாதிகளைப்போலிருக்கும்படியாக, தங்களை ஆளுகைச் செய்யவும், யுத்தத்தில் வழி நடத்தவும் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று விரும்பினார்கள்.ஆனால் தேவன் இஸ்ரவேலரை, பூமியிலுள்ள மற்றெல்லா ஜாதிகளைக்காட்டிலும் தமக்குச் சொந்த ஜனமாகவும், சுதந்தரமாகவும் தெரிந்தெடுத்தார் (1 இராஜா. 8 : 51). ஆகவே தேவன்தாமே அவர்களை ஆளுகைச் செய்ய விரும்பினார் (1 சாமு. 8 : 7).எனவே, இஸ்ரவேலர் தங்களுக்கு ஒரு ராஜா இருக்கவேண்டும் என்று விரும்பினது தேவசித்தத்திற்கு விரோதமானதாயிருந்தது. இருப்பினும் அவர்கள் கேட்டதை தேவன் அவர்களுக்கு அருளிச் செய்தார்.

சாமுவேலால் அபிஷேகஞ்செய்யப்பட்ட சவுலை தேவன் அவர்களுக்கு முதல் ராஜாவாகக் கொடுத்தார். அவனுக்குப்பின் தாவீதும், சாலொமோனும் இஸ்ரவேலரை ஆட்சி செய்தனர்.சாலொமோனின் பின்மாற்றம் ராஜ்யத்தின்மீது நியாயத்தீர்ப்பைக் கொண்டுவந்தது.அவனுடைய குமாரனாகிய ரெகோபெயாமின் நாட்களில் ராஜ்யம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. யூதா பென்யமீன் கோத்திரங்கள் சேர்ந்து யூதாராஜ்யமாயிற்று. ரெகோபெயாம் அதற்கு ராஜாவாயிருந்தான்.மற்ற பத்து கோத்திரங்களும் சேர்ந்து இஸ்ரவேல் ராஜ்யமாயிற்று. அதற்கு யெரோபெயாம் ராஜாவானான்.யுதா ராஜ்யம் தெற்கத்திய ராஜ்யம் எனவும், இஸ்ரவேல் ராஜ்யம் வடக்கத்திய ராஜ்யம் எனவும் அறியப்பட்டன. (பாடத்திட்டம்).

## V *விரிவாகவும் தெளிவாகவும் விடையளி:* (15 Marks)

**1.** ஆபிரகாமின் நாட்கள் முதல் ராஜ்யம் இரண்டாகப் பிரியும் காலம் வரையுள்ள இஸ்ரவேல் நாட்டின் வரலாற்றை விரிவாக எழுது.

1. இஸ்ரவேல் நாடு ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்த நாடாகும் (ஆதி. 15 : 18 - 21). அந்த நாட்டில் முப்பத்தொரு ராஜாக்களால் ஆளுகை செய்யப்பட்டு வந்த ஏழு ஜாதியினர் வசித்து வந்தனர் (உபா. 7 : 1; யோசுவா 12 : 8-24).
2. ஆபிரகாமுடைய பேரனாகிய, இஸ்ரவேல் என்று பெயர் மாற்றப்பட்ட யாக்கோபிக்கு இவ்வாக்குத்தத்த நாடு உறுதியாக்கப்பட்டது (ஆதி. 35 : 10 - 13). யாக்கோபுக்குப் பன்னிரண்டு குமாரர் இருந்தனர். அவர்களுடைய பிள்ளைகள் இஸ்ரவேலர் என்று அழைக்கப்பட்டனர்.
3. கானாவில் ஒரு கொடிய பஞ்சம் உண்டானபோது இஸ்ரவேல் புத்திரர் ஆகாரத்தைத் தேடி எகிப்துக்குப் போய் அங்கே குடியேறினர். பின் அவர்கள் நானூறு வருடங்கள் அடிமைத்தனத்திலிருந்தனர்.
4. அவர்களுடைய உபத்திரவங்களினிமித்தம் அவர்கள் இட்ட கூக்குரலைக் கர்த்தர் கேட்டு, தம் உடன்படிக்கையை நினைவு கூர்ந்தார் (யாத். 6 : 4, 5). அவர்களை அவர் மோசேயின் மூலம் எகிப்திலிருந்து விடுதலையாக்கினார் (யாத். 12 : 40, 41). அவர்கள் நாற்பது வருடங்கள் வனாந்தரத்தின் வழியாக நடத்தப்பட்டனர்.
5. மோசே மரித்தபின், யோசுவா அவர்களைக் கானானுக்குள் வழி நடத்தினான். அவர்கள் வாக்குத்தத்த நாட்டில் ஏழு ஜாதிகளையும் முப்பத்தொரு ராஜாக்களையும் ஜெயித்தார்கள். (உபா. 7 : 1; யோசுவா 12 : 8-24). யோசுவா சீட்டுப்போட்டு எல்லாக் கோத்திரங்களுக்கும் தேசத்தைப் பிரித்துக்கொடுத்தான்
6. இஸ்ரவேலரின் முதலாம் நியாயாதிபதியாகிய ஒத்னியேலின் காலம் முதல், இராஜாவாகிய சவுலின் காலம் வரை (சுமார் 450 வருடங்கள்) இஸ்ரவேலரை பதின்மூன்று நியாயாதிபதிகள் ஆண்டனர். (அப். 13 : 20). இஸ்ரவேலர் தேவனுடைய கட்டளைகளைத் விட்டுவிட்டு, தங்களைச் சுற்றியிருந்த ஜாதிகளின் வழிகளில் நடந்தபோது, தேவன் அவர்களைச் சத்துருக்களின் கைகளில் ஒப்புக்கொடுத்தார்.

7. ஆனால் அவர்கள் தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுக் கர்த்தரிடத்தில் திரும்பினபோது அவர் தமது இரக்கத்தினால் அவ்வப்போது ஒரு இரட்சகனை எழும்பப்பண்ணி, அவன்மூலம் அவர்களை ஜெயத்திற்கு வழிநடத்தினார்.
8. கடைசி நியாயாதிபதியாகிய சாமுவேலின் நாட்களில், இஸ்ரவேலர், தாங்களும் மற்ற ஜாதிகளைப்போலிருக்கும்படியாக, தங்களை ஆளுகைச் செய்யவும், யுத்தத்தில் வழி நடத்தவும் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று விரும்பினார்கள்.
9. ஆனால் தேவன் இஸ்ரவேலரை, பூமியிலுள்ள மற்றெல்லா ஜாதிகளைக்காட்டிலும் தமக்குச் சொந்த ஜனமாகவும், சுதந்தரமாகவும் தெரிந்தெடுத்தார் (1 இராஜா. 8 : 51). ஆகவே தேவன்தாமே அவர்களை ஆளுகைச் செய்ய விரும்பினார் (1 சாமு. 8 : 7).
10. எனவே, இஸ்ரவேலர் தங்களுக்கு ஒரு ராஜா இருக்கவேண்டும் என்று விரும்பினது தேவசித்தத்திற்கு விரோதமானதாயிருந்தது. இருப்பினும் அவர்கள் கேட்டதை தேவன் அவர்களுக்கு அருளிச் செய்தார்.
11. சாமுவேலால் அபிஷேகஞ்செய்யப்பட்ட சவுலை தேவன் அவர்களுக்கு முதல் ராஜாவாகக் கொடுத்தார். அவனுக்குப்பின் தாவீதும், சாலொமோனும் இஸ்ரவேலரை ஆட்சி செய்தனர்.
12. சாலொமோனின் பின்மாற்றம் ராஜ்யத்தின்மீது நியாயத்தீர்ப்பைக் கொண்டுவந்தது.
13. அவனுடைய குமாரனாகிய ரெகோபெயாமின் நாட்களில் ராஜ்யம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. யூதா பென்யமீன் கோத்திரங்கள் சேர்ந்து யூதாராஜ்யமாயிற்று. ரெகோபெயாம் அதற்கு ராஜாவாயிருந்தான்.
14. மற்ற பத்து கோத்திரங்களும் சேர்ந்து இஸ்ரவேல் ராஜ்யமாயிற்று. அதற்கு யெரோபெயாம் ராஜாவானான்.
15. யுதா ராஜ்யம் தெற்கத்திய ராஜ்யம் எனவும், இஸ்ரவேல் ராஜ்யம் வடக்கத்திய ராஜ்யம் எனவும் அறியப்பட்டன. (பாடத்திட்டம்).

**VI** *<u>போதனை :</u>* (2 Marks)

எல்லாவற்றிலும் நாம் தேவனுக்கு முதன்மையான இடத்தைக் கொடுத்து, நம் ஜீவியத்தை அவர் ஆளுகை செய்யும்படி அவரை ராஜாவாய் ஏற்றுக்கொள்ள வேண்டும். மாம்ச புயத்தின் மீது நாம் சார்ந்து கொள்ளக் கூடாது.

*******************

# இஸ்ரவேல் ராஜ்யம்

(பகுதி II)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

2 நாளா. 16 : 9.

"தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது; இந்த விஷயத்தில் மதியில்லாதவராயிருந்தீர்; ஆகையால் இதுமுதற்கொண்டு உமக்கு யுத்தங்கள் நேரிடும் என்றான்"

**II** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

**1.** யூதா ராஜ்யத்தின் கால வரம்பைக் குறிப்பிடுக. இக்காலவரம்பில் எத்தனை ராஜாக்கள் ஆண்டார்கள்?

யூதா ராஜ்யம் கி.மு. 975 முதல் கி.மு. 597 வரை இருந்தது. இக்கால வரம்பில் 20 ராஜாக்கள் ஆண்டார்கள் (பாடத்திட்டம்).

**2.** இஸ்ரவேல் ராஜயத்தின் கால வரம்பைக் குறிப்பிடுக. இக்கால வரம்பில் எத்தனை ராஜாக்கள் ஆண்டார்கள்?

இஸ்ரவேல் ராஜ்யம் கி.மு. 975 முதல் கி.மு. 730 வரை இருந்தது. இக்கால வரம்பில் 19 ராஜாக்கள் ஆண்டார்கள் (பாடத்திட்டம்).

**3.** யூதாவுக்கு விரோதமாக தேவனால் எழுப்பப்பட்ட ராஜா யார்? ஏன் எழுப்பினார்?

பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரை யூதாவுக்கு விரோதமாக தேவன் எழுப்பினார்.

யூதா, கர்த்தருடைய வழிகளில் நடவாமல் இருந்த இஸ்ரவேல் இராஜாக்களுடன் தோழமை கொண்டதால் யூதாவும்கூட கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்ய ஆரம்பித்தது. அப்போது தேவன் பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரை யூதாவுக்கு விரோதமாக எழுப்பினார் (பாடத்திட்டம்).

**4.** யூதா ஜனங்கள் எப்பொழுது பாபிலோனுக்கு சிறையாகக் கொண்டு போகப்பட்டனர்? அக்காலம்முதல், எருசலேம் எந்தெந்த ராஜாக்களின் ஆளுகையின்கீழ் இருந்தது?

யூதா ஜனங்கள், கி.மு. 586 - இல் பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டு போகப்பட்டனர் ( 2 இராஜா. 25 : 21). அக்காலம் முதல், எருசலேம் அடுத்தடுத்து பாபிலோன், மேதியா பெர்சியா, கிரேக்கு, ரோம் ஆகிய புறஜாதி ராஜாக்களின் ஆளுகையின் கீழ் வந்தது (பாடத்திட்டம்).

**5.** மகா ஏரோதுவினால் கட்டப்பட்ட ஆலயம் எப்பொழுது, யாரால் அழிக்கப்பட்டது?

மகா ஏரோதுவினால் கட்டப்பட்ட ஆலயம் கி.பி. 70 - ல், தீத்து இராயானால் அழிக்கப்பட்டது (பாடத்திட்டம்).

**6.** 'சீயோன் சங்கம்' என்னும் இயக்கம் எப்போது, யாரால் ஆரம்பிக்கப்பட்டது? இச்சங்கத்தின் நோக்கம் என்ன?

19-ம் நூற்றாண்டின் கடைசியில் தியோடர் ஹர்ஸெல் என்ற யூத வழக்கறிஞரால் 'சீயோன் சங்கம்' என்னும் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது (பாடத்திட்டம்).

'பலெஸ்தீனா யூதர்களுக்கு' என்பது இச்சங்கத்தின் நோக்கமாயிருந்தது (பாடத்திட்டம்).

**7.** டி.என்.டி கண்டுபிடித்து, யுத்தத்தில் ஆங்கிலேயர் ஜெயிக்க உதவிய செயிம்வேயிஸ்மேன் ஆங்கிலேயருக்கு முன்பாக வைத்த கோரிக்கை என்ன?

ஆங்கிலேயர் செயிம்வேயிஸ்மேனுக்கு வெகுமதிகளைக் கொடுக்க முன்வந்தபோது, அவரோ, அவற்றை வாங்க மறுத்து அதற்குப் பதிலாக பலெஸ்தீனா யூதர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டார (பாடத்திட்டம்).

**8.** பலெஸ்தீனா எப்போது சுதந்தர நாடாகப் பிரகடனம் செய்யப்பட்டு யூதருக்குக் கொடுக்கப்பட்டது?

இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னர் பலெஸ்தீனா சுதந்தர நாடாகப் பிரகடனம் செய்யப்பட்டு யூதருக்குக் கொடுக்கப்பட்டது (பாடத்திட்டம்).

9. உலகத்தின் இராஜ்யங்களுக்கெல்லாம் ராஜாதி ராஜாவாக இயேசு வெளிப்படுவார் என்பதைக் காட்டும் வசன ஆதாரங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
   எரே. 23 : 5
   எசே. 37 : 24
   சக. 14 : 9
   வெளி. 19 : 16

## III *சுருக்கமான விடையளி*: (5 Marks)

1. இஸ்ரவேலர் அசீரியாவிற்கு சிறையாகக் கொண்டு போகப்பட்டதன் காரணங்கள் யாவை? அவர்கள் சிறையாகக் கொண்டு போகப் பட்டபின் எங்கே குடியேற்றப்பட்டனர்?

   இஸ்ரவேல் ராஜாக்களும் ஜனங்களும் ஜீவனுள்ள தேவனை விட்டுவிட்டு, விக்கிரகங்களை வணங்கினர் ( 1 இராஜா. 22 : 52, 53). அவர்கள் தேவனுடைய பிரமாணங்களுக்கு மாறாக ஜீவித்தனர். ஓசெயா ராஜா அரசாண்ட காலத்தில் அசீரியா ராஜா இஸ்ரவேலருக்கு விரோதமாக வந்தான்.

   ஓசெயா அவனைச் சேவிக்கிறவனானான் ( 2 இராஜா. 17 : 3). வருஷந்தோறும் செய்ததுபோல, தனக்குப் பகுதி அனுப்பாதேபோன கலக ஆலோசனையை அசீரியா ராஜா ஓசெயாவினிடத்தில் கண்டு, சமாரியாவுக்குப் போய், அதை முற்றிக்கை போட்டான். அவன் இஸ்ரவேலரை அசீரியாவிற்குச் சிறையாகக் கொண்டுபோய், மேதியரின் இரு பட்டணங்களில் அவர்களைளக் குடியேற்றினான் (2 இராஜா. 17 : 4-6). இது கி.மு. 722 -வில் நடந்தது.

2. யூதா ராஜ்யம் பாபிலோனுக்கு சிறையாகக் கொண்டு போகப்பட்டதன் காரணம் என்ன? அதன்பின் எருசலேம் எந்தெந்த ராஜாக்களின் ஆளுகையின்கீழ் இருந்தது?

   யூதா ஜனங்கள், குறிப்பாக, கர்த்தருடைய வழிகளில் நடவாமலிருந்த இஸ்ரவேல் ராஜாக்களுடன் தோழமை கொண்ட காரணத்தால் யூதாவுங்கூட கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்ய ஆரம்பித்தது. அப்போது தேவன் பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரை யூதாவுக்கு விரோதமாக எழுப்பினார். அவனுடைய சேனை யூதா ராஜ்யத்திற்கு விரோதமாக வந்து, எருசலேமிலுள்ள தேவாலயத்தையும் அரண்மனையையும் அக்கினியால் சுட்டெரித்தது. யூதா ஜனங்கள், கி.மு. 586 - இல் பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டு போகப்பட்டனர் ( 2 இராஜா. 25 : 21). அக்காலம் முதல், எருசலேம் அடுத்தடுத்து பாபிலோன், மேதியா, பெர்சியா, கிரேக்கு, ரோம் ஆகிய புறஜாதி ராஜாக்களின் கீழ் வந்தது.

3. பலெஸ்தீனா எவ்விதம் யூதர்களுக்குக் கொடுக்கப்பட்டது?

   முதலாம் உலக யுத்தத்தில், ஆங்கிலேயர் ஜெர்மனியரால் தோற்கடிக்கப்படத்தக்க சூழ்நிலை ஏற்பட்டது. அப்பொழுது மான்செஸ்டரில் பணிபுரிந்து வந்த செயிம் வேயிஸ்மேன் என்னும் யூத வேதியியல் நிபுணர் டி.என்.டி என்னும் ஒரு இரசாயனத்தைக் கண்டுபிடித்தார். ஆங்கிலேயர் ஜெர்மனியரைத் தோற்கடிக்க இது உதவி செய்தது. ஆங்கிலேயர் இவருக்கு வெகுமதிளை கொடுக்க முன்வந்தபோது, அவரோ அவற்றை வாங்க மறுத்து அதற்குப் பதிலாக பலெஸ்தீனா யூதர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டார். ஆங்கிலேயர் 1917 - இல் துருக்கியரைத் தோற்கடித்து, பலெஸ்தீனாவை ஆண்டனர். இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னர், பலெஸ்தீனாவுக்கு சுதந்தரம் அளிக்கப்பட்டு யூதருக்குக் கொடுக்கப்பட்டது (பாடத்திட்டம்).

## IV *விரிவான விடையளி :* (10 Marks)

1. துருக்கியரின் ஆட்சியின் கீழ் இருந்த பலெஸ்தீனா எவ்வாறு சுதந்தர நாடாக பிரகடனம் செய்யப்பட்டு யூதர்களுக்கு கொடுக்கப்பட்டது என்பதைப் பற்றி விரிவாக எழுது.

   மகா ஏரோதுவினால் ரோம அரசாட்சியின் காலத்தில் கட்டப்பட்ட ஆவயம், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தீர்க்கதரிசனத்தில் நிறைவேறுதலாக (லூக்கா 19:44). கி.பி. 70 ஷ் ல் தீத்து இராயனால் அழிக்கப்பட்டது. கி.பி. 135 - இல் யூதர்கள் உவகத்தின் பல பகுதிகளுக்கும் சிதறடிக்கப்பட்டனர் (லூக்கா 21:24). சூராம இராஜ்யத்தின் ஆளுகைக்குப் பின்பு, பலெஸ்தீனா அநேக ஆட்சியாளர்களின் கைகளுக்கு மாறிப்போயிற்று.

   பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசியில் யூதர்களுக்குள்ளே ஒரு பெரிய விழிப்பு உண்டாயிற்று.தியோடர் ஹர்ஸெல் என்ற யூத வழக்கறிஞர் ‘சீயோன் சங்கம்’ என்னும் ஒரு

கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டார். ஆங்கிலேயர் 1917 - இல் துருக்கியரைத் தோற்கடித்து, பலெஸ்தீனாவை ஆண்டனர். இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னர், பலெஸ்தீனாவுக்கு சுதந்தரம் அளிக்கப்பட்டு யூதருக்குக் கொடுக்கப்பட்டது

இவ்விதம் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்த இராஜ்யம் எசேக்கியேல் 37:15-22 ல் கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசனத்தின்படியே மறுபடியும ஒன்றாக்கப்பட்டிருக்கிறது.இப்போது இஸ்ரவேல் இராஜ்யம் தோடர்ந்து ஜனாதிபதிகளால் ஆளப்பட்டு வருகிறது.வேத வசனங்கள் எவ்வளவு உண்மையானவை! சீக்கிரத்தில் நம்முடைய கர்த்ராகிய இயேசு தாமே பலெஸ்தீனாவிற்கு மாத்திரமல்ல, உலகத்தின் இராஜ்யங்களெல்லாம் இராஜாதி இராஜாவாக வெளிப்படுவார்( எரே 23: 5, எசே 37: 24,சகரி 14:9, வெளி 19:16).

**VI** *<u>போதனை :</u>* (2 Marks)

நாம் இஸ்ரவேல் புத்திரரைப் போலிராமல், கர்த்தருடைய வழிகள் எல்லாவற்றிலும் உத்தமமாய் நடந்து அவரோடு நாம் செய்திருக்கும் உடன்படிக்கையில் உறுதியுள்ளவர்களாயிருந்து அவரை விட்டுவிலகாதவாறு எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

*********

வகுப்பு :10

பாடம்-20

# இஸ்ரவேல் ராஜ்யம்

(பகுதி III)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

யாத்திராகமம் 19 : 5, 6

"இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது.

நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டிய வார்த்தைகள் என்றார்"

**II** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

**1.** கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரிடம், அவர்கள் அவருடைய வாக்கைக் கேட்டு, அவருடைய உடன்படிக்கையைக் கைக்கொண்டால், அவர்கள் கர்த்தருக்கு எவ்விதமாக இருப்பார்கள் என்று உடன்படிக்கை பண்ணினார்?

அவர்கள் அவருக்கு ஆசாரிய ராஜ்யமும், பரிசுத்த ஜாதியாயும், பூமியிலுள்ள சகல ஜனங்களிலும் அவருக்குச் சொந்த சம்பத்தாயும் இருப்பார்கள் என்று உடன்படிக்கை பண்ணினார் (யாத். 19 : 5, 6).

**2.** இஸ்ரவேலர் பலெஸ்தீனாவிற்குத் திரும்புவதைக் குறித்த தீர்க்கதரிசன வசனத்தையும் அதன் நிறைவேறுதலையும் எழுது.

<u>தீர்க்கதரிசனம்</u> : எசே. 11 : 16, 17

<u>நிறைவேறுதல்</u> : 1919 - ஆம் வருடம், பால்ஃபர் பிரகடனத்தின் மூலம், யூத ஜனங்களுக்கு பலெஸ்தீனா தாய்நாடாக ஸ்தாபிக்கப்படும் என்று வாக்களிக்கப்கட்டது. ரோம ஆட்சிக்குப் பின்னர் யூதர்கள் மறுபடியும் ஒரு தேசமாக அங்கீகரிக்கப்பட்டது இதுவே முதல் முறையாகும் (பாடத்திட்டம்).

**3.** யூதர்கள் எப்பொழுது ஹிட்லரின் மூலம் மிகுதியான உபத்திரவங்களுக்குள்ளாக்கப்பட்டனர்?

அரேபியர் யூதர்களின் குடியேறுதலை ஆட்சேபித்து 1920 -ஆம் வருடத்திற்கும் 1930 -ஆம் வருடத்திற்கும் இடையில் யூத குடியேற்றங்களை அநேகமுறை தாக்கினார்கள். அதில் அநேக யூதர்கள் கொல்லப்பட்டனர். அதன்பின்னர் யூதர்கள் ஹிட்லரின் மூலம் மிகுதியான உபத்திரவத்தினூடாகக் கடந்து சென்றனர் பல இலட்சக்கணக்கான யூதர்கள் உயிர் இழந்தனர் (பாடத்திட்டம்).

**4.** இஸ்ரவேலர் அரேபியர்களை எந்த யுத்தத்தில் முற்றிலும் தோற்கடித்தார்கள்? அந்த யுத்தம் நடந்த ஆண்டு எது?

1967 - ல் அரேபிய நாடுயளுக்கு விரோதமாக நடந்த ஆறுநாள் யுத்தத்தில் இஸ்ரவேலர் அரேபியர்களை முற்றிலும் தோற்கடித்தார்கள் (பாடத்திட்டம்).

**III** *சுருக்கமான விடையளி*: (5 Marks)

**1.** தேவன் ஏன் இஸ்ரவேல் புத்திரரை சிறைபிடிக்கப்படவும், சிதறடிக்கப்பட்டுப் போகவும் இடங்கொடுத்தார்?

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரிடம், அவர்கள் அவருடைய வாக்கைக் கேட்டு, அவருடைய உடன்படிக்கையைக் கைக்கொண்டால், அவர்கள் ஆசாரிய இராஜ்யமும், பரிசுத்த ஜாதியாயும் பூமியில் உள்ள சகல ஜனங்களிலும் அவருக்கு சொந்த சம்பத்தாயும் இருப்பார்கள் என்று கூறி, அவர்களுடன் உடன்படிக்கை செய்திருந்தார் (யாத். 19 : 5, 6). ஆனால் அவர்கள் இந்த உடன்படிக்கைக்கு உண்மையற்றவர்களாய்ப்போய், ஜீவனுள்ள தேவனைவிட்டு, விக்கிரகங்களுக்கும், தேசத்திலிருந்து அவர் துரத்திவிட்டிருந்த ஜாதிகளின் அருவருப்புகளுக்கும் நேரே திரும்பினபோது அவர்கள் சிறைபிடிக்கப்படவும் உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் சிதறடிக்கப்பட்டுப் போகவும் தேவன் இடங்கொடுத்தார்.

2. இஸ்ரவேலர் ஜீவனுள்ள தேவனுடைய சேனையாக கூட்டிச் சேர்க்கப்பட்டதைக் குறித்த தீர்க்கதரிசனத்தையும், அதன் நிறைவேறுதலையும் எழுது.

<u>தீர்க்கதரிசனம்</u> : எசே. 37 : 10, 11; சக. 12 : 3

<u>நிறைவேறுதல்</u> : அரேபியர் யூதர்களின் குடியேறுதலை ஆட்சேபித்து 1920 -ஆம் வருடத்திற்கும் 1930 -ஆம் வருடத்திற்கும் இடையில் யூத குடியேற்றங்களை அநேகமுறை தாக்கினார்கள். அதில் அநேக யூதர்கள் கொல்லப்பட்டனர். அதன்பின்னர் யூதர்கள் ஹிட்லரின் மூலம் மிகுதியான உபத்திரவத்தினூடாகக் கடந்து சென்றனர் பல இலட்சக்கணக்கான யூதர்கள் உயிர் இழந்தனர்.இவ்விரு சந்தர்ப்பங்களிலும் அவர்கள் தங்களுக்கென தற்காப்புக்கான அமைப்புகளை அமைத்துக் கொண்டார்கள். 1948 - இல் அது இஸ்ரவேலரின் பாதுகாப்புப் படையாயிற்று. ஒரு வருடத்திற்குள்ளாக, அது கூட்டுச் சேர்ந்த அரேபிய சேனைகளைத் தோற்கடித்து, அன்று முதல் இன்றுவரை, அது ஒருவராலும் தாக்கி வெல்ல முடியாத சேனையாகவும், அதை எதிர்க்கிற ராஜ்யங்களுக்கெல்லாம் ஒரு பாரமான கல்லாகவும் இருக்கிறது.

1967 - இல் அரேபிய நாடுகளுக்கு விரோதமாக நடந்த ஆறு நாள் யுத்தத்தில், இஸ்ரவேலர் அவர்களை முற்றிலும் தோற்கடித்தார்கள். தேவன் இஸ்ரவேலருக்காக யுத்தத்தில் விசேஷித்த அற்புதங்களைச் செய்தார்.

3. தானியேல் முன்னுரைத்த எழுபதாவது அல்லது கடைசி வாரத்தின் முக்கிய சம்பவங்களை எழுது.

*i)* ஏழுவருட உடன்படிக்கை அந்திக்கிறிஸ்துவினால் (சிறிய கொம்பினால்) செய்யப்படுகிறது (தானி. 7 : 8; 9 : 27).

*ii)* அந்த வாரத்தின் பாதியில், அந்திக்கிறிஸ்து , பரிசுத்த ஸ்தலத்தைப் 'பாழாக்கும் அருவருப்புகளைப் புகுத்தி', யூதருடைய ஆராதனையை வலுக்கட்டாயமாய்த் தடை செய்கிறான்.

*iii)* அந்திக்கிறிஸ்து யூதர்களை உபத்திரவப்படுத்துகிறான் (2 தெச. 2 : 4).

*iv)* எழுபதாவது வாரத்தின் முடிவு அந்திக்கிறிஸ்துவுக்கு நியாயத்தீர்ப்பைக் கொண்டுவருகிறது. அதே சமயத்தில், ஆயிர வருட அரசாட்சி துவங்குவதால், அது நித்திய நீதியையும் கொண்டு வருகிறது ( தானி. 9 : 24). எழுபதாவது வாரம் இன்னமும் துவங்கவில்லை.

4. இஸ்ரவேலரின் குருட்டாட்டத்தைக் குறித்த தீர்க்கதரிசனத்தையும் அதன் நிறைவேறுதலையும் எழுது.

<u>தீர்க்கதரிசனம்</u> : ஏசாயா 6 : 9 - 12; 29 : 10 - 14

<u>நிறைவேறுதல்</u> : (ரோமர் 11 : 25) - மேசியாவின் வருகையைப் பற்றி வேதாகமத்தில் கூறப்பட்டிருந்த அநேக தீர்க்கதரிசனங்களை யூதர்கள் அறிந்திருந்தனர். இருப்பினும், இத் தீர்க்கதரிசனங்களின் பூரண நிறைவேறுதலாக கர்த்தராகிய இயேசு வந்தபோது, அவர்கள் அவரைப் பகைத்து, அவரைப் புறக்கணித்து தள்ளினர். ஏனெனில் அவர் அவர்கள் விருப்பத்திற்கு அல்லது எதிர்பார்ப்புக்கு ஏற்றவறாகக் காணப்படவில்லை. அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மேசியாவாக அவர்களால் அவரைக் காண முடியவில்லை. புறஜாதிகளின் நிறைவு உண்டாகும் வரை யூதரின் இக்குருட்டாட்டம் தொடர்ந்திருக்கும் ; அதன்பின்னர், தாங்கள் குத்தினவரை நோக்கிப் பார்க்கும்படி அவர்களுடைய கண்கள் திறக்கப்படும்.

5. இஸ்ரவேலரின் விழிப்பைக் குறித்த தீர்க்கதரிசனத்தையும் அதன் நிறைவேறுதலையும் எழுது.

<u>தீர்க்கதரிசனம்</u> : சக. 12 : 10

<u>நிறைவேறுதல்</u> : (வெளி. 1 : 7; மத். 24 : 29 - 31) - ஏழு வருட உபத்திரவத்தின் முதல் மூன்றரை வருடத்தின் முடிவில் உபத்திரவ கால இரத்த சாட்சிகளைச் சேர்க்கும்படி கர்த்தராகிய இயேசு, மேகங்களில் வெளிப்படும்போது, தாங்கள் குத்தினவரை நோக்கிப் பார்க்கும்படியாக யூதர்களின் கண்கள் திறக்கப்பட்டு, அவரைத் தங்கள் மேசியாவாக அங்கீகரிப்பார்கள். எல்லாக் கோத்திரத்தார் மீதும் தேவன் கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவார்; அவர்கள் அவருக்காகத் துக்கிப்பார்கள்.

6. 1,44,000 யூதர்களின் சுத்திகரிப்பையும், ஆயிர வருட அரசாட்சியில் ஆலயத்தைத் திரும்பவும் பெற்றுக் கொள்ளுதலையும் குறித்த தீர்க்கதரிசனத்தையும் அதன் நிறைவேறுதலையும் எழுது.

<u>தீர்க்கதரிசனம்</u> : சக. 13 : 8, 9, எசே 37:22-28

<u>நிறைவேறுதல்</u> : கிருபையின் ஆவி, விண்ணப்பங்களின் ஆவி இவற்றின் மூலம் உண்டான உணர்வினாலும், தாங்கள் குத்தினவரைத் தரிசித்ததினாலும், இரு சாட்சிகளின் தீர்க்கதரிசன ஊழியத்தினாலும், உபத்திரவத்தின் அக்கினியிளாலும், 1,44,000 யூதர்கள் தங்கள்

சகல அசுத்தங்களும் அருவருப்புகளும் நீங்க சுத்திகரிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுடைய ஜனங்கள் என அழைக்கப்படத் தகுதியாகின்றனர். ஆயிர வருட அரசாட்சி துவங்கும்போது, அவர்களுக்கு ஆராதனை செய்வதற்கு ஒரு ஆலயம் உண்டாயிருக்கும். தேவன் அவர்கள் மத்தியில் அவர்கள் தேவனாக வாசஞ்செய்வார்.

**IV** *விரிவான விடையளி :* (10 Marks)

**1.** தானியேல் முன்னுரைத்த எழுபது வாரங்களைக் குறித்த தீர்க்கதரிசனத்தையும், அதன் நிறைவேறுதலையும், எழுபதாவது வாரத்தின் முக்கிய சம்பவங்களையும் விவரித்து எழுது.

தீர்க்கதரிசனம் : தானி. 9 : 24 - 27

நிறைவேறுதல் : எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவது முதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் (தானி. 9 : 25) எண்ணப்பட்ட எழுபது வாரங்களைக் குறித்துத் தானியேலில் நாம் வாசிக்கிறோம். நகரத்தையும் அதின் மதில்களையும் மறுபடியும் கட்டுவதற்கான இந்த சட்டபூர்வமான கட்டளை வேதத்தில் நெகேமியா 2 : 5, 6 - இல் எழுதப்பட்டுள்ளது. கட்டளை வெளிப்பட்டபோது எழுபது வாரக்காலம் துவங்கி அது ஏழு வருட உபத்திரவ காலத்தோடு முடிவடையும். 69 - வாரங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து வந்தன. ஆனால் கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையோடு ஆரம்பமாகிற எழுபதாவது வாரமோ இனி வருகிறதாய் இருக்கிறது. அது 69 - ஆவது வாரத்தை உடனடியாகத் தொடர்ந்து வருவதில்லை. நாம் இப்போது அறுபத்தொன்பதாம், எழுபதாம் வாரங்களுக்கு இடையிலுள்ள காலத்தில் வசிக்கிறோம். மறுவார்த்தைகளில் சொன்னால், அது சபையின் காலம் என்றும் அழைக்கப்படுகிறது. தானியேலுக்குச் சபையின் காலத்தைப் பற்றி எவ்வித வெளிப்படுத்துதலும் இருந்ததில்லை என்பது வெளிப்படை. இந்தத் தீர்க்கதரிசனத்தில் ஒரு வாரம் என்பது ஏழு நாட்களை அல்ல, ஏழு வருடங்களையே குறிக்கிறது என்பது தெளிவு.

a) மேசியா சங்கரிக்கப்படுவார் - கர்த்தராகிய இயேசுவின் மரணம் (மத். 27 : 50).
b) மறுபடியும் கட்டப்பட்ட பரிசுத்த ஸ்தலம், வரப்போகிற பிரபுவின் ஜனங்களால் அழிக்கப்படும் - ஏரோதின் ஆலயம் கி.பி. 70 - இல் தீத்து ராயனால் அழிக்கப்பட்டது (தானி. 9 : 26)

எழுபதாவது அல்லது கடைசி வாரத்தின் முக்கிய சம்பவங்கள் :

*i)* ஏழுவருட உடன்படிக்கை அந்திக்கிறிஸ்துவினால் (சிறிய கொம்பினால்) செய்யப்படுகிறது (தானி. 7 : 8; 9 : 27).
*ii)* அந்த வாரத்தின் பாதியில், அந்திக்கிறிஸ்து , பரிசுத்த ஸ்தலத்தைப் 'பாழாக்கும் அருவருப்புகளைப் புகுத்தி', யூதருடைய ஆராதனையை வலுக்கட்டாயமாய்த் தடை செய்கிறான்.
*iii)* அந்திக்கிறிஸ்து யூதர்களை உபத்திரவப்படுத்துகிறான் (2 தெச. 2 : 4).
*iv)* எழுபதாவது வாரத்தின் முடிவு அந்திக்கிறிஸ்துவுக்கு நியாயத்தீர்ப்பைக் கொண்டுவருகிறது. அதே சமயத்தில், ஆயிர வருட அரசாட்சி துவங்குவதால், அது நித்திய நீதியையும் கொண்டு வருகிறது ( தானி. 9 : 24). எழுபதாவது வாரம் இன்னமும் துவங்கவில்லை.

**V** *விரிவாகவும் தெளிவாகவும் விடையளி:* (15 Marks)

**1.** இஸ்ரவேலர் எழுத்தின்படியான இராஜ்யத்தைத் திரும்பப் பெறுதலைப் பற்றிய தீர்க்கதரிசனங்களையும், அவற்றின் நிறைவேறுதல்களையும் பற்றி விரிவாக எழுது.

1. இஸ்ரவேலர் பலெஸ்தீனாவிற்குத் திரும்புதல் :

தீர்க்கதரிசனம் : எசே. 11 : 16, 17

நிறைவேறுதல் : 1919 - ஆம் வருடம், பால்ஃபர் பிரகடனத்தின் மூலம், யூத ஜனங்களுக்கு பலெஸ்தீனா தாய்நாடாக ஸ்தாபிக்கப்படும் என்று வாக்களிக்கப்கட்டது. ரோம ஆட்சிக்குப் பின்னர் யூதர்கள் மறுபடியும் ஒரு தேசமாக அங்கீகரிக்கப்பட்டது இதுவே முதல் முறையாகும் (பாடத்திட்டம்).

2. இஸ்ரவேலர் ஜீவனுள்ள தேவனுடைய சேனையாக கூட்டிச் சேர்க்கப்பட்டது:

தீர்க்கதரிசனம் : எசே. 37 : 10, 11; சக. 12 : 3

நிறைவேறுதல் : அரேபியர் யூதர்களின் குடியேறுதலை ஆட்சேபித்து 1920 - ஆம் வருடத்திற்கும் 1930 -ஆம் வருடத்திற்கும் இடையில் யூத குடியேற்றங்களை அநேகமுறை தாக்கினார்கள். அதில் அநேக யூதர்கள் கொல்லப்பட்டனர். அதன்பின்னர்

யூதர்கள் ஹிட்லரின் முலம் மிகுதியான உபத்திரவத்தினூடாகக் கடந்து சென்றனர் பல இலட்சக்கணக்கான யூதர்கள் உயிர் இழந்தனர்.இவ்விரு சந்தர்ப்பங்களிலும் அவர்கள் தங்களுக்கென தற்காப்புக்கான அமைப்புகளை அமைத்துக் கொண்டார்கள். 1948 - இல் அது இஸ்ரவேலரின் பாதுகாப்புப் படையாயிற்று. ஒரு வருடத்திற்குள்ளாக, அது கூட்டுச் சேர்ந்த அரேபிய சேனைகளைத் தோற்கடித்து, அன்று முதல் இன்றுவரை, அது ஒருவராலும் தாக்கி வெல்ல முடியாத சேனையாகவும், அதை எதிர்க்கிற ராஜ்யங்களுக்கெல்லாம் ஒரு பாரமான கல்லாகவும் இருக்கிறது.

1967 - இல் அரேபிய நாடுகளுக்கு விரோதமாக நடந்த ஆறு நாள் யுத்தத்தில், இஸ்ரவேலர் அவர்களை முற்றிலும் தோற்கடித்தார்கள். தேவன் இஸ்ரவேலருக்காக யுத்தத்தில் விசேஷித்த அற்புதங்களைச் செய்தார்.

3. <u>தானியேல் முன்னுரைத்த எழுபது வாரங்கள்</u>:

<u>தீர்க்கதரிசனம்</u> : தானி. 9 : 24 - 27

<u>நிறைவேறுதல்</u> : எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவது முதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் (தானி. 9 : 25) எண்ணப்பட்ட எழுபது வாரங்களைக் குறித்துத் தானியேலில் நாம் வாசிக்கிறோம். நகரத்தையும் அதின் மதில்களையும் மறுபடியும் கட்டுவதற்கான இந்த சட்டபூர்வமான கட்டளை வேதத்தில் நெகேமியா 2 : 5, 6 - இல் எழுதப்பட்டுள்ளது. கட்டளை வெளிப்பட்டபோது எழுபது வாரக்காலம் துவங்கி அது ஏழு வருட உபத்திரவ காலத்தோடு முடிவடையும். 69 - வாரங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து வந்தன. ஆனால் கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையோடு ஆரம்பமாகிற எழுபதாவது வாரமோ இனி வருகிறதாய் இருக்கிறது. அது 69 - ஆவது வாரத்தை உடனடியாகத் தொடர்ந்து வருவதில்லை. நாம் இப்போது அறுபத்தொன்பதாம், எழுபதாம் வாரங்களுக்கு இடையிலுள்ள காலத்தில் வசிக்கிறோம். மறுவார்த்தைகளில் சொன்னால், அது சபையின் காலம் என்றும் அழைக்கப்படுகிறது. தானியேலுக்குச் சபையின் காலத்தைப் பற்றி எவ்வித வெளிப்படுத்துதலும் இருந்ததில்லை என்பது வெளிப்படை. இந்தத் தீர்க்கதரிசனத்தில் ஒரு வாரம் என்பது ஏழு நாட்களை அல்ல, ஏழு வருடங்களையே குறிக்கிறது என்பது தெளிவு.

a) மேசியா சங்கரிக்கப்படுவார் - கர்த்தராகிய இயேசுவின் மரணம் (மத்.27: 50).
b) மறுபடியும் கட்டப்பட்ட பரிசுத்த ஸ்தலம், வரப்போகிற பிரபுவின் ஜனங்களால் அழிக்கப்படும் - ஏரோதின் ஆலயம் கி.பி. 70 - இல் தீத்து ராயனால் அழிக்கப்பட்டது (தானி. 9 : 26)

<u>எழுபதாவது அல்லது கடைசி வாரத்தின் முக்கிய சம்பவங்கள் :</u>

*i)* ஏழுவருட உடன்படிக்கை அந்திக்கிறிஸ்துவினால் (சிறிய கொம்பினால்) செய்யப்படுகிறது (தானி. 7 : 8; 9 : 27).
*ii)* அந்த வாரத்தின் பாதியில், அந்திக்கிறிஸ்து , பரிசுத்த ஸ்தலத்தைப் 'பாழாக்கும் அருவருப்புகளைப் புகுத்தி', யூதருடைய ஆராதனையை வலுக்கட்டாயமாய்த் தடை செய்கிறான்.
*iii)* அந்திக்கிறிஸ்து யூதர்களை உபத்திரவப்படுத்துகிறான் (2 தெச. 2 : 4).
*iv)* எழுபதாவது வாரத்தின் முடிவு அந்திக்கிறிஸ்துவுக்கு நியாயத்தீர்ப்பைக் கொண்டுவருகிறது. அதே சமயத்தில், ஆயிர வருட அரசாட்சி துவங்குவதால், அது நித்திய நீதியையும் கொண்டு வருகிறது ( தானி. 9 : 24). எழுபதாவது வாரம் இன்னமும் துவங்கவில்லை.

4. பன்னிரண்டு கோத்திரங்களும் ஒரே இராஜ்யமாகுதல் :

<u>தீர்க்கதரிசனம்</u> : எசே. 37 : 15 - 22

<u>நிறைவேறுதல்</u> : சிதறுண்டுபோன கோத்திரங்களில் பத்துக் கோத்திரத்தார் அழிந்து போயினர் என்று பொதுவாக நம்பப்படுகிறது. ஆனால் அசீரிய சிறையிருப்புக்குள் போன கோத்திரத்தார், பால்ஃபர் பிரகடனத்துடன் யூதா, பென்யமீன் ஆகிய இரு கோத்திரத்தாருடனும் திரும்பி வர ஆரம்பித்தனர். இவ்விதம் எல்லா யூதரும், இஸ்ரவேல் என்னும் ஒரே சுதந்தர நாடாயினர்.

**2.** இஸ்ரவேலரின் ஆவிக்குரிய எழுப்புதலைப் பற்றிய தீர்க்கதரிசனங்களையும், அவற்றின் நிறைவேறுதல்களையும் பற்றி விரிவாக எழுது.

1. <u>இஸ்ரவேலரின் குருட்டாட்டம்</u>:

<u>தீர்க்கதரிசனம்</u> : ஏசாயா 6 : 9 - 12; 29 : 10 - 14

<u>நிறைவேறுதல்</u> : (ரோமர் 11 : 25) - மேசியாவின் வருகையைப் பற்றி வேதாகமத்தில் கூறப்பட்டிருந்த அநேக தீர்க்கதரிசனங்களை யூதர்கள் அறிந்திருந்தனர். இருப்பினும், இத் தீர்க்கதரிசனங்களின் பூரண நிறைவேறுதலாக கர்த்தராகிய இயேசு வந்தபோது, அவர்கள் அவரைப் பகைத்து, அவரைப் புறக்கணித்து தள்ளினர். ஏனெனில் அவர் அவர்கள் விருப்பத்திற்கு அல்லது எதிர்பார்ப்புக்கு ஏற்றவறாகக் காணப்படவில்லை. அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மேசியாவாக அவர்களால் அவரைக் காண முடியவில்லை. புறஜாதிகளின் நிறைவு உண்டாகும் வரை யூதரின் இக்குருட்டாட்டம் தொடர்ந்திருக்கும் ; அதன்பின்னர், தாங்கள் குத்தினவரை நோக்கிப் பார்க்கும்படி அவர்களுடைய கண்கள் திறக்கப்படும்.

2. <u>இஸ்ரவேலரின் விழிப்பு:</u>

<u>தீர்க்கதரிசனம்</u> : சக. 12 : 10

<u>நிறைவேறுதல்</u> : (வெளி. 1 : 7; மத். 24 : 29 - 31) - ஏழு வருட உபத்திரவத்தின் முதல் மூன்றரை வருடத்தின் முடிவில் உபத்திரவ கால இரத்த சாட்சிகளைச் சேர்க்கும்படி கர்த்தராகிய இயேசு, மேகங்களில் வெளிப்படும்போது, தாங்கள் குத்தினவரை நோக்கிப் பார்க்கும்படியாக யூதர்களின் கண்கள் திறக்கப்பட்டு, அவரைத் தங்கள் மேசியாவாக அங்கீகரிப்பார்கள். எல்லாக் கோத்திரத்தார் மீதும் தேவன் கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவார்; அவர்கள் அவருக்காகத் துக்கிப்பார்கள்.

3. <u>1,44,000 யூதர்களின் சுத்திகரிப்பையும், ஆயிர வருட அரசாட்சியில் ஆலயத்தைத் திரும்பவும் பெற்றுக்கொள்ளுதலும்</u> :

<u>தீர்க்கதரிசனம்</u> : சக. 13 : 8, 9, எசே 37:22-28

<u>நிறைவேறுதல்</u> : கிருபையின் ஆவி, விண்ணப்பங்களின் ஆவி இவற்றின் மூலம் உண்டான உணர்வினாலும், தாங்கள் குத்தினவரைத் தரிசித்ததினாலும், இரு சாட்சிகளின் தீர்க்கதரிசன ஊழியத்தினாலும், உபத்திரவத்தின் அக்கினியினாலும், 1,44,000 யூதர்கள் தங்கள் சகல அசுத்தங்களும் அருவருப்புகளும் நீங்க சுத்திகரிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுடைய ஜனங்கள் என அழைக்கப்படத் தகுதியாகின்றனர். ஆயிர வருட அரசாட்சி துவங்கும்போது, அவர்களுக்கு ஆராதனை செய்வதற்கு ஒரு ஆலயம் உண்டாயிருக்கும். தேவன் அவர்கள் மத்தியில் அவர்கள் தேவனாக வாசஞ்செய்வார்.

**VI** *<u>போதனை :</u>* (2 Marks)

இஸ்ரவேலரைக் குறித்த தீர்க்கதரிசனங்ளையெல்லாம் தேவன் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். அவர் நமக்குக் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தங்கள் யாவும்கூட கிறிஸ்து இயேசுவுக்குள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கின்றன. எனவே, நாம் விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் தேவனுடைய வாக்குத்தத்தங்களைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுவோமாக.

**********